பேசும் படம்

மே 1956 • 12 அணா

மே 18உ முதல் தமிழ் நாடெங்கும்

ஸாதனாவின்

சந்தானம்

தமிழ்

டைரக்ஷன்...... C.V. ரெங்கனாததாஸ்

மேற்பார்வை..... பிரஸாத்..

ஸ்டுடியோ
வாஹினி

வடநாடெங்கும் இப்பொழுது வெற்றிகரமாக நடைபெறுகிறது!

நடிகர்கள் : அசோக்குமார், கிஷோர் குமார், நிம்மி, நிருபா ராய், ஷ்யாமா, டேவிட், ஓம்பிரகாஷ், பேபி ரூப் குமார்.

மே 11-ம் தேதி முதல்

சென்னை—பிளாஸா; விஜயவாடா—ஷீஷ்மஹால்; பெங்களூர்—மெஜஸ்டிக்; செகந்திராபாத்—அஜந்தா; ஹைதராபாத்—பிரபாத்.

மே 11-ந் தேதி முதல் சென்னை ஸ்ரீ கிருஷ்ணா, வெலிங்டன் & உமா தியேட்டர்களில் ஆரம்பம்.

Ro 2:1N42·P
NS 14·9

படம் 14

காட்சி 9

பேசும்படம்

★ மே 1956 ★

பொருளடக்கம்

		பக்கம்
1.	செய்திச் சுருள் ...	4
2.	அஷ்டாவதானம் ...	9
3.	ஆடை அலங்காரம் (மூவர்ணப்பட அனுபந்தம்) ...	17
4.	சௌகார் ஜானகி (வாழ்க்கை சித்திரம்) ...	25
5.	அயன் ஸ்திரீ பார்ட் ...	31
6.	பிரஸாத்துக்குப் பாராட்டு ...	34
7.	எனது முதல் அனுபவம் ...	36
8.	வட இந்திய வெள்ளித்திரை ...	39
9.	ஸ்டுடியோ விஜயம் ...	43
10.	ஸ்டண்ட் மாஸ்டர்கள் ...	53
11.	இருவர்ணப் பட அனுபந்தம் ...	57
12.	அந்த ஒரு நாள் (புது அம்சம்) ...	65
13.	தபால் பெட்டி ...	70
14.	வெட்டுங்கள் வெட்டுங்கள் ...	75
15.	நான் ரஸித்த காட்சி ...	77
16.	மதுரை வீரன் (திரைக்கதை, வசனம்) ...	81
17.	கேள்வி பதில் ...	92
18.	படக் காட்சிகள் ...	97

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 17, General Patters Road, Madras-2. (PHONE: 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor: T.V. Ramanath. Sole Agents for Ceylon: Mohan & Co. Ltd., 74, Dam Street, Colombo and Grand Bazaar, Jaffna. Sole Agent for Malaya: P. Sivaguru, 27, Scott Road, Kuala Lumpur; 8, China Street, Penang and 3, Kerbau Road, Singapore.

Editorial & Publication Offices:

17, General Patters Road, Madras - 2.

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

செய்திச் சுருள்

மாயமோகினி

ஜூன் மாதம் முதல் தேதி யன்று தமிழ் நாடெங்கும் 'மாயமோகினி' படம் திரைக்கு வரப்போகிறது. 'ஹாதிம் தாய்' என்ற பெயரில் பம்பாய் வாடியா மூவிடோன் தயாரித்த ஹிந்திப்படத்தின் தமிழ்ப்பதிப்பு இது. தமிழில் இப் படத்தை ரத்னா பிக்சர்ஸார் வெளியிடப்போகிறார்கள். 'மாய மோகினி' அராபிக் கதைகளில் ஒன்றாகும். முழு நீள கேவா கலர்ப் படமான இதில் மயிர்க்கூச்செறியும் படியான சம்பவங்களும், அற்புதமான நடனங்களும், அதிசயிக்கத் தக்க பல தந்திரக்காட்சிகளும் நிறைந்திருக்கின்றன. ஜெயராஜ், ஷகிலா மற்றும் பல முன்னணி வட இந்திய நக்ஷத்திரங்கள் இதில் நடித்திருக்கிறார்கள்.

வேடன் கண்ணப்பா

பண்டரிபாய், ராஜசுலோசனா, சந்தியா, ராஜகுமார் முதலியோர் நடித்திருக்கும் 'வேடன் கண்ணப்பா' தமிழ்ப்படம் சென்ற மாதம் திரையிடப்பட்டிருக்கிறது. கன்னடத்திலிருந்து தமிழில் 'டப்' செய்யப்பட்டிருக்கும் படம் இது. தமிழில் இதைத் தயாரித்திருப்பவர்கள் சதர்ன் மூவிஸ் ஸ்தாபனத்தார்.

எல்லாம் அவன் செயல்!

ஹாஸ்ய நடிகரான டி. எஸ். துரைராஜ் சொந்தத்தில் ஒரு படத்தைத் தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்து வருகிறார். மரகதா பிக்சர்ஸ் என்று அவர் நிறுவியுள்ள படக்கம்பெனியின் சார்பில் இப்படம் தயாரிக்கப்படும். எஸ். பாலசந்தர் இப்படத்தை டைரக்ட் செய்வதற்கு ஒப்பந்தமாகியிருக்கிறார். சாவித்திரி இப் படத்தின் பிரதமபாகத்தில் நடிப்பார். 'எல்லாம் அவன் செயல்!' என்பது படத்தின் பெயராகும். சமூக கதையான இதில் தயாரிப்பாளரான துரைராஜூம் ஒரு சிறு பாத்திரத்தில் நடிப்பார்.

ரங்காவின் 'மார்க்கண்டேயன்'

'தெனாலிராம'னை வெளியிட்டிருக்கும் டைரக்டர் பி. எஸ். ரங்கா எமனையும் வென்று சாகா வரம் பெற்ற மார்க்கண்டேயனின் வரலாற்றை அடுத்ததாகத் தயாரிக்கப் போகிறார். நிஜ வாழ்க்கையில் தாயும்–மகனுமான 'சம்சாரம்' புகழ் புஷ்பவல்லி–அவரது மகன் பாபுஜி இருவரும் இதில் முறையே மார்க்கண்டேயனின் தாயாகவும், மார்க்கண்டேயனாகவும் நடிப்பார்கள் என்று தெரிகிறது. தமிழ், தெலுங்கு, கன்னடம் மூன்று பாஷைகளிலும் இப்படம் தயாரிக்கப்படும். இதற்கான ஆரம்ப பூஜை சென்ற மாத மத்தியில் நடைபெற்றது.

ரங்காவின் எதிர்கால திட்டத்தில் 'சத்ரபதி சிவாஜி'யை டெக்னி கலரில் உருவாக்கும் எண்ணமும் இருக்கிறது. இந்தப் படத்தில் சிவாஜியின் பாத்திரத்தில் சிவாஜி கணேசன் நடிப்பார். ரங்காவே இப்படத்தை டைரக்ட் செய்வார்.

அருணாவின் 'சகுந்தலை'

வடமொழிக் கவி காளிதாஸன் இயற்றியிருக்கும் 'சாகுந்தலம்' காவியத்தை அருணா பிலிம்ஸார் தயாரிக்கப் போகிறார்கள். முன்பே ஒருமுறை எம். எஸ். சுப்புலக்ஷ்மி ஜி. என். பாலசுப்ரமணியம் இருவரையும் பிரதம பாத்திரத்தில் நடிக்க வைத்து, ராயல் டாக்கீஸார் ஒரு சகுந்தலையை வெளியிட்டிருப்பது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். தற்போது சிவாஜி கணேசன்–பத்மினி இருவரும் துஷ்யந்தன்–சகுந்தலையாக இப்படத்தில் நடிப்பார்கள். ஆர். எம். கிருஷ்ணசாமி டைரக்ஷனில் தயாராகப் போகும் இப்படத்திற்கான வசனங்களை 'இளங்கோவன்' எழுதி வருகிறார்.

'சிவகாமியின் சபதம்' வரப்போகிறது!

அமரர் 'கல்கி'யின் பேனா முனை வடித்த 'சிவகாமியின் சபதம்' என்ற சரித்திர நாவலை அருணா பில்ம்ஸார் படமாக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். "இதற்காக எவ்வளவு பொருள் செலவானாலும்-காலமானாலும் அவற்றை லக்ஷியம் செய்யாது - ஒரு லக்ஷியப்படமாக இதை உருவாக்கத் திட்டமிட்டிருக்கிறோம்" என்று அருணா பில்ம்ஸ் நிர்வாகிகள் சொல்கிறார்கள். சிவாஜி கணேசன் - பத்மினி இருவரும் இந்தப்படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருப்பதுடன் படத்திற்கான இதர ஆக்க வேலைகளும் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. ஆர். எம். கிருஷ்ணசாமியின் டைரக்ஷனில் இப்படம் வளரப் போகிறது.

வரப்போகும் 'புண்ணியவதி'

அசோசியேடட் புரொட்யூஸர்ஸ் தயாரித்த 'சிநேகசீமா' என்ற மலையாளப் படத்திற்கு, இந்திய சர்க்கார் விசேஷ பாராட்டு பத்திரமொன்று வழங்கிய செய்தியை 'பேசும் - பட'த்தில் வெளியிட்டிருந்தோம். தற்போது அந்தப் படத்தை 'புண்ணியவதி' என்ற பெயரில், சுரபி பிக்சர்ஸார் தமிழில் 'டப்' செய்து வருகிறார்கள். பத்மினி, சத்யன் மற்றும் பலர் நடித்திருக்கும் இப்படத்தை எஸ். எஸ். ராஜன் டைரக்ட் செய்திருக்கிறார். புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்ட உள்ள முருக்கும் உணர்ச்சிமயமான கதையைக் கொண்டது 'புண்ணியவதி'.

சாதனா பில்ம்ஸ் தெலுங்கில் தயாரித்திருக்கும் 'சந்தானம்' படத்தை அசோசியேடட் புரொட்யூஸர்ஸார் தமிழில் 'டப்' செய்து வருகிறார்கள். இப்படத்திற்கான தமிழ் வசனங்களை டி. கே. கோவிந்தன் எழுதி வருகிறார். சாவித்திரி, நாகேஸ்வரராவ், ரங்காராவ், ரேலங்கி முதலியோர் இப்படத்தில் நடித்திருக்கிறார்கள்.

தயாரிப்பில் 'மகாத்மா கபீர்'

ஆர்ட் டைரக்டராகப் படவுலகில் பணியாற்றி வரும் கங்கா, சொந்தத்தில் 'கங்கா ஸினி புரொடக்ஷன்ஸ்' என்ற படக்கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார் இக்கம்பெனியின் சார்பில்'மகாத்மா கபீர்' என்ற படத்தை தமிழில் தயாரித்து வருகிறார் அவர். இப்படத்திற்கான ஆரம்ப பூஜை சென்ற மாதம் பிரகாஷ் ஸ்டுடியோவில் நடைபெற்றது. டி. ஆர். ராமண்ணா டைரக்ட் செய்யும் இப்படத்தில் சிவாஜி கணேசன், ஜி. வரலக்ஷ்மி, எம். என். ராஜம், நம்பியார் முதலியோர் நடித்து வருகிறார்கள்.

'கவியின் காதலி' ரேவதியில்

ரேவதி ஸ்டுடியோவில் 'கவியின் காதலி' என்ற படம் தயாராகி வருகிறது. மணிவேல் பிக்சர்ஸ் என்ற புது ஸ்தாபனத்தார் இப்படத்தை தயாரித்து வருகிறார்கள். ஏ. கே. வேலன் இப்படத்திற்கான வசனங்களை எழுதியிருக்கிறார். கே. ஆர். ராமசாமி, என். என்.

'குங்குமம்' படத்தில் மனோகருடன் பின்னணிப் பாடகர் திருச்சி லோகநாதனும் நடிக்கிறார்.

கண்ணப்பா, நம்பியார், ராஜ சுலோசனு, எம். என். ராஜம் முதலிய நக்ஷத்திரங்கள், கே. எஸ். மணி டைரக்ஷன் பொறுப்பேற்றிருக்கும் இப்படத்தில், நடித்து வருகிருர்கள்.

ஜூபிடரின் 'கற்புக்கரசி'

கே. ராம்னுத் டைரக்ஷனில் ஜூபிடர் பிக்சர்ஸ் தயாரித்துவரும் தமிழ்ப் படத்திற்கு 'கற்புக்கரசி' என்று பெயர் தரப்பட்டிருக்கிறது. ஜி. வரலக்ஷ்மி, ஜெமினி கணேசன் இருவரும் இப்படத்தின் பிரதம பாகத்தில் நடித்து வருகிருர்கள். மாயாஜாலம் நிறைந்த இப்படத்தின் கதை-வசனத்தை கோபி சிவசுந்தரம் சகோதரர்கள் எழுதியிருக்கிருர்கள். நெப்ட்யூன் ஸ்டுடியோவில் படம் தயாராகி வருகிறது.

வசுந்தராதேவி நடிக்கிருர்!

'மங்கம்மா' வசுந்தராதேவி மீண்டும் படங்களில் நடிக்கப் போகிருர். சேகர் ஆர்ட் எண்டர்ப்ரைஸ் என்ற படக்கம்பெனியின் 'வசந்தசேனு' தமிழ்ப் படத்தில் வசுந்தராதேவி பிரதம பாகத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிருர். முருகதாஸா — வி. எஸ். ராகவன் கூட்டு டைரக்ஷனில் தயாராகப் போகும் இப்படம் ரேவதியில் உருவாகும்.

இதே ஸ்டுடியோவில் முத்தமிழ் பிக்சர்ஸ் தயாரிக்கப் போகும் 'பாக்யசக்ரம்' தமிழ்ப் படத்திலும், வசுந்தராதேவி, எம். கே. தியாகராஜ பாகவதர் முதலியோருடன் நடிக்கப் போகிருர். வி. எஸ். ராகவன் இப்படத்தை டைரக்ட் செய்கிருர்.

தயாராகும் 'மங்கள வாசம்'

பி. எஸ். ராமய்யா எழுதியிருக்கும் 'மங்கள வாசம்' கதையை டைரக்டர் எஸ். செளந்தரராஜன் தயாரிக்கப் போகிருர். இப்படத்திற்கான சில பாடல்கள் ஒலிப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஜூன் மாத வாக்கில் 'மங்கள வாச'த்தின் படப்பிடிப்பு ஆரம்பமாகும் என்று தெரிகிறது. 'தமிழ் நாடு டாக்கீஸ்' சார்பில் இப்படம் தயாரிக்கப்படும். படத்திற்கான நடிகர் தேர்தல் இன்னும் நடைபெறவில்லை.

காலம் மாறிப் போச்சு!

தங்கள் வெற்றிப் படமான 'ரோஜுலு மாராயி' தெலுங்குப் படத்தைத்தழுவி, சாரதி பில்ம்ஸார் தமிழில் தயாரித்திருக்கும் 'காலம் மாறிப் போச்சு' படம் இம்மாதம் திரைக்கு வருகிறது. குடியானவர்களின் சமூக வாழ்க்கையைப் பின்னிப் புனையப் பட்டுள்ள இக்கதையை தாபி சாணக்கியா டைரக்ட் செய்திருக்கிருர். அஞ்சலிதேவி, ஜெமினி கணேசன், பாலய்யா, டி. எஸ். துரைராஜ், தங்கவேலு மற்றும் பல நக்ஷத்திர நடிகர்கள் சாரதியின் இம் முதல் தரத் தயாரிப்பில் நடித்திருக்கிருர்கள். வஹிதா ரஹ்மானின் கவர்ச்சிகரமான நடனமும் இதில் இடம் பெற்றிருக்கிறது.

'தந்தி' வரப்போகிறது!

கே. ஆர். ராமசாமி, பி. எஸ். சரோஜா, ஏ. கருணாநிதி, டி. பி. முத்துலக்ஷ்மி முதலியோர் நடிக்கும் 'ஓம்-சக்தி' பில்ம்ஸாரின் 'தந்தி' தமிழ்ப்படம் சியாமளா ஸ்டுடியோவில் மும்முரமாகத் தயாராகி வருகிறது. எஸ். வி. ராஜகோபால் இப்படத்திற்கான கதை, வசனங்களை எழுதியிருக்கிருர். கே. ஆர், சுந்தரேசன் 'தந்தி'யை டைரக்ட் செய்து வருகிருர்.

பில்ம் செண்டரின் 'நன்னம்பிக்கை'

கே. வேம்பு டைரக்ஷனில் வளர்ந்துவரும் பில்ம் செண்டர் ஸ்டுடியோவின் சொந்தப் படமான 'நன்னம்பிக்கை' முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. பண்டரிபாய், மைனுவதி, பாலய்யா, என். என். கண்ணப்பா, என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் முதலிய நக்ஷத்திரங்கள் நடிக்கும் இப்படம், அன்ருட வாழ்க்கையில் நடைபெறும் சம்பவங்களைப் பிரதிபலிக்கும் கதை

யைக் கொண்டது. விரைவிலே யே 'நன்னம்பிக்கை'யை நாம் வெள்ளித்திரையில் சந்திக்கப் போகிருேம் என்பதையும் கூறி விடுகிறேன்.

அன்னபூர்ணுவின் 'சகோதரி'

நடிகர் ஏ. நாகேஸ்வரராவின் அன்னபூர்ணு பிக்சர்ஸின் 'தொங்க ராமுடு' தெலுங்குப் படத்தின் தமிழ்ப் பதிப்பை விரைவிலேயே ரஸிகர்கள் பார்க்கலாம். 'சகோதரி' என்ற பெயரில் தமிழில் 'டப்' செய்யப்பட்டு வரும் இப்படத்தில் சாவித்திரி, ஜமுனு, குசலகுமாரி, ஏ. நாகேஸ்வரராவ் மற்றும் பலர் நடித்திருக்கிருர்கள். கே. வி. ரெட்டி டைரக்ட் செய்திருக்கும் இப்படம் வாஹினியில் தயாராகி யிருக்கிறது.

ஏ. டி. கே.யின் 'ரத்னுவளி'

டைரக்டர் ஏ. டி. கிருஷ்ணசாமி, பிரபல 'ரத்னுவளி' கதையை மீண்டும் சொந்தத்தில் படமாக்க ஏற்பாடுகளைச் செய்து வருகிருர். ரேவதி ஸ்டுடியோவில் 'ரத்னுவளி' வளருவாள் என்று தெரிகிறது.

அதிரூப அமராவதி

நியூடோன் ஸ்டுடியோவின் கூட்டுறவோடு 'விஜய் ஹிந்த்' புரொடக்ஷன்ஸார் 'அதிரூப அமராவதி' என்ற கிராமியக்கதையை தமிழில் படமாக்கப் போகிருர்கள். தஞ்சை ராமய்யாதாஸ் கதை, வசனம் எழுதியிருக்கும் இப்படத்தின் டைரக்ஷன் பொறுப்பு கே. ராம்னுத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. எம். ஜி. ராமச்சந்திரன், தங்கவேலு, சந்திரபாபு, பானுமதி, ராஜசுலோசனு முதலியோர் அதிரூப அமராவதிக்காக இதுவரை ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிருர்கள்.

ரத்னுவின் 'அங்கயர்க்கண்ணி'

சேலம் ரத்னு ஸ்டுடியோவை குத்தகைக்கு எடுத்திருக்கும் எம். ஆர். பிக்சர்ஸார் 'அங்கயர்க்கண்ணி' என்ற படத்தைத் தயாரிக்கப்போகிருர்கள். சிவாஜி கணேசன், பானுமதி, கிருஷ்ணன், மதுரம் முதலியோர் இப்படத்தில் நடிப்பார்கள்.

வேணு யானை வாங்கினர்!

எம். ஏ. வி. பிக்சர்ஸ் உரிமையாளரான எம். ஏ. வேணு, தான் தயாரித்து வரும் 'செங்கமலத்தீவு' படத்தில் நடிக்க வைப்பதற்காக யானை ஒன்றை வாங்கி யிருக்கிருர். இனம் தெரியாத தீவு ஒன்றில் கதா நாயகன் சிக்கி விட, அங்கு அவனுக்கு ஏற்படும் ரஸமான அனுபவங்களைச் சித்தரித்து, தமிழ்த்திரை உலகுக்கு முற்றிலும் நூதன பாணியில் இப்படக் கதையை ஏ. பி. நாகராஜன் அமைத்திருக்கிருர். சிவாஜி கணேசன் பிரதமபாகத்தில் நடிக்கும் இப்படத்தை கே. சோமு டைரக்ட் செய்கிருர்.

ஸ்ரீ கிருஷ்ண கான ஸபை (Regd) தி. நகர்

சனிக்கிழமை 5-5-56 | மாலை 6-30 க்கு | 6-5-56 ஞாயிற்றுக்கிழமை

ராஜா அண்ணுமலை மன்றத்தில்

ஜனக் ஜனக் பாயல் பாஜே புகழ்

கோபி கிருஷ்ணு & பார்ட்டி

நடனங்கள்

டிக்கட் விகிதம்:— ரூ 15, 10, 5, 3 & 2.

ஜெமினியின் வர்ணப்படம்

இந்தியாவிலேயே முதன்முதலாக ஜெமினி தயாரிக்கவிருக்கும் 'சினிமாஸ்கோப்' டெக்னிகலர் படத்தின் வேலைகள் இம்மாதம் ஆரம்பமாகுமென்று தெரிகிறது. இதற்காக ஹாலிவுட் சென்றிருந்த ஜெமினியின் பிரதிநிதியும் சென்ற மாதமத்தியில் சென்னைக்குத் திரும்பி விட்டார். வைஜயந்திமாலா இப்படத்தில் நடிப்பார் என்று தெரிகிறது. 'இந்திய சர்க்கார் செய்திப் பட' இலாக்காவில் முன்னாள் பணியாற்றிய மோகன் பவ்னானி இப்படத்தை டைரக்ட் செய்ய அமர்த்தப்பட்டிருக்கிறார்.

இது தவிர, மற்றொரு டெக்னிகலர் 'சினிமாஸ்கோப்' படத்தையும் ஜெமினி தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறது. இப்படத்தை எஸ். எஸ். வாஸன் டைரக்ட் செய்வார்.

இவ்விரு படங்களுக்கு மிடையில் தமிழ், ஹிந்தி இரு பாஷைகளிலும் கிராமாந்திர சூழ்நிலையை பின்னணயில் கொண்ட ஒரு படத்தை ஜெமினி தயாரித்து வெளியிடும். இதற்கான படப்பிடிப்பு இம்மாதம் ஆரம்பமாகும்.

மாடர்னின் 'பாசவலை'

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் தயாராகிவரும் 'பாசவலை'யில் ஜி. வரலக்ஷ்மி, ராஜசுலோசனா, முத்துலக்ஷ்மி, எம். கே. ராதா, ஏ. கருணாநிதி முதலியோர் நடித்து வருகிறார்கள். முன்னாள் வெளிவந்த 'அலிபாதுஷா' கதையைத் தழுவி எடுக்கப்படும் இப்படத்தை ஏ. எஸ். நாகராஜன் டைரக்ட் செய்து வருகிறார். நாகராஜன் சமீபத்தில் டைரக்ட்செய்திருப்பது 'மாதளங்' சிங்களப் படமாகும்.

இதோ 'ஏழுமலை ரகசியம்'

பத்மினி பிக்சர்ஸின் அடுத்த தயாரிப்புக்கான பெயர் இதுதான். இந்தப் படத்தை பி. ஆர். பந்துலு டைரக்ட் செய்யப்போகிறார். இப்படக்கதையை சின்ன அண்ணாமலையும் - லக்ஷ்மணனும் எழுதியிருக்கிறார்கள். படத்திற்கான வசனங்களை ப. நீலகண்டன் எழுதி வருகிறார். சிவாஜி கணேசன், டி. ஆர். ராமச்சந்திரன் முதலியோர் இப்படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

எஸ். கே.யின் 'குலதெய்வம்'

இம்மாதம் வெளிவர விருக்கும் படங்களில் எஸ். கே. பிக்சர்ஸார், ஏவி.எம்.ஸ்டுடியோவில் தயாரித்து வரும் 'குலதெய்வம்' படமும் ஒன்றாகும். கிருஷ்ணன் - பஞ்சு இருவரது கூட்டு டைரக்ஷனில் இப்படம் தயாராகி வருகிறது. பண்டரிபாய், மைனாவதி, எம்.என். ராஜம், எஸ். வி. சஹஸ்ரநாமம், எஸ். எஸ். ராஜேந்திரன், முஸ்தபா மற்றும் பலர் 'குலதெய்வ'த்தில் நடித்து வருகிறார்கள். விதவையொருத்தியின் வாழ்க்கைப் போராட்டத்தைச் சித்தரிக்கும் கதை இது.

ஆரம்ப பூஜைகள்

சென்ற மாதம் 25-ம் தேதியன்று வைதேஹி பிக்சர்ஸார் தங்களின் முதல் படத்திற்கு ஆரம்ப பூஜை நடத்தினார்கள். அமரசிற்பி என்ற அழகான பெயர் கொண்ட இப்படக்கதை ஒரு கலைஞனின் வாழ்க்கையைச் சுற்றிச் சுழலும் என்று எதிர்பார்க்கலாம் அல்லவா?

சினிமா எக்கோ ஆர்ட்ஸ் என்ற ஒரு புதுக்கம்பெனி உதயசந்திரன் என்ற பெயரில் ஒரு படத்தைத் தயாரிக்கப் போகிறார்கள். சிம்மா என்பவர் டைரக்ட் செய்யப்போகும் இப்படத்திற்கு சென்ற மாதம் 13-ம் தேதியன்று ஆரம்ப பூஜை நடைபெற்றது.

சென்ற மாதம் 22-ம் தேதியன்று நெப்டியூன் ஸ்டுடியோவில் தங்கப்பதுமை என்ற படத்திற்கு அமரிக்கையாக ஆரம்ப பூஜை நடந்திருக்கிறது. ஏ. எஸ். ஏ. சாமி டைரக்ட் செய்யப்போகும் இப்படத்தில் சிவாஜி கணேசன், கிருஷ்ணன் - மதுரம், பத்மினி, அஞ்சலிதேவி முதலியோர் நடிக்கிறார்கள்.



ஸ்டுடியோ முதலாளியும் படத்தயாரிப்பாளருமான வாஸன்

எஸ். எஸ். வாஸன்

பத்திராதிபர், படமுதலாளி, ஸ்டுடியோ உரிமையாளர், பட விநியோகஸ்தர், சினிமா டைரக்டர், கதாசிரியர், பொது நல ஊழியர், ஆதர்ச அரசியல்வாதி – என்ற எட்டு வகையான பதவிகளை வகித்து வரும் எஸ். எஸ். வாஸன் அவர்களை, தமிழ்நாடு பூராவுமே – ஏன் அகில இந்தியாவுமே நன்கு அறியும். 'ஜெமினி' வாஸன், 'விகடன்' வாஸன் என்று தமிழகம் இன்று போற்றிப் புகழும் அவரை, 'அஷ்டாவதானி' வாஸன் என்ற அடைமொழியோடு நான் இம்மாதம் அறிமுகப் படுத்துவதில் பெருமை கொள்கிறேன்.

ஸ்டுடியோ முதலாளி

'ஜெமினி ஸ்டுடியோ' என்ற பெயரைத் தெரியாத பட ரஸிகர்கள் ஒருவருமே இருக்க முடியாது. சென்னைக்குப் புதிதாக பஸ்ஸில் வருபவர்கள் கூட தேனும்பேட்டைக் கருகில் வரும்போது 'ஜெமினி ஸ்டாப்பிங்' என்று பஸ் கண்டக்டர்கள் கோஷத்தைக் கேட்டு, அண்ணாந்து பார்ப்பார்கள். அவர்கள் கண்ணுக்கெதிரில் விசாலமான ஜெமினியின் வாயில்தான் கம்பீரமாகத் தோன்றும்.

அஷ்டாவதானம்

பாரதப் பிரதமருடன் டில்லியில் நடைபெற்ற பிலிம்செமிஞர் விழாவில்.

எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடித்த டென்ஸிங்கும் ஜெமினிக்கு வந்தார்.

ஆசியாவின் மிகச் சிறந்த ஸ்டுடியோக்களில் ஒன்ருகவும், இந்தியாவிலேயே அமெரிக்க முறையின்படி அமைக்கப்பட்டிருக்கும் ஒரே ஸ்டுடியோவும் இதுதான். கதை இலாக்கா, விளம்பர இலாக்கா, பொதுஜனத்தொடர்பு இலாக்கா, சங்கீத இலாக்கா போன்ற பல்வேறு இலாக்காக்களாகப் பிரித்து, அவற்றை தகுந்த நபர்களைக் கொண்டு நிர்வகித்து வரும் 'ஜெமினி'யின் சொந்தக்காரர் வாஸன்தான்.

'விகடன்' ஆசிரியர் வாஸன்.

ஜெமினிக்கு அவ்வப்போது பல அரசியல் பிரமுகர்களும், தேசத்தலைவர்களும், மற்றும் பல பெரியார்களும் விஜயம் செய்து, ஸ்டுடியோவின் அமைப்பையும், வாஸனின் நிர்வாகத்திறமையையும் பாராட்டிச் சென்றிருக்கிருர்கள்.

இந்தியாவின் ஜனுதிபதி ராஜன் பாபு, உப-ஜனுதிபதி ராதாகிருஷ்ணன், வி. கே. கிருஷ்ண மேனன், டாக்டர் பி. வி. கேஸ்கர், கரியப்பா, சென்னை கவர்னர் பிரகாசா போன்றவர்கள் ஜெமினியின் கௌரவ விருந்தினர்கள் பட்டியலில் இடம் பெற்றிருக்கிருர்கள்.

தயாரிப்பாளர் வாஸன்

அண்ணுமலை மன்றத்தில் ஔவையார் படத்தைத் தயாரித்து வெளியிட்டதற்காக சென்னை பொதுமக்களின் சார்பில் எஸ்.எஸ்.

வாஸனுக்கு ஒரு வரவேற்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ராஜாஜி, சென்னை மேயர் செங்கல்வராயன், ஸர். ஸி.பி. ராமஸ்வாமி அய்யர், ராஜா முத்தய்யா செட்டியார், திருப்புகழ் மணி மற்றும் பல பிரமுகர்கள் அங்கு கூடியிருந்தார்கள்.

விழாவில் கலந்து கொண்ட பேராசிரியர் 'கல்கி' பேச ஆரம்பித்தார். 'கல்கி'க்கும் வாஸனுக்கும் நீண்ட நாட்களாகவே தொடர்பு உண்டு என்பதும், 'கல்கி' பத்திரிகையை ஆரம்பிக்கு முன் 'விகடனி'ல் 'கல்கி' அவர்கள் சேவை செய்து வந்தார் என்பதும் பலருக்கும் தெரியும்.

ஆனல் 'கல்கி' பேச ஆரம்பித்த போது, சபையோர்கள் திகைத்து நிற்கும் வண்ணம் ஒரு பெரிய அணுகுண்டையே தூக்கிப் போட்டு விட்டார்.

பிரஸாத்தின் பாராட்டு விழாவில். இம்மாதிரி எத்தனையோ!...

"எனக்கு எஸ். எஸ். வாஸன் அவர்களைத் தெரியவே தெரியாது" என்று சொல்லி நிறுத்தி விட்டு,

கல்கியுடன், தம்பதி சமேதராக பொது நிகழ்ச்சி யொன்றில்.

பதினோராயிரம் அடிக்கட்டுப்பாடு கூடாது, என்று பேசுகிறார்.

'ஔவையார்' தின விழாவில்.

பின்னர் தொடர்ந்து "ஆம்–'ஔவையார்' போன்ற அதி உன்னதமான சித்திரங்களைத் தயாரிக்கக் கூடியவர் வாஸன் ஒருவர்தான் என்ற உண்மை இன்றுதான் தெரியுமே தவிர, முன்னமே தெரியாது!" என்று கூறி, பெரிய கலகலப்பையே சபையில் உண்டு பண்ணி விட்டார்!

ஆம், 'கல்கி' அவர்கள் கூறியதுபோல் எஸ். எஸ். வாஸன் 'அசாத்தியம்' என்று

ராஜகுமாரி டாக்கிஸை திறந்து வைக்கிறார் வாஸன்.

நினைப்பதையும். திரைப்படமாகத் தயாரித்துக் காட்டுவதில் வல்லவர். இல்லாவிட்டால் 'தமிழகமே' கண்டு வியக்கும்படி துணிந்து முப்பது லக்ஷ ரூபாயை முதலீடு செய்து 'சந்திரலேகா'வை அவர் தயாரித்துக் காட்டியிருப்பாரா? வட இந்தியப் படவுலகையே 'கிடுகிடு'க்க வைத்திருப்பாரா?

ஜெமினியின் தயாரிப்பு என்றாலே சினிமா ரஸிகர்களுக்கு ஒரு தனி நம்பிக்கையையும் உற்சாகத்தையும் அளிக்கும் வகையில்



தெ. இ. சினிமா பத்திரிகாசிரியர்கள் சங்க ஆரம்ப விழாவுக்குத் தலைமை வகித்தார்.



‘இன்ஸானியத்’திற்காக பீனாராயை டைரக்ட் செய்கிறார்.

அப்படங்கள் அமைந்திருக்கும். வாஸன் இதுவரை தயாரித்து வெளியிட்டிருக்கும் படங்களில் அநேகம் வெள்ளி விழா, பொன் விழாக்களை கொண்டாடியிருக்கின்றன.

திட்டமிட்டு, அத்திட்டத்தின்படி செயலாற்றி, வெற்றியை முன் கூட்டியே காண்பவர் வாஸன்.

"நாம் செய்யும் காரியங்கள் லாபத்தை அளிக்காமலிருக்க்



‘இன்ஸானியத்’ வெளிப்புறக் காட்சி சுடப்படும்போது.

லாம். ஆனால் அக்காரியத்தில் வெற்றி தான் குறிக்கோளாக இருக்க வேண்டும்" என்று சொல்கிறார் வாஸன்.

"படவுலகம் ஒரு சூதாடுமிடமல்ல; படம் தயாரிப்பது என்பதும் அந்த ரகத்தைச் சேர்ந்ததல்ல; திட்டமிட்டு செயலாற்றக் கூடிய தொழில் இது. இதில் வெற்றி பெறுவதில் சந்தேகம் ஏற்படுமானால் அன்றே படவுலகிலிருந்து நான் விலகிவிடுவேன்!" என்கிறார் வாஸன்.

எடுக்கும் காட்சியை காமிராவின் மூலம் பார்க்கிறார் ‘மங்களா’ செட்டில்.

சமீப காலம் வரை அகில இந்திய பிலிம் சம்மேளனத்தின் தலைவராக இருந்த அவர், தற்போது அதன் உபதலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இதில் ஒரு விசேஷமும் இருக்கிறது.

இச்சம்மேளனத்தின் தலைவராக, ஒருவர் ஒரு வருஷகாலம்தான் இருக்கலாம் என்பது அதன் சட்டம். ஆனால் வாஸனின் செயலாற்றும் திறமைகாரணமாக, அவர் இச்சம்மேளனத்தின் தலைவராகத் தொடர்ந்து இரண்டாண்டுகள் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, மூன்றாவது ஆண்டாக இவ்வருடமும் அவரையே தலைவராக இருந்து பணியாற்றும் படி பலர் வற்புறுத்தினார்களாம். ஆனால் வாஸன் மறுத்து விட்டார்.

இது தவிர, தென் இந்திய சினிமா ஸ்டுடியோ முதலாளிகள் சங்கம், பிலிம் வர்த்தக சபை இரண்டுக்கும் அவர் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

படவுலகம் சம்பந்தமான எந்த பிரச்னைக்கும் முடிவுகாணுமல் ஓய மாட்டார் அவர்.

முன்பு பதினோராயிரம் அடிக் கட்டுப்பாடு வந்தபோது, "கூடாது இது!" என்று சீறி எழுந்தார் வாஸன். புள்ளிவிபரங்களோடு, தான் அதை எதிர்க்கக் காரணத்தையும் விளக்கி, அதில் வெற்றி பெறவும் செய்தார் அவர்.

இதே போல் சமீபத்தில் டெல்லி தாய்மார்களும், காங்கிரஸ் காரியக் கமிட்டியும் சினிமாவின் மீது அவதூறு சொன்ன போது வரிந்து கட்டிக் கொண்டு வந்து விட்டார் வாஸன்.

"எங்கே நீங்கள் சொல்வதற்கு ஆதாரம்?" என்று டில்லித்தாய்மார்களின் குற்றச் சாட்டை எதிர்த்து அவர் எழுதிய கடிதத்திற்கு பதிலே வரவில்லையாம்!

'மங்களா' ஹிந்திப் படத்தை பம்பாயில் திரையிடக் கூடாது என்று திடீர் சட்டம் போட்டது பம்பாய் அரசாங்கம். அதற்கு அது காட்டிய காரணமோ கேலிக்குறியது.

வாஸன் பொங்கி யெழுந்தார். தன் படத்திற்கு விதிக்கப்பட்ட தடையாக அதை அவர் கருதவில்லை; நம் தென்னிந்தியாவிலிருந்து வரும் எந்தப் படத்துக்கும் இதே கதி நாளைக்கு நேரலாமே என்று தான் கொதித்தார்.

பம்பாய் சர்க்காரின் மீது வழக்கு தொடுத்தார். அதில் சர்க்காருக்கு எதிராக நீதிபதி தீர்ப்பளித்தார். வாஸன் வெற்றி வாகை சூடி வெளியே வந்தார்.

அதைக்குறித்து அவரது படத்தை வெளியிட்டு, "சந்திரலேகா, நிஷான் படங்களை நமக்களித்ததுடன் முதன் மந்திரிக்கும் நல்ல பாடம் கற்பித்திருக்கிறார்!" என்று அதற்கு விளக்கமும் தந்து, பம்பாய் சர்க்காரின் – பட முதலாளிகளின் – கீழ்த்தரமான மனோபாவத்தைக் கண்டித்து 'பிலிம் இந்தியா' பத்திரிகை ஒரு பெரிய தலையங்கமே தீட்டியிருந்தது.

'தமாஷா வரி அதிகம்; தணிக்கை கெடுபிடி குறைய வேண்டும்' என்றெல்லாம் மேடைக்கு மேடை படவுலகின் 'உரிமைக் குரலை' எழுப்பி வரும் வாஸன், அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டிய சந்தர்ப்பத்தில் வாய்மூடி மௌனியாகி விடுவதில்லை. வாயாரப் புகழவும் செய்கிறார். 'பிலிம் செமினர்' விழாவில் அவர் பிரசங்கம் இதையே வெளிப்படுத்தியது.

டைரக்டர் வாஸன்

அடுத்தபடியாக வாஸனை டைரக்டர் என்ற கோணத்தில் நாம் சந்திக்கப் போகிறோம்.

வாஸன் டைரக்டராக 'ஸெட்'டுக்குள் நுழைந்து விட்டால், அளவுக்கு மீறிய பொறுமையும் அவருடன் வந்து விடும். தான் விரும்பும் வகையில் எந்த நடிகராவது நடிக்கா விட்டால், லேசில் விடமாட்டார்.

தான் விரும்பும் நடிப்பை, அலுப்பு சலிப்பின்றி, அப்படியே

நடித்துக் காட்டுவார், நடிகர் அம் மாதிரி செய்து காட்டும் வரை.

தவிர, ஒரு நடிகனோ, நடிகையோ தன்வரை காட்சி பற்றி திருப்திகரமாக இல்லை என்று சொன்னாலோ, அல்லது வேறு விதமாக யோசனை கூறினாலோ, அதை எடுத்துக் கொண்டு செயலாற்ற டைரக்டர் வாஸன் தயங்கவே மாட்டார்.

வாஸன் டைரக்ட் செய்த முதல் படம் சந்திரலேகா. இம் முதல் படத்திலேயே அவரது திறமையை அகில இந்தியாவும் உணர்ந்து கொண்டு விட்டது. சந்திரலேகாவைத் தொடர்ந்து அவர் மங்களா நிஷான், சன்ஸார், மிஸ்டர் சம்பத், பஹுத்-தின்-ஹுவே, இன்ஸானியத் ஆகிய படங்களை டைரக்ட் செய்திருக்கிறார்.

'விநியோகஸ்தர்' வாஸன்

படம் எடுப்பது பெரிதல்ல. அதை தக்கபடி விநியோகம் செய்வதில்தான் அதன் வெற்றியும் இருக்கிறது என்பதை படத்தயாரிப்பில் இறங்குமுன்னரே வாஸன் உணர்ந்திருந்ததால்தான், 'ஜெமினி பிக்சர்ஸ் சர்க்யூட்' என்ற பட விநியோகஸ்தாபனத்தை நிறுவினார்.

ஜெமினி தயாரிக்கும் எல்லா படங்களும், ஜெமினியில் உருவாகும் பிறரது படங்களும் ஜி.பி.ஸி. என்ற அவரது விநியோகக் கம்பெனியினால்தான் வெளியிடப்படுகின்றன. சமீபத்தில் வட இந்தியாவில் பல முக்கிய நகரங்களில் விநியோகக் கம்பெனியின் கிளைக்காரியாலயங்களை ஏற்படுத்தி, ஜெமினியின் ஹிந்தி தயாரிப்புகளையும் விநியோகம் செய்து வருகிறார்.

'கதாசிரியர்' வாஸன்

வாஸன் ஓர் நல்ல கதாசிரியர் என்பது பலருக்குத் தெரியாதிருக்கலாம். அவர் எழுதிய 'சதிலீலாவதி' படமாக்கப்பட்டு, அமோக வெற்றியை அடைந்திருக்கிறது.

'ஆனந்த விகட'னை வாங்கிய புதிதில் அதில் தொடர்கதையும் எழுதியிருக்கிறார் ஆசிரியர் வாஸன். 'பழமொழிகளாக' அத்தியாயங்களுக்கு தலைப்பு கொடுத்து நூதன பாணியொன்றையும் அவர் ஆரம்பித்து வைத்தார்.

'ஆனந்த விகட'னில் அவர் சமீபமாக எழுதியது, 'கல்கி'யின் மறைவுக்காக அனுதாபம் தெரிவித்து எழுதிய விளக்கம்தான். இதிலேகூட அவர் "நீண்ட நாட்களுக்குப்பின் நேயர்களுக்கு எழுதுகிறேன்..." என்று சொல்லியிருக்கிறார்.

'பத்திராதிபர்' வாஸன்

வாஸன் பத்திராதிபர் என்று நான் சொன்னால், அவர் எந்தப் பத்திரிகையை நடத்துகிறார் என்பதை நான் சொல்லித் தெரிந்து கொள்ளவேண்டிய அளவுக்கு நேயர்கள் தமிழ் நாட்டுக்குப் புதியவர்களாக இருக்க மாட்டார்கள்.

வாரந்தோறும், வீடு தோறும் 'ஆனந்த விகட'னைப் படித்து மகிழும் எண்ணிலாத் தமிழரின் இதயங்களில் வாஸனின் பிம்பம் நிச்சயம் காணப்படவே செய்யும்.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே!" என்பது 'ஆனந்த விகட'னின் சித்தாந்தம்.

பொது நல ஊழியர் அரசியல் வாதி

வாஸன் பல தர்ம ஸ்தாபனங்களுக்கு ஏராளமான பொருள் வழங்கியிருக்கிறார். மகாத்மா காந்தி நிதிக்காக அவர் ஒரு லக்ஷம் ரூபாய் அளித்தார்.

ஆனந்த விகடன் பத்திரிகைக்கு அவர் வெறும் ஆசிரியராக மட்டும் இருந்து விடவில்லை. அடிக்கடி ஏற்படும் அரசியல் பிரச்னைகளில் நடுநிலைமை நியாயவாதம் காரியசாத்யம் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்ட மிகச் சிறந்த தலையங்கங்களை பிரசுரிப்பதிலிருந்து அவர் ஒரு தேர்ந்த அரசியல் வாதியாகவும் ஆகிறார். ★

கடமை • கண்ணியம் • கட்டுப்பாடு
இம்மியும் வழுவாது வெற்றிமுரசு கொட்டுகிறான்..
மதுரை வீரன்
கிருஷ்ணா பிக்சர்ஸ் தயாரிப்பு
பார்த்தவர்கள் திரும்ப திரும்ப பார்க்கிறார்கள்......
...சென்னை...
சித்ரா • பிரபாத்
சரஸ்வதி • காமதேனு
மற்றும் தென்னாடெங்கும்
வெற்றியுடன் நடைபெறுகிறது
திரைக்கதை வசனம்
கவிஞர் கண்ணதாசன்
சங்கீதம்...
ஜி.ராமநாதன்
டைரக்ஷன்:
யோகானந்த்
G.H.RAO

ஆடை அலங்காரம்

“ஆடை அலங்காரம்” என்று சென்ற இதழில் நாம் புதிதாக ஆரம்பித்துள்ள பகுதி, நமது நேயர்களின் அமோகமான ஆதரவிற்கும், பாராட்டுதலுக்கும் உரியதாக அமைந்து விட்டது குறித்து நாம் மகிழ்ச்சி யடைகிறோம். சென்ற இதழில் அறிவித்தபடி ‘ஆடை அலங்காரம்’ என்ற இப்பகுதியை இன்னும் சில இதழ்களில் தொடர்ந்து வெளியிடத் தீர்மானித்திருக்கிறோம்.

‘கன்னியின் சபதம்’ படத்தில் கண்கவர் உடையில் எம். என். ராஜம்

கொசுவம் வைத்துக் கட்டிக் கொண்டிருக்கிறார் ராஜம்.

"உங்காத்திலே சமையல் ஆச்சோ?" என்று கேட்கும் பாணியில் எம். என். ராஜம் அணிந்து கொண்டிருக்கும் இந்த அம்மாமிப் புடவைக்குக் குறைந்தது ஒன்பது கெஜமாவது வேண்டும்.

இந்தப் பாஷனில் கட்டும் புடவைக்கு "ஷோ ஸ்டேண்ட்" ஆக மாறி விடுகிறார் இதைக் கட்டிக் கொண்டவர். தலைப்பு, பார்டர் எல்லாமே பெருமளவிற்கு வெளியே தெரிகிறதல்லவா? வைஷ்ணவ சம்பிரதாயப்புடவை யணிந்து, சகஜமாக நடமாடுவதற்கு நிறைய அனுபவம் வேண்டும். இல்லையேல் காலில் புடவை தடுக்கினால் கரணம் அடிக்க நேரிடும்.

எதிர்ப்பக்கத்தில்:

அம்மாமியாக காக்ஷியளிக்கும் எம். என். ராஜம் தான் எதிர்ப் பக்கத்தில் நவநாகரீக நங்கையாகக் காட்சியளிக்கிறார். நீல நிற மைசூர் ஸில்க் புடவையும், காலர் வைத்த பச்சை நிற ஜாக்கெட்டும் அணிந்திருக்கும் ராஜம், இங்கு எவ்வளவு ஒயிலாக நிற்கிறார் பாருங்கள்?

'மைசூர் ஸில்க்' புடவையில் ராஜம்.

மின்னல் வேகத்தில் திரையுலகில் முன்னேறி தனக்கென நிலையான ஒரு ஸ்தானத்தைக் கைப்பற்றி விட்ட ராஜசுலோசனு பஞ்சாபி உடையில் இங்கு காட்சி தருகிருர்.

பைஜாமா, லேடீஸ் ஜிப்பா, ஐந்து முழத் துண்டு இவை இருந்தால் நீங்களும், காவிரி பாயும் தமிழ் நாட்டிவிருந்து, 'ஐந்து நதிகள்' பாயும் பஞ்சாப் வாசியாக மாறிவிடலாம்.

உடலுடன் ஒட்டிய இந்த உடை, கவர்ச்சி மிக்க தோற்றத்தை அளிப்பதற்கு மிகவும் ஏற்றதாகும். இத்தகைய உடைக்கு சில்க் ஜிப்பாவும், கிரேப் ஸில்க் லேடீஸ் ஜிப்பாவும் ஏற்றதாக இருக்கும். சீட்டி, வாயில் துணிகளிலும் இதைத் தைத்துக் கொள்ளலாம்.

சாதாரணமாக கல்லூரி மாணவிகளுக்கும் பள்ளி மாணவிகளுக்கும் எடுப்பான உடை இது. மாலை நேரத்தில் டென்னிஸ், பூப்பந்து முதலிய ஆட்டங்கள் ஆடும் போதும் இத்தகைய உடைகளை அணியலாம். கால் தடுக்காமல் ஓடியாடி விளையாட இவ்வுடை சௌகரியமாக இருக்கும். நடனம் பயிலும் போதும் பலர் இத்தகைய உடைகளை அணிவதுண்டு.

பஞ்சாபி உடையில் காட்சி தரும் ராஜசுலோசனு...

பட்டுச் சேலையில் பல வகை உண்டு. காஞ்சீபுரம் புடவை, கொள்ளே காலம் வகை, பனரஸ் ரகம் என்பன போன்று பல வகைகள் உண்டு.

அவற்றிலே ஆரணி பட்டுப் புடவையும் ஒன்று. ஆரணிப் பட்டுப் புடவைகள் கவர்ச்சிக்கும், நூதன பாணிக்கும் இதரசேலைகளைப் போலவே நற்பெயரெடுத்து வருகின்றன.

சுலோசனு இங்கு அணிந்திருப்பது ஆரணி ரகத்தைச் சேர்ந்த பட்டுப் புடவை. அகலமான சரிகைக் கரை போட்ட இந்தப் பட்டுப் புடவைக்கு ஏற்ற வகையில் ஒரு சோளியை அணிந்திருக்கிருர் அவர்.

இத்தகைய உடைக்குஎளியவகை நகைகளோடு அட்டிகை போன்ற நகைகளும் அணிந்து கொள்ளலாம்.

இம்மாதிரி புடவைகளைக் கட்டிக் கொள்ளும்போது சேலையின் வண்ணத்திற்குப் பொருந்தும்படி ரவிக்கையையும் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

விசேஷ வைபவங்களுக்கும், விழாக் காலங்களிலும் அணிந்து கொள்ளப் பொருத்தமானது இது.

...இங்கு பட்டுச் சேலையில் தோற்றமளிக்கிருர்.

வைஜயந்திமாலா

நரசுவின் ஹிந்திப் படம், ஜூபிலியின் 'மர்மவீரன்' முதலிய படங்களில் நடித்து வரும் வைஜயந்திமாலா, ஜெமினியின் 'சினிமாஸ்கோப்' வர்ணப் படத்திலும் நடிக்கப் போகிறார்.

கிரிஜா

'பிரேம பாச'த்தில் சந்தித்த கிரிஜாவை, அடுத்து வரப் போகும் சாரதியின் 'காலம் மாறிப் போச்சு', 'தெருப் பாடகன்' முதலிய படங்களில் பார்க்கப் போகிறோம்.

வாழ்க்கை
சித்திரம்

சௌகார் ஜானகி

'குடும்பப் பெண்கள் சினிமாவில் சேரலாமா?' என்று நிறையபேர் இன்னும் கூடக் கேட்கிறார்கள். கண்யமான குடும்பத்தில் பிறந்து, படித்து மணமும் செய்து கொண்டு பிறகு படவுலகில் புகுந்து இன்று மிகுந்த புகழுடன் விளங்கும் சௌகார் ஜானகி கூறுகிறார், 'நிச்சயம் சேரலாம்' என்று. 'சினிமாவைப் போன்ற ஒரு அருமையான தொழில் கிடையாது. அதில் ஈடுபடுவதற்குக் குறிப்பிட்ட சிலர்தான் வேண்டும் என்ற நியதி யெல்லாம் கிடையாது. திறமையும் தன்னம்பிக்கையும் உள்ளவர்கள் பட உலகிற்குத் தாராளமாக வரலாம். நான்கூட முதலில் பட உலகம் பற்றித் தவறான கருத்து கொண்டிருந்தவள் தான். எனக்குப் படவுலகில் நடிக்கச் சந்தர்ப்பம் வந்தபோது, மறுத்து மண வாழ்க்கையிலீடுபட்டேன். மணமான பின் பட உலகில் நுழைய நானே தீர்மானித்தேன்' என்று கூறினார் சௌகார் ஜானகி.

ஜானகி படித்தவர்; பண்பு நிறைந்தவர். பட உலகில் இப்போது மின்னும் நக்ஷத்திரங்களில், அவரைப் போன்ற படாடோப மற்ற வாழ்க்கைநடத்துகிறவர்கள் மிகக் குறைவு என்றே சொல்லுவேன். கணவனுடனும் குழந்தைகளுடனும் குடும்ப வாழ்க்கையை ரசித்தபடியே நடிகையாகவும் நன்கு பணியாற்ற முடியும் என்பதை நிரூபித்த மிகச் சிலரில் ஜானகி ஒருவர்.

சாதாரணமாக அரசாங்க ஊழியர்களை நாடோடிகளான ஜிப்ஸிகளுடன் ஒப்பிட்டுக் கூறுவார்கள் சிலர். அந்த அரசாங்க உத்தியோகஸ்தர் இன்று சென்னையிலிருப்பார். இரண்டொரு வருஷங்களில் மாற்றலாகி மதுரைக்குப் போவார். அங்கே புது இடம் பழகி பிள்ளைகுட்டிகள் பள்ளிகளில் படிக்க ஆரம்பித்து ஒரு நிலைக்கு வரும் போது மீண்டும் வேற்றூருக்கு மாற்றலாகிவிடும். படிப்பு சொல்லிக் கொடுக்கப்படும் விதம் வேற்றூரில் வேறு மாதிரியாக இருக்கும். பிள்ளைகள் மிகவும் சிரமப்படும். பென்ஷன் பெறும்வரை நிலையற்ற நிலையில் ஊர் ஊராகச் செல்லும் அரசாங்க ஊழியர்களின் இந்தப் பட்டியலிலே இடம் பெறுகிறவர் தான், ராஜமகேந்திரபுரத்தைச் சேர்ந்த வெங்காஜி அவர்கள். காகித உற்பத்தித் தொழிலில் நிபுணர் அவர். வெளிநாடு சென்று திரும்பிய அவர் காகிதத் தொழிலில் நிகரற்றவராக விளங்கினார். ஆந்திரா பேப்பர் மில்லில் ஜெனரல் மேனேஜராகப் பணியாற்றிய காலம் அது. அப்போதுதான் பேசும் படங்கள் இந்தியாவில் தயாராக ஆரம்பித்தன. பேசும் பட வெள்ளிவிழா நக்ஷத்திரங்களில் வயதிலும் வெள்ளி விழாவை இப்போது கொண்டாடுபவர்களில் ஜானகியும் ஒருவர். ஆமாம், வெங்காஜி - சசிதேவி தம்பதிகளின் முதல் பெண்ணாக, 'ஓ'வென்று அழுதுகொண்டே, 1931-ம் ஆண்டில் முதல் தமிழ்ப் பேசும் படம் திரையிடப்பட்ட போது ஆந்திராவில் ராஜமகேந்திரபுரத்தில் பிறந்தார் ஜானகி.

ஜானகிக்கு ஒரு வயது நிறைந்த போது வெங்காஜி தனது ஜிப்ஸி வாழ்க்கையைத் தொடங்கினார். அவர் ஆந்திரா பேப்பர் மில்லிலிருந்து விலகி கல்கத்தா சென்றார். அங்கே ஆண்ட்ரூ யூல் அண்டு கம்பெனியில் அமர்ந்தார். அவர் குடும்பமும் கல்கத்தா சென்றது.

அங்கேயும் சுமார் மூன்றாண்டுகள் தான் இருந்தார் வெங்காஜி. 1935-ம் வருஷம் ராஜ மகேந்திர புரம் திரும்பி மீண்டும் ஆந்திரா பேப்பர் மில்லில் வேலைக்கமர்ந்தார். குடும்பமும் ஊர் திரும்பியது. செல்வமாக வளர்க்கப்பட்ட ஜானகி பள்ளியில் சேர்ந்தார். ஜானகி அப்போது ஒரே பிடிவாத குணம் கொண்டவராக இருப்பார். குடும்பத்தின் முதல் பெண் என்பதால் செல்லம் கொடுத்து வளர்க்கப்பட்டவர் அவர். ஆகவே பிடிவாதத்திற்குக் கேட்க வேண்டுமா? அவருடைய பிடிவாதம் தாங்காது கோபத்தோடு யார் அடிக்க வந்தாலும் குறும்பாக ஏதாவது பேசிவிட்டு ஓடி விடுவார் ஜானகி. இதனால் கோபம் கொண்டவர்கள் சிரித்துக் கொண்டே போய் விடுவார்கள். ஜானகி பள்ளியில் படிப்பில் ரொம்பவும் சூட்டிகையாக இருந்தார். வகுப்புச் சிறுமிகளிடம் விஷமம் செய்யும் ஜானகியை ஆசிரியர் அடிக்கப் போகும்போது பாட விஷயமாக ஏதாவதொரு சந்தேகம் கேட்க ஆரம்பிப்பார். இந்த ஆசிரியர்களிடம் ஒரு குணம் உண்டு. தாம் சொல்லிக் கொடுக்கும் பாடங்கள் சம்பந்தமாக யாராவது மாணவனோ, மாணவியோ சந்தேகம் கேட்டால் அவர்களுக்கு அந்த மாணவ மாணவியரிடம் அபார பிரியம் ஏற்படும். அவர்கள் மனதில் பதியும்படி விளக்குவர். மிகச் சிறு [illegible]தி லேயே சூக்ஷம புத்தியுடனிருந்த ஜானகி ஆசிரியர்களை இந்தக் கேள்வி ஆஸ்திரத்தினால் நன்றாக மயக்கி வைத்திருந்தார்! ராஜ மகேந்திரபுரத்தில் மூன்றே வருஷங்கள்! கிளம்ப வேண்டும் என்று வெங்காஜியின் கால்கள் தினவெடுத்தன. பீஹாருக்குச் சென்று காகித உற்பத்தி நிபுணராகப் பதவியேற்றார்.

அப்பாவுடன் ஜானகியும் பீஹாருக்குப் போனார். ஆனால் அங்கேயும் மூன்று வருஷங்கள் தான் இருக்க முடிந்தது. மீண்டும் 1941-ல் வெங்காஜி ராஜ மகேந்திரபுரத்துக்கே வந்து சேர்ந்தார். ஜானகி பள்ளியில் படிப்பைத் தொடர்ந்தார். ஆனால் இந்தத் தடவை இரண்டு வருஷங்கள் கூட ஒரே இடத்தில் நிலைக்கவில்லை வெங்காஜி. குடும்பத்துடன் 1943-ல் சென்னைக்கு வந்து சேர்ந்தார். சென்னையில் ஆந்திர மஹில சபாவில் சேர்ந்தார் ஜானகி. அவரது படிப்பு முடிந்து மெட்ரிக் பரீட்சை எழுதத் தயாரான போது, வெங்காஜி காகிதக் கட்டுடன் அஸ்ஸாமுக்குப் புறப்படத் தயாரானார்! ஜானகியும் குடும்பத்துடன் கிளம்ப வேண்டியதாயிற்று. வேறு வழி?

அஸ்ஸாமில் கௌஹாதியில் ஜானகி எஸ். எஸ். எல். ஸி. படித்துத் தேறினார். சேர்ந்தாற்போல் அவ்வளவு நாள் அங்கே தங்கினதே அதிகம் என்றோ



என்னவோ 1949-ல் சென்னை திரும்பிய வெங்காஜி இங்கேயே நிரந்தரமாகத் தங்கி விட்டார். சென்னையில் ஆந்திர மஹில சபாவில் சேர்ந்த ஜானகிக்கு நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஆர்வமுடன் கலந்து கொண்டு நடித்து வந்த ஜானகியின் திறமையை சபாவின் தலைவி துர்க்காபாய் கவனித்து அவரையே நாடகப் பொறுப் பேற்கச் செய்து விட்டார்! சபா நாடகங்களை நடத்தி வரும்போது அடிக்கடி ரேடியோ நாடகங்களிலும் பங்கெடுத்துக் கொண்டு வந்தார் ஜானகி. அவரே நாடகங்களைப் பொறுப்பேற்று நடித்தும் வந்ததால் ஒரு குட்டி டைரக்டராகி விட்டிருந்தார். வசனங்

களைத் தெளிவாகப் பேசி, அழகாக நடித்து வந்த அவர், யாவரது நன்மதிப்பையும் பாராட்டுதல்களையும் பெற்றிருந்தார். ஒரு சமயம் பிரபல பட்த்தயாரிப்பாளரும் டைரக்டருமான பி. என். ரெட்டி ஜானகியின் ரேடியோ நாடகத்தைக் கேட்க நேர்ந்தது. திறமையை என்றும் மதிக்கும் பி. என். ரெட்டி, ஜானகியைப் பாராட்டி ஆசி கூறியதுடன், 'சினிமாவில் சேருகிறாயா? உன் திறமையை யாவரும் அறிய முடியும்.' என்றார்.

'எனக்கு இப்படியொரு சந்தர்ப்பம் கிடைக்கச் செய்வதாகச் சொன்ன உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?' என்று ஜானகி சொல்லியிருப்பார் என்றல்லவா நினைக்கிறீர்கள்? இல்லவே இல்லை. நேரெதிரிடையாக, "நான் மணம் செய்து கொண்டு குடும்பம் நடத்தப் போகிறேன். சினிமாவில் நடிக்க விருப்பமில்லை" என்று சொல்லி விட்டார். பி. என். ரெட்டி அப்போதும் அவரது நறுக்கு தெறித்தாற் போன்ற வசன உச்சரிப்பையும் முகபாவத்தையும் கண்டு வியந்து, 'சரி, எப்படியும் பட உலகிற்கு நீ வந்து தானாக வேண்டும்' என்று நினைத்து திரும்பி விட்டார்.

ஜானகி அப்போதைக்கு சினிமாவில் நடிக்க விரும்பாததற்கு ஏதோ காரணமிருக்கவேண்டுமல்லவா!

ஆமாம், அப்போது ஸ்ரீநிவாஸராவ் என்பவர் அவரது இதய சிம்மாசனத்திலே வீற்றிருந்திருக்கவேண்டும்! ஜானகியின் நாட்டம் அவரை மணப்பதில் இருந்தது போலும்! ஆகவே அவர் 1947-ல் தன் இதயராஜாவான சங்கரமஞ்சி ஸ்ரீநிவாஸராவை மணந்தார். மணமான ஒன்பதாவது மாதத்தில் ஜானகிக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. யக்ஞபிரபா என்று பெயரிட்டு வளர்த்தனர். யக்ஞா தாயைப் போலவே சூட்டிகையானவள்தான்! அவள் அம்மாவை நான் கேள்வி கேட்டு முடிப்பதற்கு முன், யக்ஞாவின் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது! மூன்று

வருஷங்களில் ஜானகியின் அருகே மீண்டும் 'குவா குவா' சப்தம். இப்போது ஒரு பிள்ளை பிறந்தது. வெங்கடரமனன் எனப் பெயரிட்டார். அவன் குறும்புக்காரப் பையனுனலும்கூட வேற்று மனிதர்களின் முன் சாதுபோல் நடந்து கொள்ளுகிறுன்!

ஜானகிக்கு சினிமாவில் நடிக்க வேண்டுமென்று ஆசை ஏற்பட்டது!

ஜானகி இப்போது யோசிக்கத் தொடங்கினுர். கலையார்வம் கொண்டவர்களின் உணர்ச்சிகள் ஓரளவு அழுந்திக் கிடந்தாலும் என்ருவதொருநாள் பீறிட்டுக் கிளம்பத்தானே வேண்டும்? ஜானகி இப்போது சினிமாவில் சேர்ந்துவிடத் தீர்மானித்தார். கணவன், குழந்தைகளாயிற்று. குடும்பப் பெண் என்பதனுல் இனி நம்முள்ளேயிருக்கும் ஆசையை நிறைவேற்றிக் கொண்டால் என்ன?...நடிப்புத் தொழிலில் நாலுகாசு சம்பாதித்தால் நம் குடும்பத்துக்கும் நல்லதுதானே என்று யோசித்த பின் அவர் ஒரு முடிவுக்கு வந்தார். ஜானகி பிடிவாத குணம் கொண்டவராகவே வளர்ந்தவர் என்று குறிப்பிட்டேன். அதே பிடிவாதத்தோடு இப்போது பி. என். ரெட்டியின் முன்னுல் போய் நின்ருர் அவர்.

நாம் ஒன்றை நினைத்தால் நடப்பது வேருக இருக்கும். ஏட்டிக்குப் போட்டி நடப்பதும் இயற்கை. 'இங்கே வரக்கூடாது' என்று ஒரு இடத்திலே பலகை போடப்பட்டிருக்கும். ஆனுல் அங்கே நூறு பேராவது போவார்கள். 'வேலை காலியில்லை' என்று பலகை தொங்கும். ஆயிரமாயிரம் 'விண்ணப்பதாரர்கள்' நின்றுகொண்டிருப்பார்கள்! இதைப் போலவே பி. என். ரெட்டிக்கு ஒரு நடிகை தேவையில்லாதபோது ஜானகி அவர் முன்னுல் போய் நின்ருர்!

"ஸார்! நான் சினிமாவில் நடிக்கத் தயார். எங்கே சான்ஸ்?" என்ருர் ஜானகி.

"ஜானகி! இப்போது படஉலகம் ஒரேயடியாகக் குழம்பிக் கிடக்கிறது. குடும்பப் பெண்ணுன நீ சினிமாவில் சேருவதால் என்ன பிரயோஜனம்? பிறகு பார்க்கலாம்" என்று சொல்லியனுப்பினுர் பி. என். ரெட்டி.

முதலில் பி. என். ரெட்டி அழைத்து ஜானகி மறுத்தபோது, 'எப்படியும் நீ படவுலகிற்கு வரத்தான் போகிருய்!' என்று தீர்மானித்தார் ரெட்டி. இப்போது ஜானகி கேட்டு ரெட்டி மறுத்தபோது, 'எப்படியும் சினிமாவில் நடித்தே தீருவேன்' என்ற உறுதியோடு திரும்பினுர் ஜானகி.

அப்போதுதான் விஜயா புரொடக்ஷன்ஸ் அதிபர்களான நாகிரெட்டி-சக்ரபாணி இருவரும் படத் தயாரிப்பி லீடுபட்டிருந்தனர். டைரக்டர் தேவை என்ற பேச்சு வந்தபோது பி. என். ரெட்டி பிரசாத் அவர்களை சிபார்சு செய்தார். நடிகை-அதுவும் ஒரு புதுமுகம் தேவை என்ற பேச்சு வந்தபோது பி. என். ரெட்டி, நாகிரெட்டி-சக்ரபாணி இருவருடனும் ஜானகியின் விட்டுக்குச் சென்ருர். தன் எதிரே நின்ற மூவரையும் கண்டு அளவு கடந்த மகிழ்ச்சி கொண்டார் ஜானகி. 'சௌகார்' படத்தில் கதாநாயகி சுப்புலுவின் பாத்திரத்தில் ஜானகியை நடிக்கச்

செய்தார்கள். சுப்புலு வேஷத்தில் ஜானகி பிரமாதமாக நடித்துப் புகழ்பெற்ருர். அதற்குக் காரணம் இரண்டு. ஒன்று டைரக்ட் செய்தவர் பிரசாத்; இரண்டு அவர் ஏற்கெனவே ரேடியோ, சபா நாடகங்களில் நடித்திருந்தார். பி. என். ரெட்டி நடிக்க வர வேண்டாம் என்று சொன்னது போலவே மேக்-அப் மேன் ஹரிபாபுவும் பட உலகின் கஷ்டங்களை ஜானகியிடம் விவரித்தார். இவை யெல்லாம் ஜானகியின் உள்ளத்தில் ஒளிந்திருந்த பிடிவாத குணத்தைக் கிளப்பி விட்டன. சௌகார் படம் திரையிடப்பட்டதும் ஜானகி 'சௌகார் ஜானகி' என்ற பெயரில் புகழடைந்தார். அவருக்குப் படஉலகில் மகத்தான வரவேற்பு கிடைக்க ஆரம்பித்தது.

சௌகார் ஜானகி என்ருல்தான் அவரைப்பற்றி மக்களுக்குத் தெரியும். தான் நடித்துப் புகழ்பெற்ற படத்தின் பெயரையே பட்டப் பெயராகக் கொண்ட ஜானகி அடுத்து 'மரதலு பெள்ளி', 'ஆதர்சம்', 'பாலேரு' ஆகிய மூன்று படங்களிலும் நடித்தார். இருந்தாலும் சௌகாரில் கிடைத்தது போன்ற வெற்றி அவற்றின் மூலம் அவருக்குக் கிடைக்கவில்லை.

ஒரு நடிகை பிரபலமாக ஆரம்பித்தவுடன் மாடர்ன் தியேட்டர்ஸார் உடனே ஒப்பந்தம் செய்து கொண்டு விடுவார்கள். அவர்களுக்குத் தகுந்த சந்தர்ப்பமளித்து முன்னணிக்கு கொண்டு வருவார்கள். துணிந்து புதுமுகங்களைப் படங்களில் நடிக்கச் செய்து தக்க விளம்பரமும் தருவது அவர்கள் வழக்கம். ஜானகி தெலுங்குப் படவுலகில் பிரபலமாகியிருப்பதைக் கண்ட மாடர்ன் தியேட்டர்ஸார் தமிழ்ப் படத்தில் நடிக்க அவரை ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். 'வளையாபதி' தமிழ்ப் படத்திலும் தெலுங்குப் படத்திலும் ஜானகி நடித்தார். ஆனல் அதன் மூலம் அவருக்குப் பிரமாத புகழ் கிடைக்கவில்லை. படங்களில் நடிக்கும் மகிழ்ச்சியில் 'பூரி'த்துப் போய்விட்டிருந்தார் ஜானகி! ஆகவே கணவனைப் பிரிந்து வாடும் மனைவியின் பாத்திரத்தில் அவர் சோபிக்கவில்லை. பிறகு ஜெமினியின் 'முக்குரு கொடுகுலு' தெலுங்குப் படத்தில் நடித்தார் அவர்.

ஜானகி பிறகு மூனுவின் 'பிரபஞ்சம்' தெலுங்குப் படத்தில் நடித்தார். ஆனல் இவற்றிலெல்லாம் அவருக்குப் புகழ் கிடைக்கவில்லை. ரோஹிணியின் 'பணம் படுத்தும் பாடு' தமிழ், தெலுங்கு படங்களில் ஜானகி நடித்தார். அந்தப் படம் பிரமாத புகழ் பெருவிட்டாலும் ஜானகியின் நடிப்பு நன்ருகவே இருந்தது.

ரோஹிணியின் 'ஏழையின் ஆஸ்தி' தமிழ், தெலுங்கு படங்களிலும் நடித்தார் ஜானகி. அவைகளினுல் அவர் பெயர் கெடாதிருந்ததே ஆச்சரியம்தான். என். டி. ராமராவ் 'பிச்சி புல்லையா' படத்தைத் தயாரித்தபோது ஜானகிக்கும் சந்தர்ப்பமளித்தார். பிச்சி புல்லையா நல்லபெயர் கொடுத்தது.

ஜானகி பிறகு ஏவி. எம். 'நாகுலசவிதி' தெலுங்கு, கன்னட பாஷைப் படங்களில் நடித்தார். தமிழில் 'நாகதேவதை' என்ற பெயரில் திரையிடப்பட்ட அந்தப் படத்தில் நாக தேவதை மானஸாவாக நடித்தார் ஜானகி. படம் பிரமாத வெற்றி கண்டது. பிரதிபாவின் 'ஏது நிஜம்?' தெலுங்குப் படத்தில் ஜானகி நடித்தார். அந்தப்

படம் ஆந்திராவில் அமோக வெற்றியுடன் ஓடுகிறதாம்.

ஜானகி தற்போது சதாரமே, சரணதாசி, ஜெயம் மனதே, பாக்யரேகா, பாக்ய சக்ரா, பாக்யோதயா, பலே பாவா முதலிய பல படங்களில் நடித்து வருகிறார். நடிப்புத்துறையில் நிறைய அனுபவம் பெற்றிருக்கும் அவர், தன்வரையில் சோடை போகாமல் நடித்து வருகிறார். ஜானகி நடித்த 'ரோஜுலு மாராயி' தெலுங்குப்படம் அமோக வெற்றி பெற்றது.

ஜானகியுடன் கூடப் பிறந்தவர்கள் மூன்று சகோதரர்களும் இரு சகோதரிகளுமாவர். அவரது மூத்த சகோதரர் ராமு. ஜானகிக்கு அடுத்தபடியாகப் பிறந்தவர்தான் பிரபல நடிகை கிருஷ்ணகுமாரி. அவருக்கடுத்தவரான தேவகியும் தற்போது படங்களில் நடித்து வருகிறார். அவர் நன்கு நடனமாடவும் செய்வார். அவருக்கடுத்தவர்களான ரகுவும் பாஸ்கரும் பள்ளியில் படித்து வருகிறார்கள். ஜானகி தன் கணவருடனும் குழந்தைகளுடனும் சொந்த வீட்டில் தனிக் குடித்தனம் நடத்தி வருகிறார்.

ஜானகி எப்போதும் எளிய முறையிலே உடையுடுத்திக் கொண்டிருப்பார். வீட்டை அழகுபடுத்துவதில் அதிக அக்கறை காட்டுகிறார் அவர். குழந்தைகளுக்கு அவர் ஒரு ஆதர்ச தாயாராக இருந்து வருகிறார். அவைகளின் படிப்பு, உணவு விஷயங்களில் அவர் கண்டிப்புடன் இருக்கிறார். எளிய முறையில் வாழ்ந்தாலும் ஜானகி மேனாட்டு நாகரிக முறைப்படியே வாழ்க்கை நடத்துகிறார். வீட்டினுள்ளே கலைத் திறன் செறிந்த பொருள்களை வைத்திருப்பது போல, வெளியே வர்ணப் புஷ்பச் செடிகள் கொண்ட குட்டித் தோட்டமும் அமைத்திருக்கிறார். ஜானகி கடவுள் பக்தி கொண்டவர். பூஜை புனஸ்காரங்கள் தவறக் கூடாது அவருக்கு. எதையும் சாஸ்திரோக்தமாகச் செய்கிறார் அவர்.

பி. என். ரெட்டி, நாகி ரெட்டி-சக்ரபாணி, பிரசாத் என்றால் தாம் குவிக்கிறார் ஜானகி. 'அவர்கள் நான் என் வாழ்வில் கண்கண்ட தெய்வங்கள்' என்கிறார் அவர். பிரசாதிடம் அளவு கடந்த பக்தி உண்டு அவருக்கு. 'அவர் என்னிடமிருந்த திறமையை வெளிப்படுத்திய முறை அற்புதமானது' என்று ஆரம்பித்து விட்டுச் சம்பவமொன்றையும் குறிப்பிட்டார்.

சௌகார் படத்தில் நடித்துக் கொண்டிருக்கும்போது ஒரு நாள் சோக கட்டம் படமாக்கப்பட விருந்தது. அன்று அந்தச் சோகக் கட்டத்தில் அழுகையே வரவில்லை அவருக்கு. பிரசாத் எப்படிச் சொல்லிக் கொடுத்தும் ஜானகியின் நீலிக்கண் வறண்டு போய்க் கிடந்தது! பிரசாத் யுக்தி செய்தார்.

"கத்துக் குட்டிகளெல்லாம் படத்தில் நடிக்க வந்து பிராணனை வாங்குகிறீர்களே! என் போன்றாரின் தலை விதி!" என்று இரைச்சல் போட்டார்.

ஜானகி என்னதான் நடிகையாயிருந்தாலும் பெண்தானே! நான்கு பேர் முன்னிலையில் பிரசாத் கேவலமாகத் திட்டவே விக்கி விக்கி அழ ஆரம்பித்து விட்டார். அந்தச் சோகக் கட்டம் அற்புதமாக அமைந்து விட்டது. காட்சி முடிந்தும் கூட ஜானகியின் விக்கல் ஓயவில்லை.

"உன்னை நான் திட்டவில்லையம்மா. உன்னுள்ளே உறங்கிக் கிடந்த நடிப்புத் திறனைத் தட்டினேன். அது தன் கடமையைச் செய்தது. பைத்தியம், இதற்காகவா அழுகிறாய்?" என்று தேற்றினார் டைரக்டர் பிரசாத். இப்படிக் கூறிவிட்டு, "நடிக, நடிகையரிடம் வேலை வாங்குவதில் பிரசாத் சூரர்" என்று பெருமிதத்தோடு கூறினார் ஜானகி. ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய பாஷைகள் தெரியும் அவருக்கு. தெலுங்கையே தமிழாகப் பேசும் நடிகைகளை விட்டுவிட்டு, அழகாகத் தமிழ் பேசும் ஜானகிக்குத் தமிழ்ப் படங்களில் நிறைய சந்தர்ப்பமளிக்க தயாரிப்பாளர்கள் முன் வரவேண்டும்.

—எஸ். வி. ஸம்பத்குமார்.

★ "அயன்" ஸ்திரீ பார்ட் ★

[இன்று படவுலகில் வில்லாதி வில்லன்களாகவும் 'நிகரில்லாக் கோவல' கதாநாயகர்களாகவும், ஹாஸ்ய மேதைகளாகவும் விளங்கும் பழைய நாடக நடிகர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர், அவர்களது நாடக நாட்களில் 'அயன் ஸ்திரீ பார்ட்' போட்டவர்கள்தான். சொல்லப் போனால் ஸ்திரீ பார்ட் போடாமல் யாரும் நடிகராகியிருக்க முடியாது என்பதே உண்மை. அப்படி ஸ்திரீ பார்ட் போட்டு ரசிகர்களை மயக்கி முன்னணிக்கு வந்து, இன்று பட உலகில் சக்கைப் போடு போடும் நடிகர்களின் ரஸமான 'ஸ்திரீ பார்ட்' அனுபவங்கள் இந்தப் பகுதியில் வெளியிடப்படுகின்றன.]

இன்று நம் பட உலகின் நிகரில்லாக் கோவலனாக விளங்கும் சிவாஜி கணேசன் அயன் ஸ்திரீ பார்ட் நடிகர்களில் குறிப்பிடத்தக்கவர். மிகச் சமீப காலம் வரை நாடக மேடையில் அயன் ஸ்திரீ பார்ட் போட்டவர் அவர். கணேசனின் வாழ்க்கைச் சித்திரம் 'பேசும் பட'த்தில் வெளியிடப்பட்ட போதுகூட, "கணேசன் அயன் ஸ்திரீ பார்ட்டில் அதிகம் நடித்ததாலோ என்னவோ, அவரது அங்க அசைவுகளிலே பெண்மையின் சாயல் வீசுகிறது! அது அவரிடம் ஒரு அலாதி கவர்ச்சியை ஏற்படுத்துகிறது என்றே சொல்ல வேண்டும்!" என்று குறிப்பிட்டிருந்தேன். இன்றும்கூட கணேசன் பெண் வேஷத்தில் தோன்றினால் அசல் பெண்களை விடச் சிறப்பாகத் தளுக்கி குலுக்கி நடிப்பார்!

முதன் முதலாக கணேசன் பெண் வேஷமிட்டது பால ருக்மிணியாகத்தான். இதில் ஒரு பொருத்தம் என்னவென்றால் ருக்மிணியை கிருஷ்ணன் 'அடித்துக் கொண்டு போய்' விட்டது போல் கணேசனும் பெண் வேஷத்திலிருக்கும் போது சிலர் அவரைக் கடத்த முயற்சித்தனர்! அந்தச் சம்பவத்தை கணேசன் கூறியபோது எனக்கு ஆச்சரியமாக இல்லை!

கணேசன் ராமாயணம், மயில் ராவணன், அபிமன்யு, பதிபக்தி, மகாபாரதம், கண்டி ராஜா, மனோஹரா, ரத்னாவளி, நூர்ஜஹான் முதலிய நாடகங்களிலெல்லாம் பெண் வேஷம் போட்டிருக்கிறார். கணேசன் பெண் வேஷங்களிலேயே பெரும்பாலும் நடித்து வந்ததால் முழங்காலுக்குக் கீழ் தொங்கும் கருநாகக் கூந்தலை வளர்த்து வைத்திருந்தார். கதா நாயகன் தோட்டத்தில் ஓடிப் பிடிக்கும் போது, இந்தக் கூந்தலைப் பிடித்திழுத்தாலும் கணேசன் தான் கீழே விழுவாரே தவிர, இழுப்பவரின் கையோடு கூந்தல் வரவே வராது!

கணேசன் அப்போது சிங்கநல்லூரில் 'மயில் ராவணன்' நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்தார். அதிலே சந்திரசேனா பாத்திரத்தில் தோன்றி அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்தார். முதல் நாள் நாடகத்தில் அவர் சந்திரசேனாவாக தோன்றி நடித்துக் கொண்டிருந்தபோது, இரண்டாவது வரிசையில் நான்கு முஸ்லீம்கள் உட்கார்ந்து அடிக்கடி கை தட்டி அவரது நடிப்பைப் பாராட்டினார்கள். கணேசனுக்குப் பெருமையாகக்கூட இருந்தது! மறுநாள் அந்த நால்வரும் அதே இடத்தில் உட்கார்ந்து பாராட்டினார்கள். 'நம் நடிப்பு ரசிகர்களைத் திரும்பத் திரும்ப வரச்செய்து வருகிறது' என்று நினைத்து மேலும் தளுக்கிக் குலுக்கி நடித்தார். மூன்றாம்

நாளும் நாடகத்தில் அதே இடத்தில் அந்த நால்வர் காட்சியளித்தனர். கணேசன் முதலாளியிடம் சொன்னார். அவருக்கு ஏனோ மனதில் திகில் ஏற்பட்டது. அவர் தங்கள் ஆள் ஒருவனை ஒற்றனாக அனுப்பி வைத்தார். அவன் வந்து திடுக்கிடும் செய்தி ஒன்றைச் சொன்னான். மறுநாள் நாடகம் நடக்கும் போது அவர்கள் கணேசனை பெண்ணுடையிலேயே தட்டிக் கொண்டு போகப் போவதாகச் சொன்னான்.

அப்போது கம்பெனியில் ஜனார்த்தனம் என்பவர் இருந்தார். ஆஜானுபாகுவாக பீமனைப் போலிருப்பார் அவர். அவருக்கு விஷயம் தெரிவிக்கப்பட்டது. நாடகம் ஆரம்பமாகியது. கணேசன் மேடையில் தோன்ற வேண்டிய சமயம் அந்த நான்கு பேரும் உள்ளே வந்தனர். ஜனார்த்தனம் கை ஜாடை காட்டி அவர்களைப் பின்புறம் அழைத்துச் சென்றார். அங்கே இன்னும் சிலரும் இருந்தனர். எல்லோருமாக அந்த நான்கு பேரையும் என்றும் நினைவிலிருக்கும் படி எலும்புகளை எண்ணிக்கொண்டு அனுப்பி விட்டனர்!

கணேசனை சந்தித்துப் பேசிய பின், எஸ். வி. சுப்பய்யாவின்

நடிகர் எஸ். வி. சுப்பய்யா...

இந்த மங்கை நல்லாள் தான்...

வீட்டுக்குச் சென்றேன் நான். அவர் பம்பாய் மெயில் நாடகத்தில் காமாட்சி என்ற பெண் வேஷத்தில் நடித்ததைப் பற்றிக் கூறினார். பிறகு ஒரு ரசமான விஷயத்தையும் கூற ஆரம்பித்தார்.

நாடகக் கம்பெனிகளில் நிரந்தர நடிகராக இருக்கவில்லை அப்போது. ராஜபாளையத்தருகே ஒரு கிராமத்தில் ஒரு ஸ்பெஷல் நாடகம் ஏற்பாடாகி யிருந்தது. சுப்பய்யா நாடகத்திற்குப் போயிருந்தார்.

சம்பூர்ண ராமாயண நாடகம் நடக்க வேண்டியது. எல்லா ஏற்பாடுகளும் முடிந்து நாடகமும் ஆரம்பமாகியது. கடைசியில் அசோக வன சீன் வர வேண்டிய சமயம் வந்தது. நாடகத்தின் ஆரம்பத்தில் தங்களுக்கு வேலையில்லாததால் ஆஞ்சனேய வேஷதாரியும் சீதை வேஷதாரியும் போய் நன்றாகப் 'போட்டு விட்டு' வந்திருந்தார்கள். அளவுக்கு மிஞ்சிப் போய்விட்டதால் சீதை வேஷதாரி படுத்தவன் எழுந்திருக்கவேயில்லை. அவன் 'சொர்க்க'த்துக்கோ அதற்கும் மேலே இன்பமயமான இடத்துக்கோ போய் விட்டிருந்தான்.



சிவாஜி கணேசன். தெரிகிறதா!

ஆஞ்சநேய வேஷதாரி நிதானம் வந்தும் வராமலுமிருந்தான்! அவர்கள் சீன் வந்துவிட்டது. அப்போதுநான் விவரம் அறிந்த காண்ட்ராக்டர் தலையில் கை வைத்துக் கொண்டார். அவருக்குத் தைரியம் சொன்ன ஒருவன் சுப்பய்யாவிடம் வந்து சீதை வேஷம் போட்டுச் சமாளிக்க வேண்டுமென்று கெஞ்சினான். முதலில் மறுத்தாலும் தொழிலின் கௌரவத்தை முன்னிட்டு ஒப்புக் கொண்டார். தலைவிரி கோலமாக சீதை வேஷத்தில் அசோகவனத்துக்குப் போனார். அனுமான் முகத்தில் தண்ணீர் தெளித்து அனுப்பி வைத்தார்கள். அசோக மரத்தின் மேல் உட்கார்ந்திருந்தான் அவன். சுப்பய்யா ஜாடையாக மேலே பார்த்துக் கொண்டிருந்தார். ஏனெனில் அனுமான் வேஷதாரி சரியான நிலையில் இல்லாததால் எந்த நிமிஷமும் விழுந்து விடுபவர்போல் மரத்தில் உட்கார்ந்திருந்தான். சுப்பய்யா ஜாடையாக அவர் இருந்த இடத்திற்குச் சற்று தள்ளியே உட்கார்ந்திருந்தார். அவர் எதிர் பார்த்தது நடந்தது. திடீரென்று அனுமான் கையிலிருக்கும் மோதிரத்துடன் 'தொபீர்' என்று விழுந்து விட்டார். விழுந்ததோடல்லாமல் 'ஐயோ' என்று கூவியும் விட்டார். அந்த அதிர்ச்சியில் மதி தெளிந்தது. அவர் சீதையோடு குடித்திருந்தார் அல்லவா? அந்த ஞாபகத்தோடு பேச ஆரம்பித்து விட்டான்.

"டேய்...வாடா! போகலாம். அங்கே காண்ட்ராக்டுகாரன் கத்துவான்" என்று கூறி சீதையின் கையைப் பிடித்து இழுக்க ஆரம்பித்து விட்டான்! லோகமாதா சீதை. அவளை தன் தாயாக மதிப்பவன் ஆஞ்சநேயன். அவள் பாதமே அவன் கண்டிருக்கிறான். இப்போது கணவனைப் பற்றிக்கூறி தேறுதல் சொல்ல வந்தவன் கையைப் பிடித்திழுக்க ஆரம்பித்து விட்டான்! சுப்பய்யா எவ்வளவு திமிறியும்கூட அவனது 'குரங்குப் பிடி'யிலிருந்து விடுபட முடியவில்லை! சீன் விட்டு விட்டார்கள்.

சுப்பய்யா இந்த ரசமான விஷயத்தைக் கூறிவிட்டு, "பெண் வேஷம் போட்டவர்களுக்குப் பல நூதனமான அனுபவங்கள் ஏற்படும். அப்படி நடிக்கப் பிரியம் கூட இருக்காது. ஆனால் ஒருவன் பெண் வேஷம் போடாமலேயே நடிகனாக வந்தான் என்றால் அது சுவாரஸ்யப்படுவதில்லை" என்றார்.

...சுப்பம்மாளாகி விட்டார் பாருங்கள்!

பிரஸாதுக்குப் பாராட்டு

சங்கீதம் பயிலும் ஒருவர், குருகுலம் முடிந்ததும் குருவுக்கு காணிக்கை செலுத்துவது வழக்கம்.

நடனம் பயின்று முடிந்து அரங்கமேறும் போது, தனக்கு நட்டுவாங்கம் செய்து வைத்தவருக்கு நடனமணிகள் தக்க மரியாதை செய்வது மரபு,

இவை போல் இன்னும் பல உதாரணங்களை அடுக்கடுக்காக நாம் சொல்லிக்கொண்டே போகலாம்.

ஆனுல் படவுலகில் இம்மாதிரி குருபூஜை என்ற சம்பவம் நடைபெறுவதில்லை. டைரக்டர் ஒருவரிடம் பணிபுரிந்து, அத்தொழிலிலே சுயமாகப் பிரகாசிக்க முன்வரும் போது, டைரக்டருக்கு தங்கள் 'குருகுல காணிக்கை'யை யாரும் செலுத்தியதாக இதுவரை நாம் கேட்டதில்லை.

ஆனுல் இத்தகைய அதிசயத்தை நேரில், கண்ணுரக் கண்டு ஆனந்திக்கும் அனுபவம் எனக்கு ஏற்பட்டது. அந்த விந்தையான செயல் சென்ற மாதம் 12-ம் தேதி தெலுங்கு வருஷப் பிறப்பு தினத்தன்று, சந்த மாமா கட்டிடத்தில் நடைபெற்றது.

மேற்படி தினத்தன்று பிரபல டைரக்டர் பிரஸாத்தின் சிஷ்யர்களான, டைரக்டர்கள் சுப்பாராவ், ரஜனி காந்த், யோகானந்த், டி. பிரகாஷ் ராவ், ரங்கநாத தாஸ் ஐவரும், தங்கள் குருவைப் பாராட்ட ஒரு விழாவை நடத்தி, தங்கள் அன்பின் பிரதிபலிப்பாக ஒரு கேடயத்தையும் அவருக்கு வழங்கினுர்கள்.

இந்தக் கோலாகலமான விழாவுக்கு, சென்னை உயர்தர நீதிபதி பி. வி. ராஜமன்னுர் தலைமை வகித்தார். டைரக்டர் எச். எம். ரெட்டி விசேஷ உரையை நிகழ்த்தினுர்

தேநீர் விருந்துடன் விழா ஆரம்பமாகியது. ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாஸன் பேசுகையில் "சம்சாரம் படத்தைப் பார்த்த பின்னரே பிரஸாத்தின் திறமையைப்பற்றி நான் அறிய முடிந்தது. தமிழ்-ஹிந்தியில் ஒரு படத்தை டைரக்ட் செய்யவேண்டுமென்று, நான் அவரிடம் கேட்டேன். உடல் நலம் சரியில்லை என்று அவர் சொன்னுர். பிரஸாத் இன்றைய தினம் எனக்கு ஒரு படத்தை டைரக்ட் செய்து தர இசைந்தால், நான் ஒரு படத்தை அவருக்காகத் தயாரிக்க தயாராக இருக்கிறேன்" என்று வாஸன் சொன்னுர்.

எச். எம். ரெட்டிதான் முதலில் பேசினுர்:

"கல்கத்தாவில் நான் காளிதாஸ் படத்தைத் தயாரித்து வந்த போது, டைரக்ஷனில் எனக்கு உதவி புரிய ஒரு நபரைத் தேடி வந்தேன். பிரஸாத் என் கண்களுக்குத் தென்பட்டார். அவரது

சிவாஜி கணேசன் பொன்னுடை போர்த்துகிருர்

கேடயத்தைக் கொடுக்கிறார் தலைவர்



டைரக்ஷன் திறமையோடு, நடிப்பிலும் அவருக்கு இருந்த ஆர்வத்தைக் கண்டு கொண்ட நான் அவரை ஒரு நடிகனாகவே கொண்டுவர விரும்பினேன். 'ஹானஸ்ட் – ரோக்' படத்தில் அவரை நடிக்க வைத்தேன். அவரது நடிப்பு எனக்கு அதில் பரிபூரணத் திருப்தியை அளித்தது. ஆனால் பிரஸாத் இன்று டைரக்ஷன் துறையில் முன்னேறி விட்டார். அவரது முன்னேற்றத்தைக் கண்டு சந்தோஷப்படும் நான், அதே சமயம் ஒரு சிறந்த நடிகரை பிரஸாதின் மூலம் இழந்து விட்டது குறித்து வருத்தப்படவும் செய்கிறேன்'' என்றார்.

பிரஸாதை படவுலகுக்கு அறிமுகப்படுத்திய பெருமை தனக்கு உரியது என்பதைப் பார்க்க தான் பெருமைப்படுவதாக அவர் தெரிவித்தார்.

அடுத்து நடிகர் சிவாஜி கணேசன், 'மனோகரா' படத்தைத் தயாரித்த மனோஹர் பிக்சர்ஸ் சார்பில் டைரக்டர் பிரஸாதுக்குப் பொன்னாடை போர்த்தி விட்டு, தன் வாழ்நாளில் தான் கண்ட சிறந்த டைரக்டர்களுள் பிரஸாதும் ஒருவர் என்றும், நிறைந்த அனுபவமும், பொறுமைசாலியுமான அவரிடம் நடிக்க தான் மிகவும் விரும்புவதாகவும் கூறினார்.

''என்னை படவுலகுக்கு அறிமுகப் படுத்தியவர் பிரஸாத்தான். நான் இன்றைய நிலையில் இருப்பதற்கும் முழுமுதற்காரணம் அவர் தான்!'' என்று என். டி. ராமராவ் உணர்ச்சியுடன் பேசினார். ஒரு பட்டுச் சால்வையை பிரஸாதுக்கு அவர் போர்த்தினார்.

''சமூகப் படங்களில் நான் நடிக்கத் தகுதியற்றவன் என்று பிறர் சொல்லி வந்த நாளில், சம்சாரம் சமூகப் படத்தில் என்னை நடிக்க வைத்து, சமூகப் படங்களிலும் நான் நன்கு சோபிப்பேன் என்பதை எடுத்துக் காட்டியவர் பிரஸாத்தான்'' என்று நாகேஸ்வர ராவ் சொன்னார்.

டைரக்டர் பி. என். ரெட்டி பேசுகையில் ''என் சகோதரர் நாகி ரெட்டியும், சக்ரபாணியும் விஜயாவின் சார்பில் 'சாவுகார்' படத்தைத் தயாரிக்க முனைந்த போது, டைரக்டர் ஒருவரை சிபாரிசு செய்யும்படிக் கேட்டார். என் கண்களுக்கு பிரஸாத்தான் தென்பட்டார். நானும் அவரையே சொன்னேன். என் நம்பிக்கையை பிரஸாத் பூர்த்தி செய்துவிட்டார்!'' என்று சொல்லி, அவரது திறமைகளை எடுத்துக் கூறினார்.

அடுத்து சாவித்திரி, ஜமுனா, ஹாஸ்ய நடிகர்களான கே. சாரங்கபாணி, ரேலங்கி, முதலியோர் பேசினார்கள்.

தலைவர் ராஜமன்னார் பேசுகையில் பிரஸாதின் டைரக்ஷனில் காணப்படும் உயரிய பண்புகளைப் பாராட்டினார்.

ரஜனிகாந்த் வந்தனோபசாரத்துடன் இந்த விழா முடிவடைந்தது.

எனது முதல் அனுபவம்

விஜயவாடாவிலிருந்த துர்க்கா ஸினிடோன் ஸ்டுடியோவின் 'மேக்-அப்' அறையில் உட்கார்ந்திருந்தேன் நான். டைரக்டர் ஸி. புல்லய்யா அவர்களுக்குச் சொந்தமான அந்த ஸ்டுடியோவில் 'சீதா கல்யாணம்' என்ற தெலுங்குப் படம் அப்போது தயாராகி வந்தது. ஸி. புல்லய்யா அந்தப் படத்தில் நடிப்பதற்காக என்னை அழைத்திருந்தார்.

எனக்கு அப்போது வயது பதினொன்றிருக்கும். இயல்பாகவே எனக்கு சினிமா பார்ப்பதில் அதிக ஆர்வம் உண்டு. எங்கள் ஊரில் எந்தப் படம் திரையிடப்பட்டாலும் சரி, திரையிடப்பட்ட தினத்திலிருந்து அது எங்கள் ஊரை விட்டுப்போகும் வரை, அந்தப் படத்தைப் பார்த்துத் தீர்த்து விடுவேன். இதனால்தானோ என்னவோ, அன்று பார்த்த பல படங்களின் வசனம் பாடல்கள்கூட இன்னமும் எனக்கு நன்றாக நினைவிருக்கின்றன.

இந்தச் சமயத்தில் சினிமாவில் நடிப்பதற்கே டைரக்டர் புல்லய்யாவிடமிருந்து அழைப்பு வந்ததென்றால், என் சந்தோஷத்திற்குக் கேட்கவா வேண்டும்?

நான் படம் பார்க்கும்போதெல்லாம் 'நம்மைப் போன்ற மனிதர்கள்தான் அதில் நடிக்கிறார்கள்' என்ற நினைப்பே எனக்கு வராது. ஏதோ, அபூர்வமானவர்களே அதில் நடிக்கிறார்கள் என்று நினைப்பேன்.

ஆகவே சினிமாவில் நடிக்க புல்லய்யா அவர்கள் கூப்பிட்டபோது என் சந்தோஷம் இரட்டிப்பு மடங்காகி விட்டது.

சந்தோஷம் எங்கே தோன்றுகிறதோ, அங்கே சங்கடமும் உடன் பிறப்பது இயல்புதானே? என் தாயார் என்னை சினிமாவில் நடிப்பதற்கு அனுமதிக்க மாட்டேன் என்று பிடிவாதம் செய்ய ஆரம்பித்து விட்டார். என் தந்தை அப்போதைக்கு என்னைச் சமாதானப்படுத்தி விட்டு, என் தாயாரிடம் ''நான் குழந்தையை விஜயவாடாவுக்கு அழைத்துப் போகப்போகிறேன். சும்மாதான் ஊரைப் பார்க்க'' என்று சொல்லி விட்டு, என்னை அழைத்துக்கொண்டு துர்க்கா ஸினிடோனுக்கு வந்தார்.

எனக்கு படத்தில் கல்யாண சீதையின் பாத்திரம் கொடுக்கப்பட்டிருந்தது. ஜனகர் சபையில் ராமர் வில்லை ஒடித்து சீதையைக் கல்யாணம் செய்து கொள்கிறார் அல்லவா? அந்தக் கட்டத்தில் நடிப்பதற்காகத்தான் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தேன். பால சீதை, கல்யாண சீதை, ஆரண்ய சீதை இப்படியாக இரண்டு மூன்று சீதைகளாக வெவ்வேறு நடிகைகள் அந்தக் காலத்தில் நடிப்பதுண்டு.

'கல்யாண சீதை' வேஷம் போட்டுக் கொண்டு வருவதற்காக நான் 'மேக்-அப்' அறைக்கு வந்தேன்.

'மேக்-அப்' போட்டுக் கொள்ள எனக்கு ரொம்பவும் ஆசையாக இருந்தது. நானும் கொஞ்சம் பவுடரை எடுத்து அப்பிக் கொண்டேன். எனக்குப் பட்டுச் சேலையும், நகைகளும் அணிவித்தார்கள்.

'சர்வாலங்கார பூஷிதை'யாக என்னையே நான் பார்த்துக் கொள்வதற்கு ஒரே பெருமையாக இருந்தது.

இவ்வளவு அலங்காரங்களையும் செய்து கொண்டபின் 'மேக்-அப்' அறையிலேயே உட்கார்ந்திருந்தேன்.

நிமிஷம் மணியாக மாறிக்கொண்டிருந்தது. என் மனதிற்குள் இனம்

புஷ்பவல்லி

தெரியாத ஒரு திகில்–"நம்மை இன்னும் கூப்பிடவில்லையே, ஒருக்கால் வேண்டாமென்று சொல்லி விடுவார்களோ?" என்று பயம் கவ்விக் கொண்டது.

நல்லவேளை! சிறிது நேரத்திற்குள் என்னை 'ஸெட்'டுக்கு அழைத்தார்கள். எனக்கு ஒரு பாட்டு கொடுக்கப்பட்டது.

"என் மனதிற்குகந்த நாதன்
கிடைத்து விட்டான் எனக்கு"

என்று பொருள் படும்படியான அந்தப் பாட்டை, ராமரைப் பார்த்து நான் பாடவேண்டும்.

இந்தப் பாட்டை ஒரே ஒரு தடவைதான் பாடினேன். அதுவே 'ஓ.கே'யாகி விட்டது.

இந்தப் படத்தில் நான் மேற்படி காட்சியில் நடித்ததுதான் நினைவிருக்கிறதே தவிர, பட ரூபத்தில் என் நடிப்பை நான் பார்த்த நினைவு எனக்கு இல்லவேயில்லை.

ஒரு படத்தையும் விடாமல் பார்க்கும் நான், நான் நடித்த முதல் படத்தையே பார்க்காமற் போய் விட்டதும் ஆச்சர்யப்படக் கூடிய விஷயம்தானே!

இந்தப் படத்தில் நடிப்பதற்காக நான் மூன்று நாட்கள் என் தாயாருடன் அழுது பிடிவாதம் செய்தேன்; மூன்று நாட்கள் படப்பிடிப்பில் கலந்து கொண்டேன்; முன்னூறு ரூபாய் சம்பளமாகப் பணமும் கொண்டு வந்தேன்.

கடைசியில் ஒன்று. நான் படப்பிடிப்புக்காக விஜயவடாவில் தங்கி யிருந்த மூன்று தினங்களிலும் மூன்று சினிமாக்களை அங்கு பார்த்துத் தீர்த்து விட்டேன்!

பிரமோதாவின் 'ஹரிச்சந்திரா'வில் ஜி. வரலக்ஷ்மி சந்திரமதியாக நடிக்கிறார் என்றால், அவரது அன்பணைப்பிலே சோகம் ததும்ப நிற்கும் அச்சிறுவன் லோகிதாசனுகத் தானே இருக்க வேண்டும்?

வட இந்திய வெள்ளித்திரை

ஏக் இ ரஸ்தா

தயாரிப்பு: பி. ஆர். பிலிம்ஸ்

டைரக்ஷன்: பி. ஆர். சோப்ரா

நடிகர்கள்: அசோக் குமார், சுனில் தத், கே. என். சிங், மீனாகுமாரி, டெய்ஸி இரானி

விதவா விவாகத்தை மட்டும் போதிப்பதாக இல்லை இக்கதை. ஏனென்னில் அவள் ஒரு அன்புத் தாய்; ஆதர்ஸ மனைவி. எந்தக் காரணத்துக்காகவும் அவள் இன்னொருவனை மணந்து, ஒரு குழந்தையையும் பெற்றாள் என்பது கதாசிரியர் செய்து விட்ட மன்னிக்க முடியாத குற்றம். இந்த ஒரு மகத்தான குறையைத் தவிர 'ஏக்இரஸ்தா' ஓர் அற்புதமான படம்.

அமார் மாலதி-தம்பதிகளின் ஒரே குழந்தை ராஜா. அமார் பிரகாஷின் மில்லில் வேலை பார்த்து வருகிறான். அமாரின் வீட்டிற்கு சிநேகபாவத்தில் பிரகாஷ் அடிக்கடி வந்து போவது வழக்கம்.

மில்லில் ஒரு திருட்டு நடந்து விடுகிறது. அமார் அதைக் கண்டு பிடித்து, திருடியவனுக்கு தண்டனை வாங்கித்தருகிறான். சிறையிலிருந்து திரும்பிய அவன், அமாரின் மீது வண்டியை ஏற்றிக் கொன்று விடுகிறான். மாலதி விதவையாகிறாள்.

அவளது அவல நிலை கண்டு, நடனப்பள்ளி ஒன்றை வைத்து உதவி செய்கிறான் பிரகாஷ். உலகம் அவ்விருவரையும் பிணைத்து பலவாறான வதந்திகளைக் கிளப்பி விடுகிறது. வதந்திகளுக்கு முடிவு கட்ட விரும்பிய பிரகாஷ், துணிந்து மாலதியையே விவாகம் செய்து கொள்கிறான்.

நிம்மியும் நிருபா ராயும் 'பாய்பாய்' படத்தில்.

கதை இத்துடன் முடிந்து விட்டதென்று நினைக்காதீர்கள்! மேலே தொடருவோம்.

மாலதியின் மகன் ராஜா இருக்கிறானே, அவன் பிரகாஷை தன் தந்தையாக ஏற்க மறுக்கிறான். அமாரைக் கொன்றுவிட்டு, தன் தாயையும் கொல்ல வந்திருக்கிறான் என்று நினைக்கிறது அக் குழந்தையுள்ளம். அக்குழந்தையின் மனப்போராட்டங்களின் சுழற்சியையும், அது தெளிவு பெற்று பிரகாஷை தந்தையாக ஏற்றுக் கொள்வதையும் காட்டிவிட்டு படம் முடிகிறது.

வட இந்தியப் படவுலகில் தற்போது முன்னணியில் நிற்கும் பண்டிட் முக்ராம் ஷர்மா கதை-வசனத்தை எழுதியிருக்கிறார். கதையில் 'விதவா விவாகம்' ஆதரிக்கப் படுகிறது என்பதைத்தவிர புதுமை ஒன்றும் இல்லை. ஆயினும் சுவாரஸ்யமான சம்பவங்களாலும், உணர்ச்சி மயமான கட்டங்களாலும் திரைக்கதையை அமைத்து, அதை ஒரு உன்னதப்படமாக

காதிலே இம்மாதிரி கை வைத்துப் 'போஸ்' கொடுத்தால் பாடப் போகிறார் அவர் என்பது அர்த்தமில்லை.

'பாய் பா'யில் ஷியாமா

மாற்றியிருக்கிறார் அவர். அதற்காக அவரைப் பாராட்டலாம்.

அசோக்குமார்தான் இதில் கதாநாயகன். பிரகாஷாக வரும் அவரது நடிப்பில் அப்பழுக்கு கூறமுடியாது என்றாலும், சலித்துப்போன அவரது பழைய பாணியையே, பல கட்டங்களில் அவரது நடிப்பு காட்டுகிறது. மீனகுமாரியின் நடிப்பு தரமாக இருக்கிறது. சுனில்தத்தின் நடிப்பில் இன்னும் தேர்ச்சி காணப்படவில்லை.

படத்தில் இவர்களையெல்லாம் விட நம்மைக் கவருவது ராஜாவின் நடிப்பு. இந்த ராஜாவாக வருவது ஒரு பெண் குழந்தைதான் என்பதை அறியும்போது மேலும் ஒரு சபாஷ் சொல்லலாம் போலிருக்கிறது.

டைரக்ஷன் தரமாக இருக்கிறது. ஒளி, ஒலிப்பதிவுகள் உயர்தரம் என்று சொல்ல முடியாவிட்டாலும், பாராட்டும் வகையில் இருக்கின்றன. சங்கீதம் இனிமையாக இருக்கிறது.

பம்பாயில் 'தேவதா'

கணவனே கண் கண்ட தெய்வத்தை, 'தேவதா' என்ற பெயரில் நாராயணன் கம்பெனியார் ஹிந்தியில் தயாரித்து வருகிறார்கள். இந்தப் படத்தில் நாகராணியாக நடிக்க வைஜயந்திமாலா ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். இந்தக் காட்சி பூராவும் 'கேவா கல'ரில் தயாரிக்கப்படும். சமீபத்தில் 'நாகராணி' வைஜயந்திமாலா, ஜெமினி கணேசன் முதலியோர் தோன்றும் சில காட்சிகள் பம்பாய் மெஹ்பூப் ஸ்டுடியோவில் சுடப்பட்டன. அஞ்சலிதேவி இப் படத்தின் பிரதம பாகத்தில் நடிக்கிறார். பட்டண்ணா டைரக்ட் செய்கிறார்.

சர்வோதயாவின் 'புது வாழ்வு' தமிழ்ப் படம் மிக விரைவில் திரைக்கு வரவிருக்கிறது. நியூடோன் ஸ்டுடியோவில் தயாரான படம் இது.

பாகவதர், பாலய்யா, கிருஷ்ணன், மதுரம், மாதுரி, லலிதா, ஆழ்வார் குப்புசாமி, துளசி, தங்கவேலு. துரைராஜ், கமலம் முதலியோர் புதுவாழ்வு நடிகர்கள்.

ஸ்டுடியோ விஜயம்

"உலகத்தில் ஒரு ஆண் வெற்றி பெற முடியாத போர் முனை எது?" என்று பொது அறிவைச் சோதிக்க ஒருகேள்வியைக் கேட்பதானால், "பெண்களுடன் வாதாடி வெற்றி பெறுவதுதான்!" என்று நான் பதில் சொல்வேன்.

பெண்களிடம் இப்படி வாதாடி வெற்றி பெற முடியாது என்பதை நான் மட்டும் சொல்லவில்லை. உலகத்தில் நன்கு அனுபவம் பெற்ற எத்தனையோ பெரியார்கள் கூறியிருக்கிறார்கள்.

சரித்திரங்களும் இதற்குப் பக்க பலமாக இருந்து வருகின்றன.

இதையெல்லாம் நான் இங்கு ஏன் சொல்கிறேன் என்று நீங்கள் கேட்கிறீர்களல்லவா?

இதையெல்லாம் நான் சொல்வதற்கு முன்னால், வாஹினிஸ்டுடியோவில் ஜெமினி கணேசன், சாவித்திரியிடம் இதைச் சொல்லி வந்தார்.

ஜெமினி கணேசன், வாஹினியில் சாவித்திரியுடன் இப்படிச் சொல்லி வந்தார் என்றால், அது வெறும் பொழுது போக்குக்காக இருக்குமா?

அங்கே தயாராகும் 'பத்தினித் தெய்வம்' படத்தில்தான் அவர் சாவித்திரியிடம் இப்படிச் சொல்லுகிறார்.

விஷயத்தைச் சொல்லாமல் வேறு எங்கெங்கோ தாவுகிறாரே என்று நீங்கள் குறைப்பட்டுக் கொள்ளாதீர்கள். இதோ சம்பவத்தை நான் பார்த்தது பார்த்தபடியே சொல்லிவிடுகிறேன்.

நம் நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் பெருகி வந்தாலும், மருதநாட்டிலே மட்டும் வேலைக்கு ஆள் தேவையாக இருந்தது.

ஊரை விட்டுக் காதலி பொன்னியுடன் ஓடிவந்து விட்ட ராஜேந்திரன் அச்செய்தி கண்டு பூரித்துப் போகிறான்.

கட்டிளம் காளையான அவனுடைய காதலி பொன்னியும் சந்தோஷப்படுகிறாள்.

ராஜேந்திரன் வேலைக்குக் கிளம்புகிறான். மருதநாட்டின் படையில் அவனுக்கு வேலை கிடைக்கிறது. வேலைக்குச் சேர்ந்த அன்றிரவே அரண்மனையைக் காவல் காக்கும்படி உத்தரவு வருகிறது.

அரண்மனைக்குக் கிளம்ப ஆடை அணிகளை அணிந்து தன்னை தயார் படுத்திக் கொண்டிருக்கிறான் ராஜேந்திரன்

நமது பிரத்யேக காமிரா நிபுணர் ஸ்டுடியோக்களை சுற்றி வருகிறார்.

அப்போது அவனுடைய 'இதய ராணி'யான பொன்னி, அவன் அணியவிருந்த தலைப்பாகையைத் தன் தலையில் வைத்துக் கொண்டு, அவனுடைய நீண்ட வாளையும் எடுத்துக் கொண்டு அங்கு வருகிருள்.

அலங்காரம் செய்து கொண்டிருக்கும் தன் ஆசை நாயகனின் முதுகை அந்த வாளால் பின்புறமிருந்து குத்துகிருள் பொன்னி. விளையாட்டுக்காகத்தான்!

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கும் ராஜேந்திரன், வாளும் தொப்பியுமாக நிற்கும் பொன்னியைப் பார்த்து, "அட போர் வீரனைப் போலவே இருக்கிறதே!" என்று ஆச்சர்யத்தோடு சொல்கிருன்.

"போலவே என்ன? எங்களை வெற்றி கொண்டதாக வரலாறே கிடையாதே!" என்று சவால் விடுக்கிருள் பொன்னி.

போர் செய்வதில் மட்டும் ராஜேந்திரன் கெட்டிக்காரன் அல்ல; பெண்களுடன் பழகுவதிலும் கைதேர்ந்தவன். அவன் பொன்னியை எதிர்த்து வாதாடவேயில்லை, அதற்குப் பதில் நான் ஆரம்பத்தில் சொன்ன பதிலையே, சற்று விஸ்தாரமாகச் சொல்கிருன்.

"ஆமாம் பொன்னி! நீ சொல்வது உண்மைதான். இதை மறுக்க எந்த வீரனுக்குமே தைரியம் கிடையாது. உங்கள் கண் வீச்சுக்கு முன் எங்கள் வாள் வீச்சு என்ன செய்ய முடியும்? உங்கள் புன்னகை ஒன்றே போதுமே, மின்னும் வேலெல்லாம் முனை மழுங்கி விழ!" என்று கவித்வத்தோடு பதில் சொல்கிருன்.

பொன்னி புன்னகை புரிகிருள். 'வாதத்தில் வெற்றி பெற்று விட்டோம்' என்பதைத் தவிர, அந்தப் புன்னகைக்கு வேறு என்ன அர்த்தம் இருக்கிறது!

வி.ஆர்.வி. புரொடக்ஷன்ஸ் 'பத்தினித் தெய்வ'த்தில்ராஜேந்திரனுகவும், பொன்னியாகவும் வருவது யார் என்பதைப் பற்றி நான் நேயர்களுக்கு தனியே எடுத்துச்சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். வி. யெச். நாராயண மூர்த்தி டைரக்ஷனில் தயாராகிறது இப்படம்.

சாவித்திரி, ஜெமினி கணேசன் தவிர, வீரப்பா, ராஜசுலோசனு

வி. ஆர். வி.யின் பத்தினித் தெய்வம் செட்டுக்கு வெளியே டைரக்டர் நாராயணமூர்த்தியும் மற்ற டெக்னீஷியன்களும்.



மற்றும் பலரும் 'பத்தினித் தெய்வ'த்தில் நடித்து வருகிறார்கள்.

* * *

வாஹினியில் 'பத்தினித் தெய்வம்' ஸெட்டில் சந்தித்த சாவித்திரியை அடுத்தபடியாக 'அமர தீபம்' ஸெட்டில் சந்தித்தேன்.

'அமர தீபம்' 'ஸெட்டி'ல் சாவித்திரியை நேயர்களுக்கு நான் ஏற்கனவே அறிமுகப்படுத்தி யிருந்தாலும், அதை மீண்டும் ஞாபகப் படுத்தி விட்டு நான் பார்த்த படப் பிடிப்பையும் சொல்லுகிறேன்.

'அமர தீப'த்தில் சாவித்திரி அருணா என்ற பாத்திரத்தில் வருகிறார். மோட்டார் கம்பெனியின் சொந்தக்காரர் அவளது தந்தை. அவள் வீட்டிலேயே வளர்ந்து வருகிறான் அவளது அத்தான் சுகுமார்.

திருமணம் என்றால் இயல்பாகவே வெறுத்து வரும் அருணா, தன் தந்தை ஒருநாள் தன் திருமணம் சம்பந்தமாக பேச்சை ஆரம்பித்ததால் வீட்டை விட்டே ஓடி வந்து விடுகிறாள்.

வந்த இடத்தில் தங்குவதற்காக ஒரு ஓட்டை பஸ்ஸில் குடியேறும் அருணா. அங்கு அசோக் என்ற வாலிபனைச் சந்திக்கிறாள். அவர்களது சந்திப்பிலேயே, இதயத்தையும் ஒருவரை யொருவர் அறியாமல் பறிகொடுத்து விடுகிறார்கள்.

சம்பவங்கள் பல சூழ்கின்றன. அசோக் மூளை குழம்பிப்போனதால் ஒரு 'ஜிப்ஸி' கூட்டத்துடன் இணைந்து விடுகிறான். அங்கே கட்டழகி ரூபா, அவன் கண்களில் சிக்கி, அவன் கருத்தையும் ஒருங்கே கவர்ந்து விடுகிறாள்.

நாளடைவில் அசோக், அருணா என்பவளைக் காதலித்து வந்தான் என்ற செய்தி ரூபாவுக்கு தெரிந்து விடுகிறது. அதே போல் ரூபாவுடன் மையல் கொண்டிருக்கிறான் அசோக் என்ற விவரமும் அருணாவுக்கு தெரிய வருகிறது.

முகவுரை ஒரு வழியாக முடிந்து விட்டது. இனி நான் பார்த்த காட்சியின் விவரத்தைச் சொல்கிறேன் கேளுங்கள் :

அருணா தன் வீட்டின் மாடியில் நின்று கொண்டிருக்கிறாள். அவள் வீட்டு வாயிலின் முன் அசோக் ரூபா இருவரும் தங்கள் கோஷ்டியுடன் நடனமாடிக் கொண்டிருக்-

'அமரதீபம்' படத்தின் உணர்ச்சிகரமான கட்டங்களில் ஒன்று இது. இங்கே சிரிக்கும் நடிகர்கள் படத்தில் அழுவார்கள்.



'அமரதீபம்' படத்தில் நடிக்க வந்த தங்கவேலுவும், ஜூபிலி பிலிம்ஸுக்காக வந்திருந்த டி. ஆர். ரகுநாத், ஸ்ரீராம் கோஷ்டியும்.

கிறார்கள். படப்பிடிப்பு இப்போது தான் ஆரம்பிக்கிறது.

மாடியிலிருக்கும் அருணா தன் காதலன் அசோக்கை அங்கிருந்து பார்த்து விடுகிறாள்.

அவள் மனம் குழம்புகிறது; வேதனையில் அவள் உள்ளம் வெடித்துவிடும் போலிருக்கிறது.

தன் ஆசைக் காதலன் தன் கண்ணெதிரிலேயே ரூபாவுடன் நிற்பதென்றால்?

அருணாவுக்கு உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

தன்னை மறந்து, தான் இருக்கும் இடத்தையும் மறந்து, சூழ்நிலையையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, ''அசோக்!...'' என்று பலமாகக் கூவுகிறாள்.

அவளது கூக்குரலைக் கண்டு அங்கு வந்து பார்க்கிறான், அருணாவின் அத்தான் சுகுமாரன்.

சுகுமாரனைப் பற்றி இங்கு ஒரு சில வார்த்தைகள் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

மனிதகுலத்தில் உதித்த மமதையே உருவான மிருகம் அவன். அருணாவை அடைய விரும்பி, நாளெல்லாம், மாதமெல்லாம், வருடமெல்லாம் தவங்கிடந்து வருகிறான் அவன்.

அசோக்கை அருணா நேசிப்பதறிந்த அவன் இயற்கையின் நியதிப்படி வில்லனாக மாறி விடுகிறான்.

விடுவிடென்று வாயிலுக்கு விரைந்து வந்து அசோக்கை அப்பால் போகும்படிச் சொல்கிறான்.

''வீடு உனக்குச் சொந்தம். ஆனால் தெருவுக்கு உரிமை கொண்டாடக்கூடிய தனி மனிதனல்ல நீ! இது பொதுமக்களின் சொத்து. இங்கே நாங்கள் நடனமாடுவதைத் தடுக்க நீ யார்? அப்பாற் போகச் சொல்வதற்கு உனக்கு என்ன உரிமை இருக்கிறது?'' என்ற தோரணையில் அசோக் அவனிடம் பொறுமையுடன் கேட்கிறான்.

எரிமலை குமுற ஆரம்பித்தால், மலை வாய் வெடித்து, தீக்குழம்பு கிளம்ப வேண்டியதுதானே.

வாக்குவாதத்தில் ஆரம்பமான அது சண்டையில் வந்து நிற்கிறது.

ஆணவம் நிறைந்த சுகுமார் அசோக்கை ஒரு தூணில் பிணைத்து சவுக்கால் அடிக்கிறான்.

தன் காதலன் கட்டுண்டு அடிபடுவதைக் காணச் சகியாத ரூபா கதறிக் கண்ணீர் வடிக்கிறாள். அசோக் அடிபடுவதைப் பார்த்தும், தடுக்க முன்வராத அருணாவின் உருவம் அவளுக்குத் தென்படுகிறது.

ஒரு பெண்ணின் உள்ளத்தையும் உணர்ச்சியையும் மற்றொரு பெண் தானே உணரமுடியும்?

ரூபா வேகமாக அருணாவிடம் மாடிக்கு விரைகிறாள். அசோக்கை சுகுமாரிடமிருந்து தடுத்துக் காப்பாற்றும்படிக் கேட்கிறாள். முடியாது என்று சொல்லிவிட்டுச் சிலைபோல் நிற்கிறாள் அருணா.

சிலையென நிற்கும் அவளை இழுத்து, "பார்! நன்றாகப் பார்! நீ மனதார நேசிக்கும் ஒருவருக்கு இம்மாதிரியான துர்ப்பாக்கியமான கதி நேர்ந்திருந்தால் நீ பார்த்துக் கொண்டு சும்மா இருப்பாயா?" என்று பலவாறு உலுப்புகிறாள் ரூபா.

ரூபாவும் ஒரு பெண்தான்; அவள் உள்ளம் வெடித்து வார்த்தைகளாகச் சிதற ஆரம்பித்தபோது, உறங்கிக் கிடந்த அருணாவின் 'பெண் தன்மை'யும் விழித்தெழுந்து, ஆத்திரத்தில் அவள் பழி வாங்க முனைந்து மிருகத்தனமாக நடந்து விட்ட அவளது கீழ்த்தரமான செய்கையைக் கொன்று விடுகிறது. அருணா அசோக்கிடம் விரைந்தோடி வருகிறாள்.

அசோக்கின் முன் 'போதும் அடித்தது' என்று சுகுமாருக்கு எச்சரிக்கை விடும் பாவத்தில் கைகளையும் நீட்டி தடுத்துக் கொண்டு நிற்கிறாள். சுகுமாரின் கரத்திலிருந்து சுழன்று வந்த சவுக்கு அருணாவைப் பதம் பார்க்கிறது.

"அருணா!" என்று நாகம் போல் சீறுகிறான் சுகுமார்.

இப்போதுதான் உண்மையிலேயே அருணாவிடம் உறங்கிக் கிடந்த பெண்மை விழித்தெழுந்து, விஸ்வரூபம் அடைகிறது.

காட்டாற்றுப் புனலில் பொங்கி வரும் புது வெள்ளக் காட்டைப்

எஸ். கே. பிக்சர்ஸ் 'குலதெய்வம்' செட்டில் நடிகர்களும் டெக்னீஷியன்களும்.





'அணையா ஜோதி'க்காக ஜெயலக்ஷ்மி பாடுகிறார்.

போல் வார்த்தைகள் பீறிட்டுக் கிளம்புகின்றன.

"ஆம், அருணாதான்! ஏன் சுகுமார் நிறுத்தி விட்டாய்? உன் வெறி தீருமட்டும் அடிப்பதுதானே? உன் மிருகத்தனம் உன்னிடமிருந்து மறையும் மட்டும் அடிப்பதுதானே? சுகுமார்! ஈவு, இரக்கம், பச்சாதாபம் இத்தனையும் உன்னிடத்திலே செத்து விட்டதா? அன்றாட ஜீவனத்தை நடத்த தங்கள் ஜீவியத்தையே நடுத்தெருவில் பலியிட்டுக் கொண்டிருக்கும் ஏழைகளைத் துன்புறுத்துவதனால் நீ அடையும் பலன் என்ன? சுகுமார்! அநியாயத்தின் சிகரத்திலே பேய்க் கூத்தாடுகிறாயே, நீ உணர்ச்சியுள்ள மனிதன்தானா? உன் செய்கையைக் கண்டு நான் வெட்கப்படுகிறேன் சுகுமார், நான் வெட்கப்படுகிறேன்!" என்று பொரிந்து தள்ளுகிறாள் அருணா.

சுகுமார் பதில் பேசவேயில்லை. பதில் பேச அவனுக்கு என்ன நியாயம் இருக்கிறது? வெட்கத்தால் தலையைத் தொங்க விட்டுக் கொண்டு, உள்ளே போய் விடுகிறான்.

கம்பத்திலே கட்டுண்டு, சவுக்கின் தழும்புகளால் வேதனைக் குரல் எழுப்பி வந்த தன் ஆசை ஓவியத்திடம் அடுத்து அருணா வருகிறாள்.

அசோக்கிடம் சுகுமாரின் செய்கைக்கு மன்னிப்பு கோருகிறாள். அடிபட்ட காயங்களுக்கு மருந்து போட்டுக்கொள்ள தன்னுடன் உள்ளே வரும்படி அவனை அருணா அழைக்கிறாள்.

'அசோக் - அருணாவுடன் சென்று விட்டால்?' - ரூபாவின் சிந்தனையில் இந்தக் கேள்விதான் பேயுருவம் கொண்டு நிற்கிறது.

'இந்தக் கேள்விக்கு பதில் காணமுயலுவதைவிட, அருணாவிடமிருந்து அசோக்கை தற்சமயம் மீட்டுச் சென்று விடுவதே மேலானது' என்று நினைக்கும் ரூபா, அருணாவின் அழைப்பை மறுத்து, "வேண்டாம்! இந்தக் காயம் மருந்து போட்டால் ஆறிவிடுமம்மா. நாங்கள் போய் வருகிறோம்" என்று சொல்லி விட்டு அசோக்கை அணைத்தபடி நடக்க ஆரம்பிக்கிறாள்.

அவர்கள் செல்வதையே இமைகொட்டாது பார்த்து வரும் அருணாவின் இமைக் கோடிகள் இரண்டிலும், முத்துக்களைப் போல் இரு கண்ணீர்த் துளிகள் தேங்கி நிற்கின்றன.

அதே சமயம் அவளது உதடுகள் "அவரது காயம் மருந்து போட்டால் ஆறிவிடும். ஆனால் என்னுள்ளத்திலே பட்ட காயம், ஆறவே ஆறாதே!" என்று முணுமுணுக்கின்றன.

கதாசிரியர் ஸ்ரீதர் அமரதீபத்தில் இதைப் போன்ற உணர்ச்சிமயமான கட்டங்கள் பலவற்றைச் சிருஷ்டித்திருக்கிறார்.

'அமரதீபம்' தங்கவேலுவுக்கு சிவராம் மீசை ஒட்டுகிறார்.



சாவித்திரி—பத்மினி இருவரும் இதில் முதல் தடவையாக ஒன்று சேர்ந்து நடிக்கிறார்கள். அதேபோல் சிவாஜி கணேசனும்-சாவித்திரியும் தோன்றும் முதல் படமும் இதுதான். இதில் அருணாவின் பாத்திரத்திலே சாவித்திரியும் ரூபாவாக பத்மினியும் வருகிறார்கள். சிவாஜி கணேசன் அசோக் பாத்திரத்தில் நடிக்கிறார். வில்லன் சுகுமாராக வருவது நம்பியார்.

டி. பிரகாஷ்ராவ் டைரக்ஷனில் தயாராகி வரும் 'அமரதீபம்' வீனஸ் பிக்சர்ஸின் முதல் தயாரிப்பு. வெகு விரைவிலேயே வெள்ளித்திரைகளில் இது ஒளிவிட்டுப் பிரகாசிக்கப் போவதை நீங்கள் பார்க்கலாம்.

'அமரதீபம்' செட்டிலிருந்து வெளியே வந்த நான் அடுத்து என் கண்களையே நம்ப முடியாத அளவில், ஒரு பிரம்மாண்டமான அரண்மனைக்குள் வந்து நின்றேன்.

அங்கே அடுக்கடுக்காக பழங்கள் தட்டில் வைக்கப்பட்டிருந்தன. அம்மாதிரியான தட்டுகள் வரிசை வரிசையாக அங்கிருந்தன. மாவிலைத் தோரணமும், வாசனை வத்திகளின் மணமும் கல்யாண மண்டபத்தின் கோலாகலமான சூழ்நிலையை எடுத்துக் காட்டின.

அங்கு மையத்தில் ஒரு சிறு ஆசனம் போடப்பட்டிருந்தது. அதிலே ஒரு பத்து வயதுச் சிறுமி உட்கார்ந்திருந்தாள்.

பட்டுத் தாவணியும்—தங்க நகைகளும் அணிந்து கொண்டிருந்த அந்தப் பெண்ணின் முகத்தில் மகிழ்ச்சி கங்கு கரையின்றி காணப்பட்டது.

ஏராளமான பெண்கள் மகிழ்ச்சி பொங்கும் முகத்தோடு அச்சிறுமியைச் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள். இதை யெல்லாம் அந்த ஆசனத்தில் அமர்ந்திருந்த சிறுமி ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நானே வந்து சேர்ந்திருக்கும் இடம் என்ன வென்று தெரியாத மர்மத்தில் ஆழ்ந்திருந்தேன்.

அந்த மர்மத்தைத் துப்பு துலக்க ஏதேனும் வழிகள் புலப்படுமா என்ற தோரணையில் அந்த அரண்மனையின் மற்றொரு கோடியைப் பார்த்தேன்.

பத்தினித் தெய்வம் சாவித்திரியும் கணேசனும்!

அந்த இடத்தைப் பார்த்ததும் நான் என் மூச்சு நிலைக்கு வந்தது. அப்படி என்ன அதிசயத்தை அங்கு கண்டு விட்டேன் என்று நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை! நான் துப்பு துலக்க வழிநான் அங்கே புலப்பட்டது.

பால சசிரேகாவாக பேபி சரஸ்வதி

அந்த இடத்தில் டைரக்டர் கே. வி. ரெட்டியும், ஸ்ரீ சக்ரபாணியும் (நாகிரெட்டி) அமர்ந்திருந்தார்கள். கூடவே ஒளிப்பதிவாளர் மார்க்கஸ் பார்ட்லேயும் அங்கு காணப்படவே நான் வந்திருக்கும் 'அரண்மனை எங்கே இருக்கிறது? யாருடையது?' என்பதையும் தெரிந்து கொண்டேன்.

சசிரேகாவின் அரண்மனை அது; ஆசனத்திலே சந்தித்தோமே அவள்தான் சிறுமி சசிரேகா. அவளுக்கு அன்று பிறந்த நாள் விழா. அதைத்தான் அவர்கள் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

விஜயாவின் பிரம்மாண்ட தயாரிப்பான 'சசிரேகா பரிணய'த்தில் பால சசிரேகாவாக பேபி சரஸ்வதி தோன்றுகிருள்என்ருல்,'பெரிய சசிரேகாவாக யார் தோன்றுகிருர்?' என்று உடனே கேட்கத் தோன்றுகிறதல்லவா? அந்தப் பாத்திரத்தில் நடிப்பதற்கு சாவித்திரி ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிருர். மற்றும் ஜெமினி கணேசன், டி. பாலசுப்ரமண்யம், நம்பியார், சாயிராம், தங்கவேலு, ரங்கராவ், என். டி. ராமராவ், சந்தியா, லக்ஷ்மிபிரபா ருஷ்யேந்திரமணி முதலியோரும் இப்படத்தில் நடித்து வருகிருர்கள். சசிரேகாவுக்கான தமிழ் வசனங்களை தஞ்சை ராமய்யாதாஸ் எழுதியிருக்கிருர்.

சசிரேகாவை முடித்து வெளியே அனுப்புவதற்குள், ஒரு சமூகப் படத்தை தயாரித்து திரைக்கு அனுப்ப விஜயா புரொடக்ஷன் ஸார் திட்டமிட்டிருக்கிருர்கள். ஹாஸ்யப்படமான இதற்கு சக்ரபாணியே கதை எழுதியிருக்கிருர். பிரஸாத் இப்படத்தை டைரக்ட் செய்வார். இதற்கான நடிகர் தேர்தல் இன்னும் நடைபெறவில்லை.

வாஹினியில் சென்ற மாதத்தில் ஜூபிலி பிலிம்ஸ் மர்மவீரனுக்காக சில காட்சிகள் சுடப்பட்டன.

பத்தினித் தெய்வம் கதாநாயகன் ராஜேந்திரன்.

சசிரேகா சச்சுவுக்கு கே. வி. ரெட்டி நடிக்க சொல்லித் தருகிறார். பார்ட்லே ஒளியை அளக்கிறார்.

வாஹினியில் முடிவடையும் தறுவாயில் இருக்கும் படங்களில் 'தாய்க்குப் பின் தாரம்' ஒன்று, விஜயா புரொடக்ஷன்ஸ் நாகி ரெட்டி இந்தப் படத்தின் பூரண விநியோக உரிமைகளைப் பெற்றிருக்கிறார்.

இரு குடும்பங்களுக்கிடையே நீண்ட நளாகவே இருந்து வருகிறது மனப்புகைச்சல்.

இரு குடும்பங்களுக்கிடையே உள்ள சண்டை ஒரு புறமிருக்க, முறையே இவ்விரு குடும்பங்களைச் சேர்ந்த ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் காதலிக்கின்றனர்.

முடிவிலே பல சிக்கல்கள் ஏற்பட்டு "தாய்க்குப் பின்னரே தாரம்!" என்ற நீதியைப் புகட்

சசிரேகா செட்டில் சக்ரபாணியும் நம் கேமராவில் சிக்கினர்.

டும் வண்ணத்தில் கதாநாயகன் நடந்து கொள்கிறான்.

இதில் காதல் ஜோடியாக எம். ஜி. ராமச்சந்திரனும், பானுமதியும் தோன்றுகிறார்கள். பாலய்யா – பானுமதியின் தந்தையாகவும், கண்ணம்பா– ஈ. ஆர். சகாதேவன் இருவரும் எம். ஜி. ஆரின் பெற்றோர்களாகவும் நடிக்கிறார்கள்.

தேவர் பிலம்ஸ் தயாரிப்பான இப்படத்தை திருமுகம் டைரக்ட் செய்கிறார். வசனங்களை அய்யாப்பிள்ளை எழுதியிருக்கிறார். தயாரிப்பாளரான சின்னப்ப தேவரும் இப்படத்தில் ஒரு சிறு பாகத்தில் நடித்து வருகிறார்.

'அமரதீபம்' செட்டுக்கு வெளியே பப்பியும் சாவித்திரியும்.







லலிதா பில்ம்ஸ் 'தேவதா' படத்திற்காக பாட்டு ஒன்றை ஒத்திகை பார்க்கிறார் சங்கீத டைரக்டர் எஸ். ராஜேஸ்வர ராவ்.

அந்தப் பயங்கரமான காட்டின் நடுமத்தியிலேயிருந்த காட்டாற்றில் நுங்கும் நுரையுமாக வெள்ளம் ஓடிக் கொண்டிருந்தது.

அதைப் பார்த்த அந்தப் பெண் திகைத்து நின்று விடுகிறாள். அவள் அக்கரைக்குப் போக வேண்டும். தான் ஒருத்தியாக மட்டும் இருந்தாலும் பாதகமில்லை. தன்னுடன் அழைத்து வந்திருக்கும் இரு பிள்ளைகளை என்ன செய்வது?

அவள் யோசித்துப் பார்க்கிறாள். அவளது சிந்தனையில் ஒரு வழி தென்படுகிறது.

முதலில் ஒரு பையனை அழைத்துக் கொள்வோம். அக்கரையில் அவனைக் கொண்டு விட்டு வந்து, மற்றொருவனை அழைத்துப் போவோம் என்று முடிவு செய்கிறாள்.

ஆனால், பிள்ளைகளோ தாயைப் பிரிந்து இருக்க மறுக்கின்றனர். முடிவில் பலாத்காரமாக ஒரு பையனை மரத்தில் கட்டிவிட்டு, மறுகரைக்கு தன் ஒரு பிள்ளையுடன் போகிறாள் அத்தாய்.

பிடிவாதம் பிடிக்கும் அவனையும் அங்கே ஒரு மரத்தில் கட்டிவிட்டு, இக்கரையில் மரத்தில் கட்டியிருக்கும் பிள்ளையை அழைத்துவர அத்தாய் ஆற்றில் இறங்குகிறாள்.

அப்போது சுழித்துக் கொண்டு வரும் புதுவெள்ளம் அவளை ஆற்றோடு அடித்துக் கொண்டு போய் விடுகிறது. தனித்தனியே இருகரைகளில் கட்டப்பட்டிருக்கும் அவ்விரு சிறுவர்களும் அம்மாவை நினைத்துக் கதறுகிறார்கள்.

மேலே என்ன நடந்தது என்று என்னைக் கேட்பதை விட, மாடர்ன் தியேட்டர்ஸ் 'பாசவலை' படத்தைப் பார்த்தால் இதற்கு விடை தெரிந்து விடும்.

சேலத்திற்கு அருகாமையில் சமீபத்தில் இக்காட்சி படமாக்கப் பட்டது.

ஜி. வரலக்ஷ்மி இதில் தாயாகவும், இரு பிள்ளைகளாக மாஸ்டர் பாஜி, மாஸ்டர் வெங்கடேசன் இருவரும் நடித்து வருகிறார்கள்.

'பாசவலை' கதை பழைய 'அலிபாதுஷா'வைத் தழுவியதாகும்.

ஸ்டண்ட் மாஸ்டர்கள்

இப்போது படங்களிலெல்லாம் கத்திச் சண்டை, குத்துச்சண்டைக் காட்சிகள் வராமலிருப்பதில்லை. கதாநாயகன் அதம பட்சம் நான்கு பேரைக் குத்தும் காட்சியாவது படத்தில் வந்து விடும். அந்த அளவுக்கு வரவேற்பைப் பெற்று விட்ட இக் கலையில் திறமை பெற்றவர்களை ரசிகர்களுக்கு அறிமுகப் படுத்துகிறது இப்பகுதி.

வி. பி. பலராமன்

அதோ ஒரு வீரன் வருகிறான். அவனைத் தொடர்ந்து சுமார் பத்துப் பேர் கையில் கத்தியோடு ஓடி வருகிறார்கள். அவனை நோக்கி ஓடி வருபவர்களிடம் கத்திகளிருக்கின்றன. அவனோ நிராயுதபாணியாக நிற்கிறான். ஒருவன் அவ் வீரனைக் கொன்ற பெருமை தனக்கே இருக்க வேண்டுமென்பதற்காக அவனிடம் ஓடுகிறான், ஓங்கிய வாளோடு. வீரன் சட்டென ஒதுங்கி லாகவமாக அந்தக் கத்தியை அவனிடமிருந்து பிடுங்கி அவனைக் கீழே தள்ளி விடுகிறான்.

‘டிங்...டங்...ச்ஷ்...ய்...ச்’ கத்திகள் உராய்கின்றன. வீரன் ஒருவனாக இருந்தாலும் வாள் வீச்சுத் திறமையாலும் சமயோசித புத்தியாலும் பத்துப் பேரையும் சமாளிப்'துடன் தீர்த்துக்கட்டியும் விடுகிறான். இந்த வீரன் கத்திச் சண்டை செய்யும் போது மற்றவர்களில் எவனாவது கத்தியை கொஞ்சம் அதிகம் நீட்டி விட்டால் வீரன் யமலோகம் போக வேண்டியது தான். ஆனால் காயம்கூடப்படாமல் அவன் சமாளிப்பதற்கு அந்தக் கத்திச் சண்டையை அமைக்கும் ஆசிரியர்கள்தான் காரணம். இந்த ‘ஸ்டண்ட் மாஸ்டர்’களுக்குப் பட உலகில் ஏகப்பட்ட கிராக்கி இருந்து வருகிறது. இவர்களில் வி. பி. பலராமனும் ஒருவர்.

பலராமன் ஒரு ஸ்டண்ட் மாஸ்டர் மட்டுமல்ல; நடன ஆசிரியர், பின்னணிப் பாடகர், நடிகரும்கூட. சாதாரண நடிகராகப் படவுலகில் நுழைந்த பலராம், ஜெமினி ஸ்தாபனத்தில் இருக்கும் போது ஸ்டண்ட், நடன கலைகளைக் கற்றார். இன்று இந்தக் கலைகளில் நன்கு தேர்ச்சி பெற்றவராகி ஆசிரியராகவும் பணியாற்றி வருகிறார்.

பலராமன் மிகவும் இளம் வயதிலிருந்தே சண்டைக் காட்சிகளில் விருப்பம் கொண்டவராக இருந்து வந்தார். மௌனப் படங்களில் மாஸ்டர் விட்டல், நவீன் சந்திரா, பில்லிமோரியா முதலிய ஸ்டண்ட் நடிகர்களின் நடிப்பைக் கண்டு தானும் அப்படி வீரனாக வேண்டுமென்று ஆசைப்பட்டார் அவர். இதற்காக நீச்சலடிப்பது, உடற்பயிற்சி செய்வது முதலிய சரீர வளர்ச்சிக்குத் தேவையான முறைகளில் ஈடுபட்டார். சவுக்கு கட்டைகளை வண்டிகளிலிருந்து உருவிக் கொண்டு நண்பர்களுடன் கடற்கரையில் நாள் முழுதும் கத்திச் சண்டை போட்டுக்கொண்டி

ருப்பார்! உடற்கட்டு நன்றாக இருந்தது. பாணா சண்டை, சுருள் கத்திச் சண்டை, கோலாட்டம் முதலியவற்றில் நன்கு பயிற்சி பெற்றார். அவருக்குச் சினிமா என்றால் ஒரே பைத்தியம். ஆனால் ஹெட்கான்ஸ்டபிளான அவர் தகப்பனார் அவரை விடமாட்டார். ஆகவே வீட்டில் யாவரும் தூங்கின பிறகு பலராமன் சினிமாவுக்குப் போவார்.

சென்னை மைலாப்பூர் போலீஸ் ஸ்டேஷனில் ஹெட்கான்ஸ்டபிளாக நல்ல பெயருடன் பல வருஷங்கள் பணியாற்றிய பாவாடை முதலியாரின் மூன்றாவது குழந்தையாகப் பிறந்தவர் பலராமன். அவரது தாயார் பெயர் தாயாரம்மாள். 1922-ம் ஆண்டில் பிறந்த பலராமன் ஐந்தாவது வயதிலேயே பள்ளியில் சேர்க்கப்பட்டார். இரண்டாவது பாரம் வரை படித்தார். இதற்கிடையே தாயாரும் தகப்பனாரும் காலமாகி விட்டதால் மாமாவிடம் வளர்ந்தார் அவர். அங்கே அவர் வசதியுடனிருக்கவில்லை.

எந்தவிதமாகவும் இல்லாமல் சும்மா சுற்றிக் கொண்டிருந்த பலராமன் 1942-ம் வருஷம் ஆகஸ்ட் புரட்சியின் போது பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் கைது செய்யப்பட்டு அலிபுரம் சிறைக்கு அனுப்பப்பட்டார். மூன்று வருஷகாலம் அவர் சிறையிலிருந்தார். அப்போது அவருக்கு காங்கிரஸ் ஊழியர்களில் பலர் அறிமுகமாயினர். சிறையில் நாடகங்களெல்லாம் போட்டார்கள். காங்கிரஸ் ஊழியர்களில் அங்கே சிறை வைக்கப்பட்டிருந்த 'காற்றாடி' ராமரத்னம் (காற்றாடி ராமரத்னம் சுழற்காற்றைக் கிளப்பும் காற்றாடியாலும்கூட அசைக்க முடியாத உடலமைப்பும், அதை விட அதிகமான உறுதியான உள்ளமும் படைத்தவர்!) பலராமனுக்கு அறிமுகமானார்.

விடுதலையாகி சென்னை சேர்ந்த பலராமன் ரொம்பவும் கஷ்டப்பட்டார். பிறகு அவர் ராமரத்னத்தை 'பாரத தேவி' காரியாலயத்தில் சந்தித்தார். ராமரத்னம் அவரிடம் ஒரு சிபார்சு கடிதம் கொடுத்து முருகதாஸாவிடம் அனுப்பினார். ஆனால் அப்போதைக்கு ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. இதற்கிடையே பி எஸ். வி. அய்யரின் 'ருக்மாங்கதா'வில் தோட்டக்காரன் வேஷத்தில் நடிக்கும் சந்தர்ப்பம் பலராமனுக்குக் கிடைத்தது. அவர் முதலில் நடிகராகப் பட உலகில் நுழைய அப்படமே காரணமாயிருந்தது.

அவருக்குப் பட உலகில் சந்தர்ப்பம் கிடைத்ததற்கு அவர் மனைவி ராஜேஸ்வரியே காரணம். கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த அவரிடம், 'மணமானால் வருகிறவளின் மூலம் நல்ல காலம் பிறக்கும்' என்ற உறவினர் ஒருவரின் வார்த்தையைக் கேட்டு ராஜேஸ்வரியை மணந்தார் அவர். உடனே படத்தில் இடம் கிடைத்தது. ஜெமினி ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்டது ருக்மாங்கதா படம். ஆகவே பலராமனின் திறமையை ஓரளவு அறிந்திருந்தனர் ஜெமினி ஸ்டுடியோ சிப்பந்திகள். ஜெமினியில் 'சந்திரலேகா' படத்திற்கான ஏற்பாடுகள் பலமாகச் செய்யப்பட்டு வந்தன. ஒவ்வொரு வேஷத்திற்கும் தகுந்தவர்களைத் தேடித் தேடித் தேர்ந்தெடுத்தனர்.

ஜெமினியைச் சேர்ந்த டி. வி. ஆர். சந்தர், ஒரு நாள் பலராமனை சந்தித்தபோது, மறுநாள் ஸ்டுடியோவில் வந்து பார்க்கும்படிக்கூறி

னார். மறுநாள் பலராமன் சென்றபோது நிரந்தர நடிகராக ஒப்பந்தமானார். முதன் முதலாக 'முரசாட்டம்' காட்சியில் நடனமாடினார் பலராமன். நடனம், கத்திச் சண்டை இவற்றில் நல்ல பரிச்சயம் இருந்ததால் அப்படத்தில் அவருக்கு நிறைய வேலையிருந்தது. ஜெமினியில் எல்லாப் படங்களிலும் பலராமனுக்கு வேலை கடுமையாக இருந்தது.

சக்ரதாரி, அபூர்வ சகோதரர்கள், ஞானசௌந்தரி, மிஸ் மாலினி போன்ற எல்லாப் படங்களிலும் நடித்து விட்டு, ஏழு வருஷ சேவைக்குப் பின் 1953-ல் ஜெமினியிலிருந்து விலகினார் பலராமன். இடையே நிருபேதலு, புட்டில்லு, வளையாபதி, பெற்ற தாய், பல்லட்டூரு பில்லா, பெத்த மனுஷ்யுலு, பங்காரு பாப்பா, பரிவர்த்தனா முதலிய படங்களில் நடித்தார்—நடனமாடினார்; நடனம்—ஸ்டண்ட் சொல்லி வைத்தார். ஜெமினியில் இருக்கும்போதே தன் நடன, ஸ்டண்ட் திறமையை வளர்த்துக் கொண்ட பலராமன். ரசிகர்களுக்குத் தகுந்த முறையில் அறிமுகமானது 'மனம் போல மாங்கல்யம்' படத்தில்தான்.

நாராயணன் கம்பெனியில் பணியாற்றும் கே. வி. ஸ்ரீநிவாஸன் ஜெமினியிலிருந்த போது பலராமனின் திறமை பற்றி நன்கறிந்திருந்தார். அவர் 'மனம் போல மாங்கல்யம்' படத்தில் நடிக்க பலராமனை சிபார்சு செய்தார். நடன ஆசிரியராக வந்து சுரபி பாலசரஸ்வதிக்கு நடனம் சொல்லிக் கொடுக்கும் பலராமனை உங்களுக்கு நினைவிருக்கிறதல்லவா? பைத்தியக்கார ஆஸ்பத்திரி நடனமும் அவர் அமைத்தது தான். அவரது திறமையில் தயாரிப்பாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டதால், தங்களது பிரம்மாண்ட தயாரிப்பான 'கணவனே கண்கண்ட தெய்வம்' படத்தின் ஸ்டண்ட், கத்திச்சண்டைகளுக்கு அவரையே ஆசிரியராக அமர்த்தினர். மிஸ்ஸியம்மாவில் கனவுக் காட்சியில் வரும் கத்திச் சண்டை அமைப்பு அவருடையது தான். மேனகாவில் நடன ஆசிரியராக இருந்து நடிக்கவும் செய்தார். 'கனவு' படத்தில் பலராமன் வி. கே. ராமசாமிக்காக பின்னணியில் பாடினார். அதன் நடன ஆசிரியரும் அவரே. போர்ட்டர் கந்தனில் லக்ஷ்மிகாந்தத்துடனும் 'ஆசை அண்ணா - அருமைத் தம்பி'யில் தனத்துடனும் நடனம் ஆடினார். இவற்றுடன் மஹேஸ்வரி, மாமன் மகள், ஸ்நேக சீமா, நீலக்குயில், சடகுலங் போன்ற பல படங்களில் நடித்தும் நடனமாடியும், நடனம்-ஸ்டன்ட் சொல்லிக் கொடுத்துமிருக்கிறார் அவர்.

ஜெமினி கணேசன் நடிக்கும் படங்களில் அனேகமாக பலராமன் தான் ஸ்டண்ட்-நடன ஆசிரியராக இருக்கிறார்.

ஜெமினி 'இன்ஸானியத்' படத்திற்கு நடன-ஸ்டண்ட் ஆசிரியராக பலராமன் அமர்த்தப்பட்டார். கரகம் போன்ற ஆட்டங்களும், கத்திச் சண்டைகளும் சிறப்பாக அதில் அமைந்திருந்தன. இன்ஸானியத் படத்தில் பலராமனின் சேவையைப் பாராட்டி எழுதியிருக்கிறார் திலீப்குமார்:

"ஜெமினியின் 'இன்ஸானியத்' படத்தில் நடனங்களுக்கும் ஓரளவு கத்திச் சண்டைகளுக்கும் எனக்கு ஆசிரியராக இருந்து உதவியவர் என் நண்பர் வி. பி. பலராமன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவருக்கு எல்லா விஷயங்களிலும் வெற்றி கிடைக்குமாக—திலீப்குமார்" இந்தப் பாராட்டுக் கடிதத்தை பலராமன் படம் போட்டு வீட்டில் மாட்டி வைத்திருக்கிறார்.

தெனாலிராமன், ஆசை, சதாரம் போன்ற சமீப வெளியீடுகளிலும் பலராமனின் டான்ஸ்-ஸ்டண்ட் வேலைகளிருக்கின்றன. அவர் நிறைய சந்தர்ப்பம் பெற்று திறமை மிக்க நடிகர் என பாராட்டப்பட்டது 'பெண்ணின் பெருமை' யில்தான். முருகன் என்ற வேலைக்காரனின் பாத்திரத்திலே படம் நெடுகிலும் வந்து சிறப்பாக நடித்தார். ராகினி அதிபர் பி. புல்லய்யா பலராமனுக்கு சந்தர்ப்பமளிக்க முன் வந்ததைப் பாராட்ட வேண்டும். அதில் வரும் கோழி நடனமும் பலராமனின் அமைப்புதான்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் சிஷ்ய கோஷ்டியைச் சேர்ந்த ஆழ்வார் குப்புசாமி தற்போது சர்வோதயாவின் 'புது வாழ்வு' படத்தில் நடித்து வருகிறார்.

தற்போது பலராமன் பூலோக ரம்பை, அமரதீபம், பத்தினித் தெய்வம், கன்னியின் சபதம், ஜெயம் மனதே, தேவதா, எல்லாம் அவன் செயல் போன்ற பல படங்களில் நடன, ஸ்டண்ட் ஆசிரியராகப் பணியாற்றியும் நடித்தும் வருகிறார்.

பலராமனுடன் கூடப்பிறந்தவர்கள் மூன்று சகோதரிகளும் ஒரு சகோதரருமாவர். அவரது இளைய சகோதரர் வி. பி. சுவாமி தனியாக சிறு தொழில் செய்து வருகிறார். பலராமனுக்கு வசந்தா, பாலசுப்பிரமணியம் ஆகிய இரு செல்வங்களிருக்கின்றன. அத்துடன் தனது மைத்துனியின் பெண்களான யசோதா, நாகம்மா, சம்பூர்ணம் ஆகியோரையும் தன் பொறுப்பிலேயே வளர்த்து வருகிறார். அவர் குடும்பம் பெரிது. வயிற்றுப் பிழைப்புக்காகப் படங்களில் உயிருக்குத் துணிந்து நடிக்கிறார் அவர் என்றால் மிகையாகாது. படங்களில் நாம் மகிழும் காட்சிகளுக்காக அவர் யமனைக்கூடப் பார்த்து விட்டு வந்திருப்பார்!

பலராமன் அடக்கம் மிகுந்தவர். 'சந்தர், ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாசன், ஸ்ரீநிவாஸன், நாராயணன் கம்பெனியார், பி. புல்லய்யா போன்றவர்கள் அந்தந்த கட்டத்தில் எனக்கு ஆதரவும் உற்சாகமும் கொடுத்துதவினார்கள். இன்றைய என் நிலைக்கு அவர்களே காரணம்" என்று நன்றியறிதலோடு கூறுகிறார் பலராமன்.

பலராமன் ஒரு நல்ல நடிகர். தகுந்தபடி சந்தர்ப்பம் கொடுத்தால் அவர் ஒரு திறமைமிக்க நடிகர் என்பதை நிரூபிக்க முடியும் என்று அறிவுறுத்திக் காட்டியவர் புல்லய்யா. பலராமனை ஒரு படத்துக்கு ஒப்பந்தம் செய்தால் நடிப்பதுடன் நடனம், ஸ்டண்ட் வேலைகளையும் அவரே கவனித்துக் கொள்வார். ஒரே கல்லில் பல மாங்காய்கள் விழுகிறதென்றால் பட முதலாளிகளுக்குக் கசக்குமா என்ன?


சாரதி பிலிம்ஸ்
காலம் மாறிப் போச்சு
படக் காட்சிகள்





சாரதியின் 'காலம் மாறிப்போச்சு' தமிழ்ப்படத்தில் ஜெமினி கணேசன், அஞ்சலிதேவி, பாலய்யா, எஸ். வி. சுப்பய்யா, துரைராஜ், தங்கவேலு, கிரிஜா முதலியோர் நடிக்கின்றனர். தாபி சாணக்கியா இதன் டைரக்டர். வஹிதா ரஹ்மானின் நடனமும் இதில் உண்டு.

வீனஸ் பிக்
PSR



★ அந்த ஒரு நாள் ★

பாரதப் பிரதமர் நேருஜி, சமீபத்தில் ரஷ்யாவுக்கு விஜயம் செய்தபோது, சில ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்றிருந்தார். அவர் சென்ற அதே சமயம் சமாதான மகாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சில கலைஞர்கள் நம் நாட்டிலிருந்து அங்கு சென்றிருந்தார்கள். உஷா கிரான் என்ற வட இந்திய நடிகையும் அவர்களோடு சென்றிருந்தார். ஐரோப்பாவில் அவர் தங்கியிருந்த சமயம், நேருஜியும் அங்கு வந்திருந்தார். தெருவின் இருமருங்கிலும் ஆயிரக்கணக்கான மக்கள் நின்று கொண்டு, "பாரதப் பிரதமர் நேருஜி வாழ்க! சமாதானத்தின் சின்னமே, வாழ்க!" என்று ஆனந்த கோஷமிட்டார்கள். அங்கு குரலெழுப்பிய ஆயிரமாயிரம் ஐரோப்பிய மக்களோடு, உஷா கிரானும் தெருவில் நின்று, நேருஜியின் வரவேற்பில் கலந்து கொண்டார்.

"மக்களோடு மக்களாகக் கலந்து, பாரதப் பிரதமரை நான் அன்று கண்டேன். என் வாழ்க்கையில் அபூர்வமான அனுபவம் இது. ஆனால் நமது நாட்டில் நான் இப்படி நின்று, வரவேற்றிருக்க முடியுமா? நேருஜியை பார்க்க வந்த கூட்டம் என்னைச் சுற்றியல்லவா கூடிவிடும்?" என்று உஷாகிரான் இந்தியா திரும்பியதும் சொல்லியிருக்கிறார்.

இதைப் படித்துப் பார்த்தபோது எனக்கும் ஒரு எண்ணம் உதயமாயிற்று.

நமது ரஸிகர்கள் நக்ஷத்திரங்களைச் சூழ்ந்து கொள்ளாமல் சர்வ சுதந்திரத்துடன் வெளியே நடக்க அனுமதித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று யோசித்தேன். கற்பனையில்தான் இது சாத்தியமாகும் என்று தோன்றியது!

"இதோ பாருங்கள்! நான் ஒரு புது உலகத்தைச் சிருஷ்டித்திருக்கிறேன். புது உலகம் என்றாலும் அதில் வாழ்பவர்கள் எல்லோரும் உங்களுக்கு அறிமுகமானவர்களே! உங்கள் இஷ்டம்போல் நீங்கள் இந்த உலகத்தில் சுற்றி வரலாம். இங்கேயும் ரஸிகர்கள் இருப்பார்கள்; ஆனால் உங்கள் பின்னே ஓடி வந்து சூழ்ந்து கொண்டு தொந்தரவு செய்யமாட்டார்கள். ஆகவே பயப்படாமல் நீங்கள் வெளியே வரலாம். அப்படி வரும்போது நீங்கள் முதன் முதலாக என்ன செய்ய விரும்புவீர்கள்?" என்று நம் நக்ஷத்திரங்களைக் கேட்டேன்.

அவர்கள் சொன்ன பதில்கள் ரசமாகவும் அவர்களது உள்ளத்தில் தேங்கிக் கிடக்கும் ஆவலை வெளிக்காட்டும் வகையிலும் அமைந்திருந்தன.

"அத்தகைய நிலையில் நாங்கள் இருந்தால் என்னதான் செய்ய மாட்டோம்! 'அந்த ஒரு நாள்' எங்கள் வாழ்க்கையிலேயே இனிமையானதாக இருக்கும்!" என்று சொன்னார்கள், நக்ஷத்திரங்கள்.

"அப்படிப்பட்ட சந்தர்ப்பம் வரும்போது, நான் முதன் முதலில் சென்னை கபாலி கோயிலுக்கு நடந்துபோய்விட்டு வருவேன். கோயிலை நிதானமாக வலம் வருவேன்...இது தவிர, எனக்கு ஒரு குழந்தை பிறந்தால் அதன் பிஞ்சுக்கரங்களைப் பிடித்துக் கொண்டு பள்ளிக்கூடத்திற்கு

கற்பனை உலகில் நம் நக்ஷத்திரங்கள்..

அழைத்துச் சென்றுவிட்டு வருவேன்'' என்று சொன்னார் எம். என். ராஜம்.

பிரபல ஹாஸ்ய நடிகரான பிரண்ட் ராமசாமிக்கு, ஒரு நல்ல பொதுக்கூட்டத்தில், மக்களோடு மக்களாகத் தானும் கலந்து கொண்டு, பிரசங்கத்தைக் கேட்க வேண்டும் என்ற விருப்ப மிருக்கிறது. ''நீங்கள் சொல்கிறபடி நடக்கும் அந்த ஒரு நாளில் நல்ல பிரசங்கம் எங்கே இருக்கிறது என்றுதான் பார்ப்பேன்'' என்றார் அவர்.

முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் தனம்—சுசிலா சகோதரிகளில் மூத்தவரான தனத்தின் ஆருயிர் சிநேகிதிகளில் ஒருவர் நடிகை சாவித்திரி.

''எனக்கு நீங்கள் சொல்வது போல் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் நான் விடுவிடென்று நேரே சாவித்திரியின் வீட்டிற்குத்தான் நடந்து போவேன். மணிக்கணக்காகப் பேசிக் கொண்டிருப்பேன்!'' என்று சொன்னார் தனம்.



சந்தியா

தனம்

''சினிமாப் படத்தை நாங்கள் எங்கே முழுதும் பார்க்க முடிகிறது? ரஸிகர்களுக்காகப் பயந்து படம் ஆரம்பித்த பின்தான் கொட்டகைக்குள் நுழைய முடிகிறது. அதேபோல் படம் முடிவதற்கு சில நிமிஷங்களுக்கு முன்பாகவே வெளியே எழுந்து வந்து விட வேண்டியிருக்கிறது. எனவே அந்த ஒரு நாளிலாவது ஒரு படத்தை முழுக்க முழுக்க பார்ப்பேன் நான்!'' என்று சுசிலா தெரிவித்தார்.

'மாங்கல்யம்' சுலோசனாவின் இதயத்தில் பல நாட்களாகவே ஒரு ஆசை. சென்னைக்கு வந்திருக்கும் 'விஜய' என்ற மாடி பஸ்ஸில் ஏறிப் பிரயாணம் செய்ய வேண்டும் என்பதுதான் அது.

''இந்தப் பஸ்ஸின் உள்ளே எப்படி யிருக்கும்? அதில் மாடிக்கு வழி எங்கே இருக்கிறது? என்றெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எனக்கு ஆசையாக இருக்கிறது. அந்தப் பஸ்ஸுக்குள் ஒரு முறை நுழைந்தாவது வரவேண்டும் என்று நினைக்கிறேன். நீங்கள் சொல்

சுசிலா

வதுபோல் ரஸிகர்கள் என்னைச் சுதந்திரமாக விட்டால் நான் 'விஜய' பஸ்ஸில் ஏறி, அது கிளம்பும் இடத்திலிருந்து நிற்கும் இடம் வரை இரண்டு மூன்று தடவைகளாவது பிரயாணம் செய்துவிட்டு வருவேன்'''' என்று சொன்னார் சுலோசனா.

'சுலோசனாவைப் போலவே, வடஇந்திய நடிகை நர்கீஸும் நினைத்திருக்கிறார்.

பம்பாய் நகர பஸ்ஸொன்றில் பிரயாணம் செய்ய வேண்டும் என்பது நர்கீஸின் விருப்பம்.

'எனக்கு அப்படி ஒரு 'சான்ஸ்' கிடைத்தால்' என்று, தற்போது ஏராளமான படங்களில் நடித்து வரும் தங்கவேலு இழுத்து நிறுத்தி விட்டு, மடமடவென்று பொரிந்து தள்ள ஆரம்பித்து விட்டார்.

'' 'ரஸிகர்களே! இன்று நீங்கள் எனக்கு சுதந்திர மளித்திருப்பதை இன்றோடு நிறுத்தி விடாதீர்கள். இதை பர்மனெண்டாகவே பண்ணி விடுங்கள். ரஸிகர்களும் நடிகர்களும் ஒரே இனம்தான்' என்பதை ரஸிகர்களுக்கு விளக்கும் வகையில் ஒரு பொதுக்கூட்டத்தையே கூட்டிப் பேசுவேன்!'' என்றார் தங்கவேலு.

பொதுக்கூட்டத்தில் அவர் பேச எடுத்துக் கொண்டிருக்கும் விஷயத்தின் சிறப்பையும் பாருங்கள்,

மார்க்கெட்டுக்குப் போய் தன் கையாலேயே நல்ல காய்கறிகளைப் பொறுக்கி எடுத்து வந்து சமைக்க வேண்டும் என்பது பி. கே. சரஸ்வதியின் விருப்பம்.

''ரஸிகர்கள் என்னைச் சுதந்திரமாக இருக்கவிட்டால் அதைத்தான் முதலில் செய்வேன்!'' என்று 'ராஜாம்பாள்' சரஸ்வதி கூறினார்.

வில்லனாகவும் கதாநாயகனாகவும் தோன்றும் நடிகர் ஸ்ரீராம் ஒரு படித்தவாலிபர். இந்தியா பூராவும் சுற்றவேண்டும்; அங்குள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களையும் இதர முக்கிய இடங்களையும் பார்க்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

''நான் தற்போதும் ரஸிகர்களிடையே சர்வ சகஜமாகத்தான் பழகுகிறேன். உதாரணமாக

லக்ஷ்மிபிரபா

கே. ராமசாமி

நான் சென்னையில் ஜனநடமாட்டம் நிறைந்த தெருவில் காரில் செல்வதாக வைத்துக் கொள்ளுங்கள். அப்போது என் நண்பர் ஒருவர் தெருவில் ஜனங்களோடு கூட்டத்தில் போவதாக நினைத்துக் கொள்ளுங்கள். அவரை நான் பார்த்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டதால், அழைத்துப் பேச விரும்புகிறேன். நான் உடனே காரிலிருந்து இறங்கிப் போய் அவரை அழைத்து வந்துவிடுவேன். ஆனால் கூட்டம் சேர்ந்து விடுமோ என்று முதலில் சிறிது பயப்படுவேன். நீங்கள் சொல்லும் கற்பனை உலகில் அந்தப் பயமின்றி விருட்டென்று காரிலிருந்து இறங்கிச் சென்று அவரைக் கூப்பிடலாம். நக்ஷத்திரங்கள் கூடுமான வரை தங்களை மறைத்துக் கொண்டு வாழ்வதே நல்லது. இல்லாவிடில் அவர்களுக்கு 'மௌஸ்' குறைந்து விடும்!'' என்றும் சொன்னார் ஜெமினி கணேசன்.

''இப்போது பக்கத்திலிருக்கும் நண்பர்களைப் பார்க்க வேண்டுமானாலும்கூட காரில்தான் போக வேண்டியிருக்கிறது. அப்போது நடந்தே போகலாம். எனக்கு நன்றாக சைக்கிள் விடத்தெரியும். ஆகவே சைக்கிளிலேயே போய் வருவேன்'' என்று சொன்னார் என். டி. ராமராவ்.

''ஊரெல்லாம் எப்போது உறங்கும்; நாம் வெளியே உலாவப் போகலாம்!'' என்ற நிலை எங்களுடையது. இல்லாவிடில் ரஸிகர்கள் விடுவார்களா? நீங்கள் சொல்வதுபோல் நடக்குமானால் மாலை நேரத்தில் எனது பாபுஜியையும் அழைத்துக்கொண்டு தெருவில் உலவிவிட்டு வருவேன்'' என்று சொன்னார் சம்சாரம் புகழ் புஷ்பவல்லி.

''கோயில், கடைவீதி இவைகளுக்கெல்லாம் பஸ்ஸிலேயே போய் வருவேன். ஏன், பஸ் ஸ்டாப்பில் காத்திருக்கும்படி நேருமானல் ஓசைப்படாமல் நடந்து போய் விடுவேன்'' என்று தனக்குச் சுதந்திரம் கிடைக்கும் 'அந்த ஒரு நா'ளில் தான் செய்யப் போவதைக் குறிப்பிட்டார் ஹாஸ்ய நடிகை முத்துலக்ஷ்மி.

''சைனபஜாரின் ஒரு கோடியிலிருந்து, மறுகோடி வரை மாலை

ஜெமினி கணேசன்



நர்கீஸ்

நேரத்தில் நடந்து சென்று பார்ப்பேன்'' என்றும் சொன்னார் அவர்.

'அபூர்வ சகோதரர்கள்' மூலம் படவுலக ரஸிகர்களுக்கு நன்கு அறிமுகமாகியிருக்கும் லக்ஷ்மி பிரபா அந்த ஒரு நாளில் செய்யப் போவதைப் பற்றி இப்படிக் கூறுகிறார் :

''கடைவீதிக்குப் போவேன். எனக்கு இஷ்டப்பட்ட வளையல், ரிப்பன், புடவை இவைகளை அவசரப்படாமல் (ரஸிகர்கட்கு பயப்படவேண்டியதில்லையே!) நிதானமாக ஒன்றுக்கு இரண்டு தடவை பார்வையிட்டு வாங்குவேன். மாலை நேரத்தில் கடற்கரைக்கோ, கோயிலுக்கோ நடந்து போவேன். சினிமாவை முழுக்க முழுக்க 'சுபம்' வரும் வரையில் பார்த்துவிட்டு வருவேன்!''

'வில்லி' வேஷங்களில் நடித்து வரும் வித்யாவதி சொல்கிறார்:

''நான் நக்ஷத்திரமாகி விட்டதால், இருக்கிறதோ, இல்லையோ—காரில் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் பக்கத்து தெருவில் இருக்கும் என் சிநேகிதியைப் பார்க்கவும் காரில் தான் போகவேண்டியிருக்கிறது. என்னை ரஸிகர்கள் சுதந்திரமாக நடக்கவிட்டால் என் ஒவ்வொரு சிநேகிதியின் வீட்டுக்கும் நடந்து போய் விசாரித்துவிட்டு வருவேன்.''

வித்யாவதியின் மூத்த சகோதரி சந்தியா இருக்கிறாரே, அவரும் தங்கையைப் போலவே 'அந்த ஒரு நா'ளில் சுயேச்சையாக தெருவில் நடந்து சென்று நண்பர்களைப் பார்த்து விட்டு வருவேன், என்று சொல்கிறார்.

'மந்திரிகுமாரி' ஜி. சகுந்தலாவுக்கு மிருகக்காட்சி சாலைக்குச் சென்று பார்த்துவிட்டு வரவேண்டுமென்பது விருப்பமாம். ஆனால் அப்படி அவர் இப்போது போக முடியுமா? 'அந்த் ஒரு நா'ளில் இதைத்தான் செய்வேன் என்கிறார் அவர்.

இந்தப் பகுதியில் சொல்லியிருக்கும் நக்ஷத்திரங்கள் தவிர, மற்ற நக்ஷத்திரங்களுக்கும் இதே போன்ற ஆவல் பல இருக்கலாம். ஆனால் ஏறக்குறைய எல்லோருமே ''கொஞ்சம் காற்றாட, காலாட எங்காவது நடந்து போய்விட்டு வருவோமா?'' என்றுதான் ஏங்குகிறார்கள். அந்த ஒரு நாளும் வந்திடுமோ?

என். டி. ராமராவ்

தபால் பெட்டி

இக்கடிதங்களின் கருத்துக்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல.
— ஆசிரியர்.

*உலக அரங்கில் நாம்

'ஆன்' படத்தின் மூலம் வட நாட்டு நட்சத்திரங்களான திலீப் குமார், நிம்மி முதலியோர் மேல் நாட்டாருக்கு அறிமுகமாயினர். ஆவாரா மூலம் நர்கீஸ், ராஜ்கபூர் இருவரும் மேனாடுகளுக்கு அறிமுகமானார்கள். பால்ராஜ் சஹானி, காமினி கௌஷல் முதலியோர் சீனா சென்று உறவாடி விட்டு வந்தனர். 'தோ பிகா ஜமீன்' சீன மொழியிலே பதிவாக்கப்பட்டது-எப்படியும் வடநாட்டார் உலகினருக்கு நன்கு அறிமுகமாகியிருக்கின்றனர். கிருஷ்ணன் - மதுரம், சுப்ரமணியம், சூர்யகுமாரி முதலியோரின் மேனாட்டு விஜயமும் 'சந்திரலேகா' படமும் நம் பெருமையை விளக்கப் போதுமா? உலக கலைஞர்களோடு தொடர்பு கொள்ள இந்த மாதிரி ஓரிரு பிரயாணங்கள் போதாது! 'உஸ்பெக்' கலைஞர்கள் இங்கு வந்தது போல நம் நாட்டுக் கலைஞர்கள் பல துறையினரும் சென்று தமிழகத்தின் கலைத் திறமையை மேனாட்டார் அறியச் செய்ய வேண்டும். இந்தக் கலாசாரத் தொடர்புக்கு அரசியலார் ஏற்பாடு செய்ய வேண்டும். நடிப்பு மேதைகளும், நடன மேதைகளும், சங்கீதமேதைகளும் கலாசாரத் தொடர்புக்கு நல்ல தூதர்களாக அனுப்பப்பட்டால் தமிழகத்தின் பெருமை வெளிப்படுமல்லவா?

தி. நீலா,
தஞ்சை.

*மஞ்சள் பத்திரிகை

இப்போது ஆபாசமான சினிமாப் பத்திரிகைகள் பல கிளம்பி விட்டன. சினிமாவை நேசிப்பதாகவும் அதைச் சுத்தம் செய்வதாகவும் கூறிக்கொண்டு கண்டபடி எழுத ஆரம்பிக்கும் இந்த மட்டரக பத்திரிகைகள் பணவருவாயை மட்டும் அடிப்படையாகக் கொண்டவையாகும். மக்கள் மனதிலே மாசு கற்பிக்கும் இப்படிப்பட்ட பத்திரிகைகளை அரசாங்கமும் பட உலக ஸ்தாபனங்களும் ஒடுக்க முன்வர வேண்டும். பத்திரிகைத் தொழிலை விளையாட்டாக்கிக் கொண்டுவிட்ட இந்தப் பத்திரிகாசிரியர்கள் பண்பு தெரியாமல் எழுதுகிறார்கள். ஆபாசம் மலிந்தது என்று நாம் கூறும் ஹாலிவுட்டிலே கூட ஆபாசத்தை வெறுக்கும் போது, இங்கே இந்த மஞ்சள் பத்திரிகைகள் வளர்க்க முற்படுகின்றன. இந்தக் காளான் பத்திரிகைகளை ஒழிக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்தே ஆகவேண்டும்.

எச். டி. பாஷா,
கரூர்.

நிறைய தேவை

நம் சரித்திரம், வீரத்திற்கும் நேர்மைக்கும் பெயர் பெற்றவர்களின் வரலாற்றைக் கூறுகிறது. அவைகளைப் படமாகத் தயாரித்து வெளியிட்டால் மிகவும் நல்லது. கத்திச்சண்டைக்காக கண்ட கதைகளையும் படமாக்குவதைவிட சரித்திரக் கதைகளைப் படமாக்கினால் நாட்டுக்கு நல்லது. கட்டபொம்மன், சிவாஜி போன்ற அறிவிப்புகள் போதா. நிறைய பேர் முன் வந்து பெரிய அளவில் தயாரிப்பில் இறங்கவேண்டும். சரித்திர கதைகள் இப்போதைய கற்பனைக் கதைகளில் பலவற்றைவிட சுவாரஸ்யம் கொண்டவையாகும்.

பா. நடராசன்,
கோவை.

* இக்குறிப்பிடப்பட்ட இரண்டு கடிதங்களுக்கும் தலா ஐந்து ரூபாய் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

பாராட்டுகிறோம்

'பேசும் படம்' மார்ச் இதழில் 'பத்திரிகை தர்மம்' என்ற தலைப்பில் கடிதம் எழுதிய பாளையங் கோட்டை சகோதரரைப் பாராட்டுகிறோம். சில பத்திரிகைகள் கண்டபடி எழுதுவதால் கலைஞர்-ரசிகர்களிடையே தவறான கருத்து ஏற்பட்டு விடுகிறது. 'கலைஞர்களும் நம்மைப் போன்றவர்களே; அவர்கள் வளர்ச்சியே கலை வளர்ச்சிக்கு ஆதாரமாகும்' என்ற கருத்தை மக்களுக்கு உணர்த்தும்படி பத்திரிகைகள் செயலாற்ற வேண்டும். மஞ்சள் பத்திரிகைகளை ஒடுக்க நடிகர் சங்கம் முன்வர வேண்டும். அரசாங்கம் இவற்றையெல்லாம் விட்டு வைத்திருப்பது வருந்தத் தக்கது.

சரஸ்வதி-வரலக்ஷ்மி,
பொள்ளாச்சி.

குழந்தைப் படம்

இதுவரை சென்னையில் எந்தப் படத் தயாரிப்பாளரும் குழந்தைகளுக்கு என்று படம் தயாரிக்க முன் வராதிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. புகழும் பொருளும் பெற்ற படத்தயாரிப்பாளர்கள் பலர் இங்கே இருக்கிறார்கள். அரசாங்கமும் குழந்தைப் படங்களுக்கு வரி விலக்களித்திருக்கிறார்கள். இருந்தும்கூட குழந்தைப் படங்கள் தயாரிக்கப்படவில்லை. இனியாவது தயாரிப்புகள் ஆரம்பமாகுமா ?

அ. சா. நாகராஜன்,
செங்கற்பட்டு.

புதுமையாம் புதுமை!

புதுமை என்று பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள். ஆனால் படாதிபதிகள் என்ன புதுமையைச் செய்திருக்கிறார்கள்? ஆசை என்ற படம் வெளிவந்திருக்கிறது. வெற்றி பெற்ற பழைய படங்களின் அவியல் சம்பவங்களைக் கொண்ட படமாக அந்தப் புதுமைப் படம் திரையிடப் பட்டிருக்கிறது! சேகரும் ஜக்கனும் கதாநாயகி சுந்தரியை சந்திப்பதற்குத் திட்டம் போடும் காட்சி, சந்திரலேகாவில் அரண்மனைக்குள்ளே இதே என். எஸ். கே., மதுரம், சுந்தரிபாய் மூவரும் நுழைய திட்டமிடும் காட்சியைத்தான் நினைவுபடுத்துகிறது! இப்படத்தின் கனவுக் காட்சி 'பணம்' படத்தை நினைவூட்டுகிறது — ஆவாராவையும் நினைவூட்டுகிறது! ஜக்கன் சுந்தரியைப் பற்றித் தெரிந்து கொண்டு திரும்பும் காட்சி அம்பிகாபதியில் வந்ததின் மறுபிறப்பு! அமராவதி (எம். ஆர். சந்தானலட்சுமி) தன் தோழி (டி. ஏ. மதுரம்) அம்பிகாபதியை சந்தித்த விவரம் பற்றி கேட்கிறாள். அப்போது தோழி பிகு செய்கிறாள்! இந்தக் காட்சிகள் பழைய படங்களில் விமரிசையாகச் செய்யப்பட்டிருந்தன. இப்போது இவர்கள் என்ன புதுமை செய்கிறார்கள்? எத்தனை பேருக்குப் புதுமை என்றால் அர்த்தம் தெரியும்?

வஜ்ரவேல்,
காரைக்குடி.

பின் பற்றுவார்களா?

வங்காளத்தின் முதன் மந்திரி அவர்கள் சினிமா சம்பந்தமான கூட்டம் ஒன்றில் பேசுகையில், சினிமா கதாசிரியர்களின் வாழ்வு வளம்பெறுவதற்கு வேண்டிய முறையில் தன் அரசாங்கம் திட்டம் வகுத்து வருகிறதென்று கூறியிருக்கிறார், சினிமாக் கலையை வளர்க்க தன் அரசாங்கம் பல உதவிகளைச் செய்கிறதென்றும் கூறியிருக்கிறார். சிறந்த கருத்துக்களைக் கொண்ட படக்கதைகள் எழுதுவோருக்கு வருடந்தோறும் பரிசளிக்கும் உத்தேசமிருக்கிறதாம். எழுத்தாளர்கள் ஊக்குவிக்கப்பட்டால்—அவர்கள் நன்கு வாழும் வசதி பெற்றால்—மக்களுக்கு நல்ல கருத்துள்ள கதைகள் கிடைக்கும் என்பது அவரது தீர்ப்பு. நம் சென்னை அரசாங்கத்தார் கதாசிரியர்களின் வாழ்க்கைத் தரம் உயர வழி செய்வார்களா ? வங்க முதன் மந்திரியின் வழியைப் பின்பற்றுவார்களா ?

வே. கிருஷ்ணமூர்த்தி,
பம்பாய்.

தாயற்ற கதைகள்!

நம் படங்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பதில் தாய் என்ற குடும்பவிளக்கின் பாத்திரம் வருவதில்லை. "உன் தாயார் மட்டும் இப்போது இருந்தால்" என்பார் தந்தை. மற்றபடி தாயார் படம் ஆரம்பமாகும் முன்பே கதாசிரியர்களால் கொலை செய்யப்படுகிறாள். பெண் தகப்பனாரிடம் வாதாடுகிறாள். அப்போது அவர் தன் மனைவி இல்லையே என்று ஏங்குகிறார். தாயாரின் படத்தை மகளோ, மகனோ, கணவனோ பார்த்துப் பாடுவதாகவோ பூஜிப்பதாகவோ காட்டுவதால் பலனென்ன? தாயார்தான் எந்தக் குடும்பத்துக்கும் வழிகாட்டி. அவள் இருந்தால் குடும்பம் தென்புடன் இயங்கும். அவளை கதாசிரியர்கள் உயிருடன் நடமாட விட்டால் படங்களும் வெற்றிபெறும். இதைப் பட அதிபர்களும் கதாசிரியர்களும் கவனித்து ஆவன செய்வார்களா?

கௌசல்யா ஜெயசிங்,
சென்னை.

பட உலகில் ஒற்றுமை

பட உலகில் வரவர போட்டியும் பொறாமையும் அதிகரித்து விட்டன. ஒரே கதையை பலர் எடுத்துப் போட்டி போட்டுக் கொள்ளுகிறார்கள். ஒரே காட்சி பல படங்களில் வருகிறது. ஒரே கதை இரண்டு பெயரில் வருகிறது. இப்படி போட்டி அதிகமாகி விட்டதால் ஒற்றுமை சிதைந்து பட உலகம் பின்னுக்கிச் செல்ல ஆரம்பித்து விட்டது. கட்டுப்பாடற்ற எந்தக் காரியமும் உருப்படாது என்பதை பட உலக பிரமுகர்கள் அறிந்து தேவையானதைச் செய்ய முன்வரவேண்டும்.

சுப. கோ. நாராயணன்,
ஈரோடு.

சிறையில் சினிமா

வங்க சர்க்கார் திரைப்படத் தொழிலின் வளர்ச்சிக்கான பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். சிறைக் கைதிகளும் தலைவர்களின் வரலாற்றுப் படங்களைக் காண வசதி செய்து தந்திருக்கிறார்கள். இதனால் கைதிகள் மனந்திருந்த வழியுண்டு. செய்திப் பட இலாகா மூலம் நல்ல படங்களை கைதிகளுக்குக் காட்டி, அவர்கள் மனம் திருந்தவும், தொழில் அபிவிருத்தியில் ஈடுபடவும் வசதி செய்ய நம் சென்னை அரசாங்கம் முன்வரவேண்டும்.

ஆர். கிருஷ்ணராவ்,
மதுரை.

குடும்பத்திற்கு ஏற்ற படம்

எந்தக் கதையை எடுத்துக் கொண்டாலும் அதில் ஒரு நீதி இருக்கத்தான் செய்கிறது. ஆனால் நீதி சமூக உயர்வுக்குப் பொருத்தமான முறையில் எடுத்துக் காட்டப்பட்டால் அதனால் பலன் உண்டு. 'பேசும் படம்' மார்ச் இதழில் பெண்ணின் பெருமை கதையைப் படித்தேன். ஒரு தாய் தன் குடும்பத்தின் நிலையைப் புரிந்து கொள்ளவும், மகனுக்குத் தாயினிடம் பக்தி ஏற்படவும், வீட்டுக்கு வரும் நாட்டுப்பெண் குடும்பத்தின் ஏற்றத் தாழ்வுகளைச் சமாளிக்கும் பண்பை அடையவும் வழி செய்கிறது இக்கதை. கொடுக்கப்படும் முறை நன்றாக மனதில் பதிய வைக்கிறது நீதியை. இப்படிப்பட்ட கதைகள் தகுந்த முறையிலும் தரப்பட்டால் குடும்பத்தோடு சென்று பார்க்கலாம்.

எஸ். பரமேஸ்வரி,
மஸ்கெலியா, சிலோன்.

நல்ல முயற்சி

சினிமா ரசிகர்கள் சங்கத்தினர் சென்னையில் குழந்தைகளுக்காக ஒரு தனி சினிமாக் கொட்டகை கட்ட ஏற்பாடு செய்து வருகின்றனர். குழந்தைகளுக்காகச் சினிமா விழாக்கொண்டாடினார்கள். அப்போது குழந்தைகளுக்காக நிறைய தமாஷ் படங்களும் காட்டப்பட்டனவாம். மேலும் பிரதி வாரமும் வெளிநாடுகளிலிருந்து குழந்தைகளுக்கான தமாஷ் படங்கள் வரவழைத்துக் காட்டப்படுமாம். இந்த நல்ல முயற்சியைச்

செய்யும் சினிமா ரசிகர்கள் சங்கத்தைப் பாராட்டுவதுடன் அதன் முயற்சிகளுக்கு உதவும்படி பட உலகினரையும் அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எஸ். லட்சுமி தேவி,
தஞ்சை.

பாராட்டுகிறேன்

'பேசும் படம்' இதழில் எஸ். கே. சுவாமி எழுதிய கடிதம் கண்டேன். அவரது கூற்றை என்னைப் போலவே யாவரும் வரவேற்றுப் பாராட்டுவார்கள். நடிக, நடிகையரைப் பற்றிய தவறான எண்ணத்தைப் போக்க வேண்டிய பத்திரிகைகள் அவதூறாக எழுதுவது மிகவும் தவறு. ஆனால் துரதிருஷ்ட வசமாக இப்படிப்பட்ட மஞ்சள் பத்திரிகைகளுக்கு நடிக, நடிகையர் கட்டுரை எழுதி அனுப்புவதை வெறுக்காமலிருக்க முடியவில்லை. நடிகர் சங்கம் இதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும்.

பீ. கே. இரவீந்திரன்,
விருதுநகர்.

மரியாதை தேவை

வயதில் மூத்த நடிகர்கள், சந்தர்ப்ப வசத்தால் சிறு பாத்திரங்களில் நடித்தால் கதாநாயகனும் மற்றவர்களும் "டேய்...மடையா ...மிருதங்க தலையா?" என்றெல்லாம் அழைக்கிறார்கள். இது பார்ப்பவர்களிடையே தவறான கருத்தை ஏற்படுத்துகிறது. உதாரணமாக சிவாஜி கணேசன் எழுமலையை 'இங்கே வாடா! போடா' என்கிறார்.

பிச்சைமுத்து,
திருச்சிராப்பள்ளி.

[சிவாஜி கணேசன் ஏழுமலையை எதுவும் பேசவில்லை. அவரிடம் கணேசனுக்கு ரொம்பவும் மரியாதை உண்டு. ஆனால் சேகர் தன் வீட்டு வேலைக்காரனைக் கூப்பிடுகிறான், அவ்வளவுதான். படத்தில் நடக்கும் காதலும், கல்யாணமும், கொலையும் நிஜமென்று நினைக்கிறீர்களா?]



போன்: 63 தந்தி: SIMCO

தினம் குடிசைத் தொழிலாகத் தயாராகும் 3300 குரோஸ் தீப்பெட்டிகளும் எங்கள் டிப்போக்களில் செலவாகி விடுகின்றன.

சிறந்த சரக்கு உற்பத்தி! சிறப்பான பொதுஜன ஆதரவு!

எங்கள் 40 குச்சி கோபுரம் மார்க், சிம்கோ லேடீ மார்க், சிம்கோ சைக்கிள் மார்க், மைனர் சைஸ் சீனு லேடி மார்க், சிம்கோ 60 குச்சி வேட்டை சிங்கம் மார்க் தீப்பெட்டிகள், கடற்கரை, குளிர்ப்பிரதேசங்கள், மற்றும் மலபார் மழைக்கும் உகந்தவை.

★

சிம்கோ, சிவகாசி.

நன்றிகொன்ற செயல்

வளர்த்த கடா மார்பில் பாய்வது போல - திட்டிய மரத்தில் கூர் பார்ப்பதுபோல நடிமறி மறந்து நடந்திருக்கிறார் நடிகை பத்மினி 1954-ம் ஆண்டின் 'சிறந்த தமிழ் நடிகை' என்ற பாராட்டுக்குப் பதில் பேசும்போது, 'எனக்குத் தமிழ் பேச வராது' என்று கூறி விட்டாராம். தமிழருக்கும் விழா நடத்தியவர்களுக்கும் பெருத்த அவமானம். தமிழரின் தயவால் மூச்சு விடுகிற நடிகை பத்மினி. அவர் நடித்துப் புகழ் பெற்றது தமிழ்ப்படங்களின் மூலம். இங்கிலாந்திலிருந்து இறக்குமதியானவர்கள் கூடத் தமிழ்பேசுகிறார்கள். இவரும் தமிழ்ப் படங்களில் தமிழ் தானே பேசுகிறார்? ஆங்கிலப் படங்களில் நடிக்கவில்லையே! தமிழ் ரசிகர்களிடம் நடிகை பத்மினி மன்னிப்பு கோரவேண்டும்.

கா. முத்தையா,
ஜமால்பூர், பீகார்.

[இதைப்போல நமக்கு ஏராளமான கடிதங்கள் வந்திருக்கின்றன. மேற்படி நிகழ்ச்சியின் போது நானும் அங்கே இருந்தேன் பத்மினி பேச எழுந்தார். ஆங்கிலத்தில் ஆரம்பித்தார். ரசிகர்கள் உடனே அவரைத் தமிழில் பேசும்படிக் கேட்டார்கள். "தமிழில் எனக்கு நன்றாகப் பேசவராது" என்று சொல்ல விரும்பிய பத்மினி, இதே குறையின் காரணமாக 'எனக்குத் தமிழ் பேச வராது' என்று சுருக்கமாகக் கூறி உட்கார்ந்து விட்டார். அப்படி அவர் திடீரென்று உட்கார்ந்ததுதான் ரசிகர்களையும் - ஏன் என்னையும்கூடத் துணுக்குறச் செய்து விட்டது. ஆயினும் தமிழ் மொழியையோ தமிழர்களையோ அவமதிக்கும் எண்ணம் அவருக்குக் கொஞ்சங்கூட இல்லை என்பதை நம்பலாம். படங்களில் மிக நீண்ட தமிழ் வசனங்களை அழகாகவும் தெளிவாகவும் அவர் பேசுவதற்குக் 'காரணம், ஏற்கெனவே மேற்படி வசனங்களை மனப்பாடம் செய்து கொள்வதுதான். அன்றியும் சில விசேஷ நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போது முன்னேற்பாட்டுடன் பிரசங்கத்தைத் தமிழில் எழுதி வாசித்துப் பார்த்துத் தன்னைத் தயார் செய்து கொண்டு நல்ல தமிழிலேயே பேசியிருக்கிறார் என்பதையும் இங்கு நாம் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். உண்மையாகவே ஒருவரது உள்ளத்தில் எவ்வித நோக்கமோ களங்கமோ இல்லாதபோது திரும்பத் திரும்ப நாம் அவைகளைக் கற்பிப்பது நாகரிகமல்ல. முக்கியமாக கடவுள் கிருபையால் நமது கலைஞர்களிடம் இன்றுவரை எவ்விதமான துவேஷ மனப்பான்மையும் குடிகொள்ளவில்லை என்பது மகிழ்ச்சிக்குரியது. ஆ-ர்.]

தவறு எங்கே?

மாணவர்கள் பெண்களிடம் தகாத முறையில் நடப்பதாகச் செய்திகளில் அமர்க்களப்படுத்துகிறார்கள். சினிமா, நாடகம், பத்திரிகைகள், ரேடியோ இவைகளிலெல்லாம் இனக்கவர்ச்சியை உண்டாக்கும் காதல் கதைகளும் பாடல்களுமே இடம் பெறுகின்றன. 'அலிபாபா' படத்தில் முக்கால் வாசி பாடல்கள் இனக்கவர்ச்சி கொண்டவையே. தணிக்கையாளர்கள் சிறியவர்களல்ல. படித்த வயது முதிர்ந்த, அனுபவம்கொண்டவர்கள்தான். ஆனால் பாடல்களும் வசனமும் உடையும் சினிமாவில் இனக் கவர்ச்சியுடனேயே இருக்கின்றன. வரும் நடிகைகளும் இனக்கவர்ச்சியுடன் தோன்றி இளம் உள்ளங்களைப் பாழ்படுத்துகிறார்கள். சமீபத்தில் சினிமா கதைகூட தணிக்கை செய்யப்படும் என்று பத்திரிகைகளில் பார்த்தேன். கதை, பாடல்கள், தோற்றம், முக்கியமாக சுவரொட்டி விளம்பரங்கள் எல்லாவற்றுக்கும் தணிக்கை தேவை. அப்போது மாணவர்கள் மீது குற்றம் சொல்லத் தேவையிருக்காது. தினமும் இரவு ராணிகள் பற்றி அதிக செய்திகள் வருகின்றனவே தவிர வாலிபர்கள் தொடர்வதைப் பற்றியல்ல. அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

எம். ஒய். ராமசாமி,
செங்கற்பட்டு.

சினிமா ரஸிகர்களின் உண்மையான அபிப்பிராயங்களைத் தயாரிப்பாளர்களுக்குத் தெரியப்படுத்துவதுதான் இப்பகுதியின் நோக்கம்; யாரையும் புண்படுத்துவது அல்ல. —ஆசிரியர்.

பிரேமபாசம்

காதல் ஜோடியான தாராவும் ராதாவும் சந்திக்கிறார்கள். தங்கள் திருமணம்பற்றி அவன் தந்தையிடம் கேட்கும்படி தாரா கூறுகிறாள். 'அடி செருப்பாலே' என்று ராதாவின் தந்தை அவனைத் திட்டுவார் என்று, தாரா கூறுவதை வெட்டிவிட வேண்டும். அந்த வார்த்தை உபயோகப்படுத்தப்படுவது தவறாகும்.

ப. இராமதாசன்,
வேலூர்.

ராஜா ராணி

இளமையும் எழிலும் கொண்ட ராணி ஒரு நாடகக் கொட்டகையில் டிக்கட் கொடுக்கும் வேலையில் அமருகிறாள். அங்கு அவள் டிக்கட் கொடுக்கும்போது பாட்டுப் பாடுகிறாள். சமூகப் படங்கள் சமூக வாழ்க்கையைப் பிரதி பலிப்பவை என்று கூறுகிறார்கள். எங்கேயாவது டிக்கட் கொடுப்பவர்கள் பாடுகிறார்களா? பாடினால் கணக்கில் தவறு ஏற்படாதா? பாட்டுப் பாட வேறு இடம் இல்லையா? அபத்தமானது இந்தக் காட்சி.

ஏ. வி. ராஜரத்னம்,
மதுரை.

நல்ல தங்காள்

உடன் பிறந்த தங்கையைத் தன் நாட்டுக்கு அழைத்துவர நல்லண்ண மகாராஜா போகிறார். அவளும் ஒரு அரசிதான். அவளை அவர் வரவேற்க எப்படிச் செல்ல வேண்டும்? எது முறை? காட்டிலும் மேட்டிலும் தனியொருவராக பரிவாரமின்றிப் போவதுதான் நியாயமா? செலவைக் குறைக்கவோ என்னவோ, ராஜாவை ஒண்டிக் கட்டையாக்கி விட்டனர்!

வே. பா. சீனிவாசன்,
சென்னை.

நல்ல தங்கை

பட்டிக்காட்டான் கைலாசம் நாகரீக யுவதி மோகனாவை மணக்கிறான். அவளுக்கு மணவாழ்வு இன்பம் பயக்கவில்லை. அவள் ஒரு ஆனந்தக் கனவு காண்கிறாள். இருவரும் ஒட்டிக் கொள்வதுபோல் காட்டப்படும் காட்சி ஆபாசமாக இருக்கிறது.

பி. ஏ. முத்து,
கில்லாரணி

ஆசை

ஜக்கனும் சொக்கியும் காதலர்கள். ஒரு முறை அவர்களிருவரும் சந்திக்கிறார்கள். பிரியும்போது ஜக்கன் 'கையை நீட்டு' என்று கேட்டு அவள் நீட்டியதும் தடவிக் கொடுத்துவிட்டுப் போகிறான். மறுமுறை சந்திக்கும்போது முதுகைத் தடவி விட்டுப் போகிறான். ஆபாசத்தின் எல்லையைக் காட்டும் இக்காட்சிகளைக் கூசாமல் வெட்டி விடலாம்.

கே. ராமச்சந்திரன்,
பெங்களூர்.

பைத்தியம் பிடித்த காதலர்கள் இருவரும் மழையில் நனைந்தபடி கூவிக்கொண்டே வருகின்றனர். அப்போது ஒரு மரக்கிளை உடைந்து விழுகிறது. 'மண்டை தூள் தூளாகப் போய்விட்டிருக்கும். கதை சோக முடிவைக்கொண்டது' என்று நினைத்து கண்கடையில் நீரை வரவழைத்துக் கொள்ளும் போது ஹாஸ்யக் காட்சிவருகிறது. இருவரும் கண்விழிப்பதோடு அவர்களுக்குப் பித்தமும் தெளிந்து விடுகிறது! இக் காட்சியை வெட்டி விட்டால் நல்லது!

சுஜாதா,
சென்னை.

கதாநாயகன் ஒரு பைத்தியம். கதாநாயகி ஒரு பைத்தியம். இருவர் தலையிலும் மரம் விழுகிறது. இருவரது பெற்றோரும் ஓடி வருகின்றனர். அடிபட்ட இருவரையும் பாதி தூக்கிவிட்டு அப்படியே தங்களுக்குள் வாய்ச் சண்டை போட்டுக்கொள்ளுகின்றனர் பெற்றோர். இது இயற்கைக்கு விரோதமானது.

பி. தேவராஜன்,
நெல்லூர்.

'பேசும் படம்'

17, ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு
சென்னை-2

சந்தா விகிதம்

ஒரு வருஷம்

உள்நாடு	ரூ.	9	0	0
வெளிநாடு	,,	12	0	0

ஆறுமாதம்

உள்நாடு	,,	4	8	0
வெளிநாடு	,,	6	0	0

வி பி. பி.யில் அனுப்ப இயலாது. ஆறுமாதத்துக்குக் குறைந்த சந்தா கிடையாது.

குறிப்பு: 'பேசும் படம்' சந்தாதாரர்களுக்குப் பிரதி வருஷமும் ஏப்ரல் மாதத்தில் வெளிவரும் 'பேசும் படம்' ஆண்டு மலரும் அதிகக் கட்டணமின்றியே அனுப்பி வைக்கப்படும்.

அந்தக் குடும்பம் ஒரு தமிழ்க் குடும்பம். அந்தக் குடும்பத்தலைவர் ஜாதி வெறி கொண்டவர். தன் மகனையே ஜாதி வெறிக்குப் பலியிடத்துணிகிறார். அவர் மகனை வெட்டப் போகும்போது, கத்தியை அவரிடமிருந்து பிடுங்கிக் கொண்டு ஒரு வசனமாரி பொழிகிறாள் அந்தத் தமிழ்த்தாய்! தமிழா அது? "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்று அமரன் பாரதி முரசு கொட்டிய தமிழ் அதுவேதானா? காட்சியின் தன்மையையே புரட்டிவிடும் அந்த வசனமாரிச் சம்பவத்தை அப்படியே வெட்டிப் போடலாம்! அந்தச் சோகக் கட்டம் கேலிக் கூத்தாகி விட்டதே!

பி. ராமதுரை,
சென்னை.

சேகரின் தந்தை நிச்சயதார்த்தத்திற்கு ஏற்பாடு செய்ததும் சேகர் மறைந்து விடுகிறான். பெண்ணைப் பெற்றவர் மானநஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று நோட்டீஸ் விடுகிறார். பிறகு இது பற்றி எதுவும் கூறப்படவில்லை. ஆகையால் நோட்டீஸ் காட்சியை வெட்டி விடலாம். இல்லாவிடில் ராஜி செய்து கொள்வதுபோலவோ, பணம் கொடுப்பது போலவோ காட்டப்பட்டால் பணத்திமிர் அடக்கப்படுவதையாவது ரசிக்கலாம்.

ராஜலக்ஷ்மி,
கும்பகோணம்.

அலிபாபா

தெளலத் கழுதையிடம், "ஆயிரத்தோரு இரவுகள் சொன்ன அராபியக் கதைகளை ஒரே நாளில் சொல்லுகிறேன் வா" என்கிறான். இந்தக் கதையே ஆயிரத்தோரு இரவுக்கதைகளில் ஒன்றாக இருக்கும்போது, ஒன்றின் கதாபாத்திரம் இப்படியெல்லாம் பேசமுடியுமா? அபத்தமான இந்த வசனத்தை வெட்டிவிட வேண்டும்.

வெங்கடாச்சாரி,
சென்னை.

"சினிமா ரஸிகர்களுக்கு எது பிடிக்கும்? எதை ரஸிக்கிறார்கள்?" என்று தெரிந்து கொள்வதற்கு உதவுகிறது இப்பகுதி.

—ஆசிரியர்.

மதுரைவீரன்

புல்லர்களின் பொல்லாத செயலால் அரசன், வீரனின் மாறுகால் மாறுகை வாங்கும்படித் தீர்ப்பளித்து விடுகிறான். பிறகு தேவி மீனுக்ஷியின் அசரீரி மூலம் உண்மையறிந்து தண்டனையை நிறைவேற்றாமல் தடுக்க தானே விரைகிறான். ஆனால் துரதிருஷ்டவசமாகத் தண்டனை நிறைவேற்றப்பட்டு விடுகிறது. இதற்குக் காரணமாயிருந்த சதிகாரர்கள் நரசப்பனையும் மாஜீ தளபதியையும் வெட்டிக் கொல்ல வாளெடுக்கிறான் மன்னன். ஆனால் வீரன் அரசனைத் தடுத்து விடுகிறான். 'இன்னு செய்தாரை ஒருத்தல்—அவர் நாண நன்னயஞ் செய்து விடல்' என்ற குறள் வாக்கை நிரூபிக்கும் இக்காட்சி பிரமாதமாக இருக்கிறது.

எஸ். செல்லதுரை,
கோயம்பத்தூர்.

நரசப்பனை மணம் செய்ய விருப்பம் கொள்ளாத பொம்மியை அவனுக்குப் பலவந்தமாக மணமுடிக்க முனைகிறார்கள். அப்போது வீரன் அங்கே தோன்றிப் போர் புரிந்து பொம்மியைத் தூக்கிச்சென்று விடுகிறான். பொம்மண்ணனின் ஆட்கள் மீண்டும் பொம்மியையும் வீரனையும் பிடித்து நீதி கேட்க விஜயரங்கசொக்க மன்னனிடம் செல்கிறார்கள். எல்லோரும் தங்கள் தங்கள் விருப்பத்தைக் கூறுகிறார்கள். மன்னன் விபரம் புரிந்து கொண்டு, வீரனிடம் "இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்ய உங்களுக்குச் சரியான தண்டனை விதிக்க வேண்டும். அதாவது தண்டனை—ஆயுள் தண்டனை—என்றுமே மீள முடியாத தண்டனை. பொம்மியின் மனச்சிறையிலே ஆண்டாண்டுகளாக இருக்கத் தீர்ப்பளிக்கிறேன்" என்று கூறுகிறார். காதலர்களைப் பிரிக்க முனையும் இக்காலத்தில் இப்படிச் சட்டம் போட்டால் கூட நல்லதுதான். அரிய காட்சி இது.

தசரதன்,
திண்டுக்கல்.

சதாரம்

சந்திரன் சிறைப்படுத்தப்படுகிறான். அவனைக் காணச் செல்கிறாள் சதாரம். அவளை அவன் புரிந்து கொள்ளவில்லை. அவள் 'சாவித்திரியும் நளாயினியும்' என்று குறிப்பாகச் சொல்லுகிறாள். அவன் அவளைப் புரிந்து கொண்டு விடுகிறான். அவன் அவள் மனம் குளிர கள்வனைக் கண்டுபிடிக்க சேனாதிபதி உடையில் போகிறான். தன்னுயிர் மதியாது கணவனுக்கு ஏற்பட்ட இடர்களைப் போக்கத் துணை செய்யும் மங்கையின் வீரத்தையும் சொல்லாமற் சொல்லி குறிப்பறியச் செய்யும் பெண்ணின் சாதுரியத்தையும் விளக்கும் இக்காட்சியை நான் வெகுவாக ரசித்தேன்.

பா. கருத்தான்,
ஆத்தூர், சேலம்.

இந்த இரு அழகிகளைக் கொண்டு விசுவாமித்திரர் ஹரிச்சந்திரனின் சத்திய விரத பங்கம் செய்ய முயற்சிக்கிறார் — ஹரிச்சந்திராவில் நம்பியார், இ. வி. சரோஜா, குசலகுமாரி, சிவாஜி கணேசன்.

இளவரசன் சந்திரனுக்கு சதாரத்தை மணமுடித்து, அவன் சகோதரன் அழகனுக்குப் பட்டாபிஷேகமும் செய்விக்கிறார் மன்னர். அழகு அரசனானதும் அந்த மகாராஜாவுக்கு மரியாதை செலுத்த கையில் கத்தியுடன் வருகிறான் ஒரு காவலாளி. அதைக் கண்டு பயந்த அழகு அப்பாவின் மேல் தொத்திக்கொள்கிறான். ஹாஸ்ய ரசத்தை ஊட்டுவதுடன் தகுதியற்றவர் பதவிக்கு வந்தால் எழக்கூடிய பிரச்னைகளையும் விளக்குகிறது இக்காட்சி.

எஸ். சுகுமாரன்,
சென்னை.

பிரேமபாசம்

ராமகிருஷ்ணன் பிரேமாவின் காதலன். அவன் ஒரு திருடன் என்றறிந்தபோது தன் ஆசை வீணாகி விட்டதறிந்து மனமொடிந்து அவனையும் வெறுக்கிறாள் அவள். அவளுடைய கால் குணமாகி விட்டதறிந்த ராமகிருஷ்ணன் போலீஸார் துரத்தும் போது அவளிடம் ஓடி வருகிறான். அவள் சரமாரியாகப் பேசவே போலீஸாரிடம் அகப்பட்டுக் கொள்ளுவதாகக் கூறிக் கிளம்புகிறான். ஆனால் அவன் மேல் அவள் கொண்டிருந்த தூய காதலால் அவனைக் காட்டிக் கொடுக்க மனம் வரவில்லை. ஆகவே தப்புவித்து விடுகிறாள். அன்பினால் கட்டுண்டவர்கள் ஆபத்துக் காலத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க மாட்டார்கள் என்பதை இக்காட்சி விவரிக்கிறது.

டி. அகஸ்டின் சாயர்,
அய்யமாவாரூர்.

கடைசியில் கிருஷ்ணன்தான் ராமு என்பது வெளிப்படுகிறது. எல்லோரும் 'ராமு ராமு' என்று கூவுகிறார்கள். சந்தர்ப்ப வசத்தால் திருடனாகிவிட்ட ராமு, நல்ல காரியங்களுக்கே கூடியவரை பாடுபடுகிறான். கடைசியில் அவன் அகப்பட்டுக் கொள்ளும்போதுகூட நன்மையே செய்கிறான். சந்தர்ப்பம் ஒரு மனிதனைத் தவறானபாதையில் அழைத்துச் சென்றாலும் அவன் உள்ளம் சிறப்பாகவே இருக்கும் என்பதைநன்கு விளக்குகிறது இக்காட்சி.

கே. பாலகிருஷ்ணன்,
கோயம்பத்தூர்

தாரா, ராதா திருமண விஷயம் பேச நாகபூஷணத்திடம் போகிறாள் பிரேமா. 'பத்தாயிரம் இருந்தால் பேசு. இல்லாவிடில் போ' என்கிறார் அவர். அந்த அவமானத்தைத் தாங்க முடியாத பிரேமா பழைய நிலையை மறந்து விட்ட அவரைக் கண்டித்துப் பேசுகிறாள். அவர் அவள் வீட்டு அன்னம் உண்டு வளர்ந்தவர். அப்படியிருக்க இப்போது இப்படிப் பேசுகிறார். பணம் வந்தால் குணம் மாறும் என்பதை நிரூபிக்கிறது இக்காட்சி.

எம். எஸ். எஸ். மணியம்,
மல்லேஸ்வரம்.

பிரேமா தன் கடனை அடைப்பதற்காக நடனமாட இசைகிறாள். தன் குடியைக் கெடுத்தவனான நாகபூஷணம் பணத்திற்காக நெருக்கும்போது அவள் தன் கௌரவங்களைப் பாராது நடனமாடிக் கடனை அடைக்க முற்படுகிறாள். தம் குடும்ப கௌரவத்தைக் காக்க பண்பு மிக்க குடும்பப் பெண்கள் எந்தத் தியாகத்துக்கும் தயாராகி விடுவார்கள் என்பதைச் சித்தரிக்கும் இந்தக் காட்சியையே நான் பெரிதும் ரசித்தேன்.

எஸ். வெங்கடேசன்,
மேட்டூர் அணை,

தன் காதலிக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கும் கிருஷ்ணன், தாராவைக் காப்பாற்றி ராதாவையும் தேடிப் பிடித்து வந்து, பல ஆபத்துக்களை

எதிர்பார்த்தும்கூட ராதா - தாரா திருமணத்தை நடத்தி விடுகிருன். காதலின் தூய்மையை விளக்கும் இக்காட்சி மிகச் சிறந்ததாகும்.

இ. முருகேசன்,
வதயம்-கண்டியூர்.

ஆசை

சேகர் சுந்தரி என்ற கீழ்க்குல பெண்ணை மணப்பது இயலாது என்கிருர் ஜாதி வெறியரான அவன் தந்தை. சுந்தரி கடவுளை மனமார வேண்டுகிருள், அவனையே தன்னுடையவனுக்க வேண்டுமென்று. அவர்கள் கடைசியில் தம்பதிகளாகிருர்கள். கடவுளை நம்பினேர் கைவிடப்படார் என்பதை நிரூபிக்கிறது இந்தக் காட்சி.

எ. வி. ராமானுஜாசாரியார்,
வாரணவாசி.

ஜமீன்தார் மகன் சேகர் தொம்பரவப் பெண்ணை சுந்தரியுடன் ஆசிபெற அப்பாவிடம் வருகிருன். ஆனுல் அவர் அரிவாளால் அவர்கள் காதலைத் துண்டிக்க முற்படுகிருர். தாய் தடுக்கிருள். காதலர்கள் பைத்தியம் பிடித்தலைகிருர்கள். இந்த ரக பெற்ருேர்களுக்குச் சவுக்கடி கொடுக்கிறது இக் காட்சி.

ஜி. ராமமூர்த்தி,
கும்பகோணம்.

செல்வியின் பிறந்த நாளின் போது நடனம் நடைபெறுகிறது. அந்தச் சிறுமியும் நடனமாட ஆரம்பிக்கிருள். சிறு குழந்தைகளின் மனேபாவத்தை விளக்கும் இக்காட்சி சிறந்ததொன்ருகும்.

பீ. எஸ். ஆர்.
திண்டுக்கல்.

சுந்தரியை அதிவிரைவில் சந்தேகித்துக் கண்டபடி பேசி விடுகிருன் சேகர். அவனே கடைசியில் விவரமறிந்து மன்னிப்புக் கோருகிருன். பெண் ஒருவனிடம் இதயத்தை அர்ப்பணிக்கும் போது அவனைப் பற்றி யெல்லாம் சந்தேகம் கொள்ளவே மாட்டாள். ஆனுல் ஆண்கள் சந்தேகப் பேர்வழிகள்; அவசரக்காரர்கள் என்பதை விளக்குகிறது இக்காட்சி.

ஜே. ஏ. சாமி,
திருச்சி.

பெண்ணின் பெருமை

நீலா ஜமீன்தாரிணி ராஜேஸ்வரியின் முன் நடனம் ஆடுகிருள். அப்போது அங்கே வரும் அவள் தாயாருக்கும் ராஜேஸ்வரிக்கும் வாக்குவாதம் மூளுகிறது. நாகு கூசாமல் தன் தாயைப் பைத்தியம் என்று ஏசுகிருன். இந்திரன் கெட்டதும் சந்திரன் கெட்டதும் பெண்ணுலே என்பதை விளக்கிக் காட்டுகிறது இக்காட்சி.

எம். சாரங்கபாணி,
நாகர்கோயில்.

நாகதேவதை

பொழுது சாய்ந்தால் தன் கணவன் உயிர் போய்விடும் என்பதால் ஆதவனை அந்தரத்திலேயே நிறுத்தி விடுகிருள் கற்பரசி விபுலா! 'உன் கணவன் ஒருவனுல் உலகமே அழிவதா?' என்று கேட்கிருர்கள் மக்கள். பொது நலத்தை முன்னிட்டு ஆதவனை தன் கடமையைச் செய்ய அனுமதிக்கிருள் விபுலா. மக்கள் சேவையை விளக்கும் இது ரசமான காட்சியாகும்.

ஞா. விசுவலிங்கம்,
ஏ ' ல்.

ராஜாராணி

ராஜா கொடுத்த ரேடியோவில் பாட்டைக்கேட்டு ஆனந்தப்படும் ராணியிடம் அவள் தந்தை ஒரு போட்டோவைக் காட்டி அவள் இளம் வயதிலே மணமாகி மணாளனை இழந்தவள் என்பதை விளக்குகிருர். அழகுச்சிலை அயர்ந்து போகிறது. மனமுருக்கும் காட்சி. இளம் வயது திருமணங்களின் கொடுமையை இக்காட்சி விளக்குகிறது.

என். செந்தூர் பாண்டியன்.
ஏருவூர், இலங்கை.

கிருஷ்ணா பிக்சர்ஸ்

மதுரை வீரன்

வீரத்திற்கும் தியாகத்துக்கும் பெயர்பெற்றது நம் தமிழ்த்திரு நாடு. நம் வீர பரம்பரையிலே மதுரைவீரன் என்ற புகழ் பெற்றவனின் வீரமும் தியாகமும் அவனை தெய்வமாக்கியிருக்கின்றன. மதுரைவீரன் கதையை அறியாத தமிழனே இருக்க முடியாது.

காட்சி 1

பிறப்பும் துறவும்

வாரணவாசி பாளையத்தின் அதிபதியான துளசி அய்யா பல வருஷ காலம் பிள்ளைப் பேறின்றித் தவித்து, ஆண்டவனை வேண்டியதன் விளைவாக இப்போது ஒரு ஆண் மகவுக்குத் தகப்பனாகும் பாக்கியம் பெறுகிறான். அவன் மனைவிக்கு குழந்தை பிறந்ததை முன்னிட்டு மகத்தான விழா நடைபெறும் போது நிமித்திகர் அரசனைத் தனிமையில் அழைத்துப் போகிறார்.

அர: என்ன சுவாமி?

நிமி: இவ்வளவு மகிழ்ச்சி கொண்டாடும் உன்னிடம் அதை எப்படித்தான் சொல்வது?

அர: சொல்லுங்கள் சுவாமி!

நிமி: சோகக்கரைக்குத் தலைவனாகி விட உன் மனதைத் திடப்படுத்திக் கொள்.

அர: அப்படியென்றால்...?

நிமி: இன்னும் உனக்குத் தெரிந்திருக்காதுதான். பிறந்திருக்கும் பிள்ளை மகிழ்ச்சி தருவதாக இல்லை. குழந்தை கழுத்தில் மாலை உருக்கொண்டு பிறந்திருக்கிறது.



அர: அப்படியா! - இருந்தாலென்ன?

நிமி: மாலை சுற்றிப் பிறந்த குழந்தை, மன்னர் பரம்பரைக்கு ஆகாது. அரண்மனையில் குழந்தை இருப்பதே ஆபத்தான காரியம்.

அர: அதற்காக வெறுத்துவிட முடியுமா சுவாமி?

பாத்திரங்கள்

எம். ஜி. ராமச்சந்திரன்	வீரன்
என். எஸ். கிருஷ்ணன்	சின்னான்
டி. எஸ். பாலய்யா	நரசப்பன்
பானுமதி	பொம்மி
பத்மினி	வெள்ளையம்மாள்
டி. ஏ. மதுரம்	செல்வி

திரைக்கதை-வசனம்:
கவிஞர் கண்ணதாசன்

டைரக்ஷன்:
யோகானந்த்

இது ஒரு அதிசயக் குழந்தை!

நிமி: முடியுமா என்பது கேள்வியல்ல. முடிய வேண்டும் என்பது தான், சாஸ்திரம் கூறும் சட்டம். முடியாவிட்டால் அரசாங்கம் நிலைக்காது. குடிபடை வாழ்வு தழைக்காது. குமுறி எழும் செந்தீயில் கருகி விழும் வாரணவாசி மன்னா! உன் மனம் என்ன பாடு படும் என்பதை அறிவேன். ஆனால்...

அர: ஆனால்...ஆனால் என்னும் வார்த்தைக்கே ஆபத்து என்பது தான் பொருள்!

நிமி: ஆபத்துதான்; பேராபத்து. தெரியாதா உனக்கு? முன் ஒரு முறை இதே வாரணவாசி பாளையம் தீயில் அழிந்ததே. காரணம் என்ன? திரும்பித் தூக்கி நிறுத்தப் பட்ட பாடு எத்தனை? யோசித்துப் பார்!

அரசன் உட்காருகிறான்.

அர: சுவாமி! என் மூளை குழம்புகிறது.

நிமி: நாடு குழம்பாமலிருக்க வேண்டுமானால் நம் மூளை குழம்பித்தான் ஆக வேண்டும்.

அர: சாஸ்திரத்தில் பரிகாரம் ஒன்றுமில்லையா?

நிமி: சட்டம் தன் தீர்ப்புக்குத் தானே பரிகாரம் கூறுவதில்லை. சாஸ்திரமும் அப்படித்தான்,

அர: பின் வேறு வழி?

நிமி: ஒரே வழிதான்.

அர: என்ன சுவாமி அது?

நிமி: குழந்தையை இப்போதே காட்டில் கொண்டு போய் விட்டு விடவேண்டும்.

அர: ஆ......ஐயோ! முடியாது சுவாமி. முடியவே முடியாது. காணாமற் கண்டெடுத்த கற்பூரப் பெட்டகத்தை, என் கலி தீர்க்க வந்த கண்மணியை, வெறுத்து விட இடங்கொடுக்காது என் மனம். தன் கண்களைத் தன் கையாலேயே குத்திக்கொள்ள என்னால் ஆகாது சுவாமி, என்னால் ஆகாது.

நிமி: குடிமக்களின் கண்களைக் குத்துகிறேன் என்கிறாயா?

அர: உறவினர் வீட்டிலாவது வளர விட்டால்...?

நிமி: உறவினர் என்ன உனக்கு

உண்மையோடு உழைக்கோணும் தானே தன்னன்னா!

வேண்டாதவர்களா, அவர்கள் குடியும் நாசமாக. மன்னு! பன்னிப் பன்னிப் பேசுவதில் பயனில்லை. நெஞ்சைக் கல்லாக்கு. நினைவை இரும்பாக்கு. நாட்டின் நலம் காக்க நடத்து காரியத்தை. உம், சொல் சிக்கிரம்.

அர : சுவாமி!

நிமி : ஆம். அவன் பேரில் பாரத்தைப்போடு. அதிலாவது உனக்கு ஆறுதல் கிடைக்கட்டும்.

நிமி : வா...வா.

இருவரும் நேரே அரசியிடம் வருகிருர்கள். அவள் கட்டிலின் அருகிலிருக்கிருள்.

ராணி : பிரபு! பாருங்கள், உங்கள் பாலகனை. உங்களையே உரித்து வைத்திருக்கிறது. இல்லாத அடமெல்லாம் பிடிக்கிருன். இப்போதே பேச ஆசைப்படுகிருன். நாளைக்கே 'எனக்கு முடிசூட்டு' என்று கூடக் கேட்பான் போலிருக்கிறது. பாருங்களேன், அவன் ஆர்ப்பாட்டத்தை!

அர : பார்க்கிறேன் ராணி.

ராணி : விழிக்கு மை எழுதினேன்; விநாடியில் கலைத்து விட்டான். 'அப்பா' என்று வாயைத் திறக்கிருன்; ஆனுல் வார்த்தை தான் வரமாட்டேன் என்கிறது. சித்திரம் போல் விழியழகும், சிங்கார உதட்டழகும், முத்தாகச் சிரிக்கும்போது முகத்தழகும் பார்த்தாலே பசி தீரும். கண்ணு! அப்பாவைப் பாருடா! என்ன இருந்தாலும் நீ ஆண் பிள்ளை. அப்பா பிள்ளை தானே! பிரபு, என்ன நேர்ந்தது? ஏன் கலக்கம்? சொல்லுங்கள் பிரபு!

அர : ராணி! பெருமையோடு பெற்ருேம். கூடவே வைத்து அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை நாம்.

தொடாமல் எப்படித் தூக்க முடியும்?

ராணி : ஏன் பிரபு?

அர : கழுத்தில் மாலை யிருக்கிறது குழந்தைக்கு. மாலையுடன் பிறந்த குழந்தை மன்னர் பரம்பரைக்கு ஆகாதாம்.

ராணி : அப்படி யென்ருல்?

நிமி : காட்டில் கொண்டுபோய் விட்டு விட முடிவு செய்து விட்டோம்.

ராணி : ஆ! வேண்டாம். வேண்டாம், பிரபு. மாலை உருவம் தெரிந்தால் என்ன? உடம்பில் அது ஒரு குறிதானே? அது யாரை என்ன செய்யப் போகிறது? ஏன் இப்படிப் பயங்கர முடிவு செய்தீர்கள்? நான் குழந்தையைத் தரவே மாட்டேன். வேண்டுமானுல் என்

என்னைத் தொடாதே! அவனை ஏன் அடித்தாய்?

உயிரை எடுத்துக் கொண்டு போங்கள்.

நிமி: மகளே! நன்மைக்கு வகுத்த வழியிது, தடுக்காதே!

ராணி: யார் நன்மைக்கு? என் குழந்தையின் அழிவிலே தான் குடிமக்களின் நன்மையிருக்கிறதென்றால், அந்தக் குடிமக்கள் நாசமாகட்டும். என் குழந்தையைத் தொடாதீர்கள்!

அர: ராணி: ஆத்திரத்திலே பேசுகிறாய். நமக்குக் கிடைத்தது அவ்வளவுதான். பேசாமல் கொடுத்து விடு!

உங்கள் கன்னத்தில் அடித்ததும் என் இதயத்தில் அடித்தது போலிருந்தது.

ராணி: கூன், குருடு, செவிடு நொண்டி குழந்தையாய்ப் பிறந்தாலும் பெற்ற பிள்ளையைக் கொடுக்க எந்தத் தாய்தான் சம்மதிப்பாள்? 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு' என்பதை நீங்கள் கேட்டதில்லையா? இதை என்னிடம் துணிந்து சொல்ல எப்படி உங்களுக்கு மனம் வந்தது? இது உங்கள் பிள்ளைதானே?

அர: ராணி!...

ராணி: ஆண்கள் மனது கல் என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் பெற்ற பிள்ளையை வேண்டாமென்று சொல்லும் ரத்தபாசமில்லாத தந்தையை இன்றுதான் நான் பார்க்கிறேன்.

நிமி: தன் மகவின் ஆசையால் குடிபடையை வெறுத்தான் கொற்றவன் என்று நாடு பழிக்கவா? மகளே, நடப்பது எல்லாம் நன்மைக்கே. கொடுத்துவிடு குழந்தையை.

ராணி: நான் மாட்டேன். ஐயோ, என் செல்வத்தைக் கொண்டு போகாதீர்கள், கொண்டு போகாதீர்கள் சுவாமி.

அரசன் குழந்தையை எடுத்துச்சென்று விடுகிறான்.

ராணி: சுவாமி! ஐயய்யோ! கொண்டு போகாதீர்கள். என் குழந்தையைக் கொண்டு போகாதீர்கள்!

காட்டில் விடப்பட்ட அந்தக் குழந்தையை நாகமும் யானையும் காத்து வருகின்றன. சின்னான் என்பவன் அவன் மனைவியுடன் அங்கே வரும்போது குழந்தையைக் கண்டு, தங்கள் வீட்டுக்கு எடுத்

நாளை மறுதினம் உனக்கும் நரசப்பனுக்கும் திருமணம்!

அப்பா! எனக்கு எல்லாம் தெரியுமே! எல்லா விஷயமும் எனக்குத் தெரியுமே!

எங்களுக்குத் தெரியாது? நாங்களெல்லாம் எதற்காக இருக்கோம்?

குப் : அதைத்தான் பார்த்தேனே. ...டேய்! முதல்லே எட்டி நில்! உன் நிழல் எங்க மேலே பட்டாலே தீட்டு.

வீர : உம்! ஆபத்தில் சிக்கிய ஒரு பெண்ணைக் காப்பாற்ற வகையில்லை! தொட்டால் தோஷம்; நிழல் பட்டால் தீட்டுஎன்று... உங்கள் மூளையே மூளை!

து சென்று வளர்க்கிறார்கள். வீரன் என்று அந்தக் குழந்தைக்குப் பெயரிடுகிறார்கள். வளர்ந்து பெரியவனாகும் வீரன், தன் பெயருக்கேற்ப சிறந்த வீரனாகிறான்.

சாட்சி 2

ஆற்றுவெள்ளம்

தொட்டியம்பாளைய இளவரசி பொம்மி ஆற்றில் ஸ்நானம் செய்ய வருகிறாள். மாமன் நரசப்பனும் ஆட்களுடன் அங்கே வருகிறான். பொம்மி ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுவதைக் கண்ட வீரன், நதியில் குதித்துக் காப்பாற்றித் தூக்கி வந்து கரையில் போடுகிறான்.

நர : டேய்...டேய்! இளவரசியை ஏண்டா தொட்டாய்?

வீர : புத்திசாலித்தனமான கேள்வி! தொடாமல் எப்படித் தூக்க முடியும்?

குப் : பேசாம வேடிக்கை பாத்துகிட்டு நிக்கறது! இப்ப நாங்கள்ளாம் நிக்கலே?

நர : டேய்! தூக்க

நர : ஏய்! அதிகமா பேசாதே! அப்புறம் நான் மனுஷனா இருக்க மாட்டேன்.

குப் : ஆளே மாறிடுவார்!

வீர: ஆமா ஆமா! இன்றைக்கு இல்லையின்னாலும் என்றைக்காவது ஒரு நாள் நீங்கள்ளாம் மாறித்தான் தீரணும்.

நர : ஏய்! கேலியா செய்யறே நீசப்பயலே! முதுகுத்தோலை உரித்து விடுவேன் உரிச்சி.

வீர : ஆமா! இந்த வேலையை நீங்க எப்போ ஆரம்பிச்சிங்க?

நர : டேய், மூடுவாயை! இள

ஆ...என் பொம்மி...பொம்...பொம்...பொம்...

வரசியின் குலமென்ன, கோத்திரமென்ன, அந்தஸ்து என்ன? கீழ்ஜாதி நாய்.

வீர: ஓகோ! அப்போ நாங்கள்ளாம் கீழ் ஜாதி நாயின்னு, நீங்கள்ளாம் மேல்ஜாதி நாய் போலிருக்கு.

நரசப்பன் வீரனை அறைந்து விடுகிருன்.

நர: டேய்! என்ன சொன்னே?

கிருஷ்ணன்: எஜமான்! தண்ணிக்கு எல்லா ஜாதியும் ஒண்ணு தானுங்களே.

நர: பொம்மி! புறப்படு உம்... உம்...வா...உம்...வா.

அரண்மனை திரும்பும்போது, அரசகுமாரியை கீழ் ஜாதி மகன் தொட்டதாகச் சொன்னல் காட்டுக்கு அனுப்பி விடுவார்களென்றும், ஆகவே தான் காப்பாற்றியதாகக் கூறும்படியும் பயமுறுத்துகிருன் நரசப்பன். வேறு வழியின்றி பொம்மி ஒப்புக்கொள்ளுகிருள். பொம்மண்ணனிடம் தானே காப்பாற்றியதாகப் பெருமை பேசிக் கொள்ளுகிருன் நரசப்பன். பொம்மண்ணன் நரசப்பனின் வீரம் கண்டு பூரிக்கிருன்.

எதிர்த்து வந்தோரை விரட்டி அடித்தார்.

காட்சி 3

மானும் வேடனும்!

நந்தவனத்திலே சென்றுவிட்ட மானைத் தேடிவருகிருன் வீரன். பொம்மியின் தோழி கெல்வி முதலியோர் அவனைப் பரிகசிக்கிருர்கள்.

கெல்: ஏய்! யார் நீ? ஏய்! நீ ஏன்ன ஊமையா? ஏய்! உன் காதென்ன, செவிடா?

வீர: பேசாமே இருக்க மாட்டே?

தோழி: ஏய்! கேட்டதுக்கு பதில் சொல்! யார் நீ?

வீர: மனுஷன்! பார்த்தாத் தெரியலே?

கெல்: ஊஹூம்! வாலி சுக்ரீவன் கூட்டமோன்னு நினைச்சேன்.

வீர: ஓகோ! அவங்க தான் உனக்குப் பொருத்தம் போலே இருக்கு.

கெல்: ஏய்! மரியாதையாப் பேசு! யார் நீ?

வீர: என் பெயர் வீரன்.

கெல்: ஓகோ! உலகப் புகழ்பெற்ற புகழ்ச்சி வீரனே, பேரைமட்டும் சொன்னப் புரிஞ்சிக்கிறதுக்கு. எங்கே வந்தே?

'தேடி வந்தேனே...!' 'ஆஹா! போதும் போதும்...போதும்!'



தாச்சியப்பா...சங்கிலி கருப்பா!
பூச்சி காட்டும் போக்கிரி அப்பா!

வீர: நான் துரத்தி வந்த மான் இங்கே ஓடிவந்தது! அதைத்தேடி வந்தேன்.

கெல்: ஊஹூம்! முருகன் தேடிவந்தானுமே, அதைப்போல மானைத் தேடி வந்தாயா?

வீர: வள்ளிமானைத் தேடி வரலே; புள்ளி மானைத்தேடி வந்திருக்கிறேன்.

கெல்: ஊஹூம்! கேளுங்களடி பெண்டுகளா, கேளுங்க! அந்தப்புரத்து நந்தவனத்திலே ஐயா...

கேலி அதிகமாகிறது. அங்கே பொம்மி வருகிருள் அப்போது.

பொம்: என்ன இதெல்லாம்! யாரவன்?

கெல்: யாரோ குறும்புக்காரன்.

பொம்: ஆ...நீங்களா?

வீர: ஆம், நானே தான்!

பொம்: ஆற்றங்கரையிலே மாமன் செய்த தவறுக்கு உங்களிடம் மன்னிப்புக் கேட்கலாமென்றிருந்தேன்.

வீர: போதும்! அப்படிப்பட்ட நல்லெண்ணமிருந்தால் அவன் அடித்த போதே தடுத்திருக்கலாமே.

பொம்: தவருக எண்ணுகிர்கள்! அப்போது நான் எதுவும் செய்ய முடியாதவளாக இருந்தேன்! உங்கள் கன்னத்தில் அடித்ததும் என் இதயத்தில் அடித்தது போலிருந்தது.

வீர: அரண்மனை வரலாற்றிலேயே காண முடியாத அதிசயமம்மா இது!

பொம்: போர்க்களத்திலே புஷ்பங்கள்கூட மலர்வதுண்டு.

வீர: ஏன் வீண் வார்த்தை? என் மான் இந்தப் பக்கம்தான் ஓடி வந்தது. அதை நானே தேடிப் பிடித்துக் கொள்கிறேன்.

வீரன் மான் விழுந்த குழியில் விழுகிருன்.

பொம்: நீங்களா விழுந்து விட்டீர்கள்?

ஏறிவரக் கைகொடுக்கிருள்.

வீர: உன் உதவி எனக்குத் தேவையில்லை. மானை இங்கே ஒளித்து வைத்துவிட்டா என்னிடம் வேடிக்கை? இதைக் கேட்டிருந்தால் நானே கொடுத்திருப்பேனே! இதோ எடுத்துக் கொள்ளுங்கள்.

அவள் உள்ளத்திலே சூருவளியைக் கிளப்பிவிட்டு, அவன் அமைதியுடன் சென்று விடுகிருன்.

இந்த விருதை...அவர் வந்ததும்
கொடுத்து விடுங்கள்.

காட்சி 4

நக்ஷத்திர தோஷம்!

நரசப்பன் தன் மாமன் பொம்மண்ணனிடம் தன் திருமணம் பற்றிக் கேட்கிருன். தனக்கு பொம்மி கிடைக்க மாட்டாளா என்று நேருக்கு நேர் கேட்டு விடுகிருன் அவன்.

பொம் : அப்படியெல்லாம் ஒன்றும் நினைக்காதே நரசப்பா! இந்தப் பொம்மண்ணன் சொல் தவற மாட்டான். கூடிய சீக்கிரம்...

நர : ஆகா...ஆகா! நான் என்னென்னமோ நினைத்தேன். இவ்வளவு சுலபமா...

பொம் : ஆனல்...?

நர : ஐயய்யோ என்ன, மாமா ஆனல்...

பொம் : பொம்மிக்கு நட்சத்திர தோஷமிருப்பதாக ஜோசியர் சொல்கிருர்.

நர : நட்சத்திரத்துக்குத்தானே மாமா தோஷம்? பொம்மிக்கு தோஷமில்லையே! அப்போ பொம்மியைக் கலியாணம் செய்து கொண்டு என்ன ஆபத்து வந்தாலும் சரி, நான் பார்த்துக்கறேன்.

பொம் : அப்படியில்லையப்பா, ராஜாங்கத்துக்கே கெடுதல் வருமென்று ஜோசியர் சொல்கிருர்.

நர : ஏன் மாமா, இப்படிச் செய்தாலென்ன?

பொம் : எப்படி?

நர : ஒரு குண்டுமணி அளவு தங்கத்தில் பொம்மி மாதிரி உரு செய்து புரோகிதர்களுக்குத் தானம் கொடுத்து விட்டால்...?

பொம் : அது கூடாதப்பா, நாற்பத்தெட்டு நாள் காவேரிக் கரை கன்னிமாடத்தில் பொம்மி அம்பிகை விரதம் அனுஷ்டிக்க வேண்டுமாம். அதோடு எல்லாத் தீமைகளும் அகன்று விடுமாம்!

நர : நாற்பத்தெட்டு நாள்! ஒரு மண்டலம்! ஏயப்பா! சரி, பரவாயில்லை.

பொம் : அமைச்சரே! நாளை முதல் பொம்மி காவேரிக்கரை கன்னிமாடத்தில் அம்பிகை விரதம் ஆரம்பிக்கிருள். பரம்பரை விதிகளை அனுசரித்து சக்கிலியர் சேரியிலிருந்து தினம் ஒருவன் காவலுக்கு வரவேண்டும். இதை சேரிக்கு அறிவித்துவிடும்.

மந் : உத்தரவு அரசே.

பொம் : அப்புறம் கல்யாணம்.

நர : நான் சென்று பொம்மியிடம் தெரிவிக்கிறேன்.

வேகமாக ஓடுகிருன். மகாராஜா உத்தரவு பறை சாற்றப்படுகிறது.

ஒரு : தொட்டியம்பாளையாபதி பொம்மண்ண ராஜா அறிவிப்பு.

சின் : ஆங்.

வாசகம்: நாளை முதல் இளவரசி கன்னிமாடத்தில் விரதம் ஆரம்பிக்கப் போவதால், பரம்பரை வழக்கப்படி தினசரி ஒருவர் போய் காவல் காக்க வேண்டும். எல்லை தாண்டக் கூடாது, கூப்பிட்டாலொழிய உள்ளே போகக் கூடாது. இது மகாராஜா உத்தரவு.

சின் : அப்பா கேட்டுக்கிட்டீங்களா, நல்லா. ராஜாங்க விஷயம் ...ஜாக்கிரதையா நடந்துக்கிடணும்; ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொருத்தர். உம் முதல் வீட்டுக்காரனை அனுப்பு இன்னைக்கு.

ஒரு : டேய் சொக்கா, போடா.

சின் : உம் போங்க.

அன்று கன்னிமாட காவல் முறை வீரனுடையது. கிருஷ்ணன் வீரனுக்கு ஆடை யணிவித்தபடி பேசுகிருன்.

இரு : அண்ணே! நீ காவல் காக்கப் போறியே, அதிலே ஒரு பெரிய ஆபத்து இருக்கு.

வீர : என்னது?

இரு : ஒண்ணுமில்லே...

வீர : டேய்?

இரு : அண்ணே! நீ ராஜா வாய்ப்பொறந்திருக்க வேண்டியது...?

வீர : ஏன், தேவனுப் பொறக்கணுமுன்னு சொல்றது தானே?

இரு : ஏன்ன, முப்பத்திரண்டு

லெட்சணமும் அப்படியே பொருந்தி யிருக்குது!

வீர : எவ்வளவு?

இரு : முப்பத்திரண்டு லட்சணம்.

வீர : முப்பத்திரண்டு லட்சணமா? எங்கே, அது என்ன என்னுன்னு கொஞ்சம் சொல்லுங்களேன், பார்ப்போம்.

இரு : எனக்குத் தெரியா தண்ணே

வீர : அப்போ தெரியாமல் பேசாதேன்னு சொன்னேனு இல்லியா?

இரு : பேசறவங்களெல்லாம் தெரிஞ்சுக்கிட்டுத்தான் பேசருங்களோ? என்னமோ சொன்னதைக் கேட்டுக்கிட்டு போவியா? உம், இந்தா!

வீர : நேரமாச்சு! அப்பா அம்மா வந்ததும் நான் காவலுக்குப் போயிட்டேன்னு சொல்லு.

இரு : ஆம். அண்ணே. அண்ணே. அண்ணே. இந்தா இதையும் கொண்டுபோ.

பாய், தலையணை தருகிருன்.

வீர : இதெதுக்கு?

இரு : ஏனு? நேத்து நான்தான் காவலுக்குப் போயிருந்தேன். நேத்து என் முறைதான். அங்க போனதுக்கப்புறந்தான் யோசனை பண்ணினேன், 'ஆகா ஒரு பாயும் தலைகாணியும் கொண்டு வராமல் போயிட்டோமே'ன்னு.

வீர : ஆமா,...காவலுக்குப் போனியா, இல்லே தூங்கப் போனியா?

இரு : அங்கே போனுத் தூங்கித்தான் ஆகணும். வேற வேலே என்ன இருக்கு? அங்கே ஒரு கோடு போட்டிருக்காங்க? அந்தக் கோட்டைத் தாண்டி ஒருத்தரும் போகக்கூடாதாம். நானு தெரியாமத் தாண்டிட்டேன். என்னைக் கேக்குறதுக்கு யாருமே கிடையாது. அங்கே பொம்பளேங்க இருக்குருங்கன்னு சொன்னுங்களே, அந்தப் பொம்பளேங்களுக்கும் நமக்கும் எந்தவிதச் சம்பந்தமும் கிடையாது. கடேசியா நின்னு நின்னு பார்த்தேன். தூக்கமோ வர ஆரம்பிச்சிடுச்சு. கையைத் தலேக்கு வச்சுப்படுத்தவன்தான், சூரியன் வந்ததுக்கப்புறந்தான் எந்திருச்சேன்.

வீர : சோம்பேறி!

இரு : சோம்பேறியா?

இரு : இந்தா பாரு ... இந்தா பாருண்ணே! மரியாதையாச் சொல்றேன். இந்தப் பாயும் தலேகாணியும் கொண்டுகிட்டுப்போ.

சின்னுன் : ஆமடா ... பாயும் தலேயணையும் மட்டும் போதாது. ஒரு போர்வையும் கொடுத்து அனுப்பு. குரங்குப்பய நீ சேர்ந்தேயில்லே.

வீர : அப்பா! நான் போயிட்டு வந்துட்றேன்.

சின் : வீரா! நீ இப்போ காவலுக்குப் போறது அவசியம் தான்! நான் ஒரு கதை சொல்கிறன்! அதைக் கேட்டுட்டுப்போ.

இரு : வயசாயிட்டால் இந்த வழவழான்னு கதை சொல்ற வழக்கம் தன்னுலே வந்துடுது...

சின் : டேய் ... டேய் ... டேய்? நானுடா வழவழான்னு கதை சொல்றேன் ? நான் இப்பச் சொல்லப்போற கதை பசை; அப்படி மனசைப் போயி கவ்விப் பிடிச்சிக்கும், தெரியுமா? ஒரு...

வீர : அப்பா நேரமாயிடுச்சி... நான்...

சின் : உம்...நீ இப்போ அவசியம் கேக்க வேண்டிய கதையின்னு, நீயுங்கேளு. இங்கே வாங்க.

வீரன் காவலுக்குச் செல்கிருன். அவன் அழகை ரசிக்கிருள் இளவரசி பொம்மி.

பொம்: கெல்லி! அங்கே காவல் காக்கிருரே, அவர் யார் என்று உனக்குத் தெரியுமா?

கெல் : ஓ, தெரியுமே? தருதிக்கு மீறிக் குறும்பு பேசும் சக்கிலியன். அன்றைக்குத் தோட்டத்திலே ஆர்ப்பாட்டம் செய்தானே, அவன்தானே இவன்?

பொம்: அவர் நடையைப் பார்த்தாயா?

கெல்: ஓ! நாடகமேடை வீரனைப்போல இருக்கிறது!

பொம்: ஓயாத கால்களும் உறங்காத உள்ளமும் கொண்ட அவர் உணர்ச்சி...?

கெல்: சாயாத புலி காட்டும் வெறும் பாவனை!

பொம்: இல்லையடி? என் கண்களுக்கு இந்தக் காட்சி ஆச்சரியமாகவே காணப்படுகிறது.

கெல்: நியாயம்தான். கன்னிப் பருவமல்லவா? ஏனிருக்காது?

பொம்: போடி குறும்புக்காரி! நீ பெரிய கிழவி பாரு!

கெல்: இல்லை. இந்த நாடகத்திலே எனக்கின்னும் அநுபவமில்லை. அது வந்த பிறகு இருவரும் பரிமாறிக் கொள்ளலாம்! நீ வா, அம்மானை ஆடலாம்.

பொம்: இல்லையடி. 'அவருக்கு கொஞ்ச நேரம் ஓய்வு கொடுக்கணும்...எப்படி?

கெல்: ஆபத்து... ஆபத்து...... ஆபத்து.

வீரன் ஓடி வருகிறான்.

வீர: என்ன ஆபத்து?

பொம்: ஒண்ணுமில்லை.

வீர: ஒண்ணுமில்லையா?

பொம்: ஆமா, ஆபத்து.

வீர: என்ன ஆபத்து? சொல்லுங்கள்!

பொம்: ஒண்ணுமில்லை. வெகு நேரமா நடந்துகொண்டிருக்கிறீர்களே, கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளக் கூடாதா?ம்......!

வீர: ஊஹூம். அதைப்பற்றி நீங்க ஒண்ணும் கவலைப்பட வேண்டாம். உண்மையிலேயே ஆபத்து ஏதாவது இருந்தா மட்டும் கூப்பிடுங்க; வர்றேன்.

வெளியே போய் விடுகிறான், அங்கே வருகிறான் நரசப்பன்.

காட்சி 5

பலப்பரீட்சை!

நர: ஏய்! எங்கே போயிட்டு வர்ரே?

வீர: கன்னிமாடத்துக்குள்ளே.

நர: ஆம்பளைங்க அங்கே போகக்கூடாதுன்னு தெரியுமில்லே உனக்கு?

வீர: அபயக்குரல் கேட்டால் காவல் காப்பான் உள்ளே போகலாமென்று அந்தச் சட்டத்தில் ஒரு விதி. அது தெரியுமில்லே உங்களுக்கு?

குப்: ஏய்! சட்டம் போட்டதே அவரு, சட்டத்தைப் பற்றி அவருக்கிட்டே பேசுறியே.

வீர: யாரு சட்டத்தைப் போட்டாங்கங்கறது கேள்வியில்லை. சட்டத்தை இப்ப யாருமே மீறக் கூடாது! தெரியுமா உங்களுக்கு......?

நர: அப்படி என்ன ஆபத்து வந்துடுச்சி அங்கே?

வீர: ஒண்ணுமில்லே.

நர: ஒண்ணுமில்லாமலா சத்தம் போட்டாங்க?

வீர: அது அவங்களைக் கேட்க வேண்டிய விஷயம்.

நர: நான் போய்க் கேட்டுக்கிட்டு வர்ரேன்.

வீர: அதுதான் முடியாது. பெண்களைத் தவிர, யாரும் உள்ளே போகக் கூடாது என்று சட்டம்... தெரியுமா?

நர: நான் போகலாம்.

வீர: அப்போ நீங்க பொம்பளையா?

குப்: ஆமா, சந்தேகமில்லாமே.

நர: ஆமா. சந்தேகமில்லாமே.

வீரன் சிரிக்கிறான்.

நர: டேய்! என்ன சொன்னே. என்ன சொன்னே?

குப்: பொம்பளையின்னு சொன்னேன்.

நர: டேய், நான் அரண்மனை அதிகாரி. நீ வீணா சாகப்போறே!

(105-ம் பக்கம் பார்க்க)

ராஜ சுலோசனா
லக்ஸ் டாய்லெட் சோப்
தேர்ந்தெடுக்கிறாள்
ஏனென்றால் அது தூய்மையானது, வெண்மையானது
ராஜ சுலோசனா தரும் அழகுமுறைக் குறிப்புக்கள்!
"உங்கள் சருமத்தை மிருதுவாக எழிலோடு வைத்திருக்கும் பொருட்டு நீங்கள் நன்றாகத் தேய்த்திட..."
"லக்ஸ் டாய்லெட் சோப்பின் செழிப்பான நுரை—அதற்கு மிகுந்த நறுமணம் உண்டு".
"பிறகு நீராட்டித் துடைத்திடுங்கள்—மிகுந்த புதுமை யின்பத்தை உணர்வீர்கள்!"
"பூரண உடல் வனப்புக்கு, ஸ்நானத்துக்கான பெரிய சைஸ் உபயோகியுங்கள்—நான் செய்வது போல".
LUX
TOILET SOAP
சினிமா நட்சத்திரங்களின் தூய,வெண்மையான, அழகு தரும் சோப்
இந்தியாவில் தயாரித்தது
LTS. 476-50 TM

கேள்வி-பதில்

பதில்களைப்படித்து விட்டு நீங்கள் சிரிப்பதுடன் விஷயங்களையும் தெரிந்து கொண்டால் மெத்தசந்தோஷம்

— ஆசிரியர்

என். பி. பாலாஜி, சென்னை

எனக்கு கத்திச் சண்டை, குத்துச்சண்டை மற்ற எல்லா வித்தைகளும் நன்ருகத் தெரியும். புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். என்னுடன் சண்டைக்கு வருவாரா?

படத்திற்காக அவற்றை எம்.ஜி. ஆர். கற்றுக் கொண்டிருக்கிருரே தவிர, உம் போன்றவர்களுடன் சவாலுக்கு நிற்க அல்ல!

ஜெயலக்ஷ்மி, கோழிக்கோடு

'பேசும் பட'த்தில் வெளிவந்த 'நக்ஷத்திரங்களின் கிரகங்களிலே' என்ற பகுதியை மீண்டும் ஆரம்பிக்கிறீர்களா?

சிறிது காலம் பொறுத்திருங்கள். உங்கள் கோரிக்கை நிறைவேறலாம்.

சுப. கோ. நாராயணன், ஈரோடு

உங்களுக்குப் பிடித்த டைரக்டர் யார்?

வெற்றிப் படங்களை உருவாக்கித் தருபவர்!

'பேசும்-பட'த்தில் ஆங்கில நடிகர்களையும், படங்களையும்பற்றி ஏன் ஒன்றுமே வெளியிடுவதில்லை?

நம் நாட்டுப் படங்களைப்பற்றி முழுக்க முழுக்க மக்களுக்குத் தெரிவிக்க விரும்புவதால்.

மனிதன் இழந்தால் பெறமுடியாதது எது?

மானம்!

கேள்விகள் ஏன் உண்டாகின்றன?

சந்தேகம் முளைப்பதால்.

மனிதன் எப்போது வேதாந்தம் பேச ஆரம்பிக்கிருன்?

கையால் ஆகாத நிலையை அடையும்போது!

ஏ. ராமலிங்கம், மல்லாகம்

மேல் நாடுகளில் விசிறிகள் நக்ஷத்திரங்களைப் பார்க்க விரும்புவதில்லையாமே காரணம், என்ன?

தவருன செய்தி! ஆனல் இங்கு முட்டி யடித்துக் கொண்டு போய் விழுவதைப்போல் ரஸிகர்கள் அங்கு செய்வதில்லை. ஒழுங்காக நடந்து கொள்கிருர்கள், அவ்வளவுதான்.

ஒரு மனிதன் கலைஞனுவதற்கு வேண்டிய தத்துவங்கள் என்ன?

கலையுணர்ச்சியும், ரஸிகத் தன்மையும்.

ப. ப. சுப்ரமண்யம், கருவூர்

கடவுளை நீங்கள் நேரில் பார்த்துப் பேசியதுண்டா?

நல்ல இதயம் கொண்ட மனிதர்களைப் பார்த்திருக்கிறேன்!

நேர்மையுள்ள மனிதன் நிலை தடுமாறி ஒரு தவறு செய்து விட்டால் என்ன செய்வது?

அனுதாபப் படலாம்; ஆத்திரப் படக்கூடாது.

மனிதன் நினைக்கின்ற ஆசைகள் அனைத்தும் நிறைவேறுகின்றனவா?

நிச்சயம் இல்லை! இல்லாவிட்டால் அவன் ஏன் இன்னும் கடவுளையும், காலத்தையும் மதிக்கிருன்?

எம். ராதாகிருஷ்ணன், பம்பாய்

எம். கே. டி. பாகவதர் தயாரிக்கும் 'பாக்ய சக்கரம்' படத்தைப் பற்றி 'பேசும் பட'த்தில் ஏன் ஒரு செய்தியும் காணப்படவில்லை. முன்னதாகச் செய்தி தரும் பத்திரிகை 'பேசும் படம்' என்ற நாள் என்று வரும்?

'பேசும் பட'த்தில் பல மாதங்களுக்கு முன்பே, பாகவதர் இப்படியொரு படத்தைத் தயாரிக்க திட்டமிட்டிருக்கிறார் என்ற செய்தியும், வங்கப் படத்திலிருந்து தழுவப்பட்ட கதை அது என்றும் செய்தி தரப்பட்டிருக்கிறது. தவிர 'பேசும் பட'த்தில் வெளிவரும் எல்லா செய்திகளுமே அவை ஊர்ஜிதமாக்கப்பட்ட பின்னரே வெளிவருகின்றன. ரஸிகர்களுக்கு விழுந்தடித்துக் கொண்டு முதலில் செய்தியைக் கொடுப்பதைவிட, உண்மையான செய்திகளை வெளியிடுவதையே 'பேசும் படம்' தனது கொள்கையாகக் கொண்டிருக்கிறது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

'கள்வனின் காதலி'யில் "வானம்பாடிகள் போல' என்ற நாடக பாட்டில் இருக்கும் இனிமை, 'வெய்யிற்கேற்ற நிழல் உண்டு' என்ற பாட்டில் இல்லை, என்ற என் அபிப்பிராயம் சரிதானா?

இரண்டு முறை சரிதான், போதுமா?

எஸ். பி. எஸ். தனசேகரன்

'ஆடை அலங்காரம்' என்ற பகுதியில் நடிகர்களின் ஆடை அலங்காரம் வருமா?

வரும்.

1955 வருஷத்திய படங்கள் என்று 1956-ல் வெளியான 'நல்ல தங்காள்' படத்திற்கு வருஷ மலரில் விமர்சனம் எழுதியிருக்கிறீர்களே, ஏன்?

1955 இறுதியிலே அப்படம் சில ஊர்களில் திரையிடப்பட்டு விட்டது.

பி. கே. டோரா, மொரட்டுவா

காதலில் தோல்வி அடைந்தவர்கள் என்ன செய்ய வேண்டும்?

தற்கொலை செய்து கொள்ளாமலிருக்க வேண்டும்!

'என்னைப்போல் இன்னொருவன் இல்லை' என்று நினைப்பவர்களை என்ன வென்று அழைக்கலாம்?

'தலை கனத்தவன்' என்று!

எஸ். சீனு, கீழையூர்

தற்கால நாகரீகத்தில் நீங்கள் எந்த அம்சத்தை ஆட்சேபிக்கிறீர்கள்?

போலியின் மூலம் ஏற்படுத்தும் மருட்சியை!

தற்சமயம் நடிப்புத் துறையில் முன்னேறும் நடிகை ஒருவர், தன் உடல் பெருக்கத்தில் கவனம் செலுத்துமாறு சினிமா ரஸிகர்களின் சார்பாக யாரிடம் தெரிவித்தால் வெற்றி கிட்டும்?

என்னைக் கருத்தில் கொண்ட கேள்விதானே இது?

எஸ். கணேசன், சென்னை

குமரியிலிருந்து கிழவிவரை, நம் நடிகைகள் பாவாடை – தாவணி அணிந்த உடையில் நடிக்கிறார்கள். இந்த உடை குறிப்பிட்ட வயதுக்குத்தான் என்பதை எப்போது படமுதலாளிகள் நிர்ணயம் செய்வார்கள்?

உங்களைப் போன்ற விழிப்படைந்த ரஸிகர்களின் எண்ணிக்கை ஆயிரமாயிரமாகப் பெருகும் போது.

சினிமா நக்ஷத்திரங்கள் தங்கள் மனத்துயரை யாரிடம் சொல்வார்கள்?

அவர்களது நம்பிக்கையைப் பெற்றவர்களிடம்!

அமரர் எனப்படுபவர் யார்?

புகழுடம்பால் புவியில் வாழுபவர்.

வசந்தா, பண்ருட்டி

மு. கருணாநிதி எழுதியுள்ள 'ராஜா - ராணி'யில், ராணியின் தந்தை "கடவுளே!" என்று அழைக்கிறார். கருணாநிதி தான் கடவுள் இல்லை என்று சொல்பவராயிற்றே! இங்கு எப்படி எழுதினார்?

"கடவுள் இல்லை" என்று கருணாநிதி சொல்லியிருப்பதாகத் தெரியவில்லையே!

பத்மினி, அஞ்சலிதேவி இருவரும் ஹிந்திப் படங்களில் நடித்திருக்கிறார்களே, அவர்களுக்கு ஹிந்தி பேசத் தெரியுமா?

தெரியும்.

என். சம்புகேஸ்வரி, பம்பாய்

உங்கள் தினசரி பொழுபோக்கு என்ன?

'பேசும் படம்'!

நீங்கள் படப்பிடிப்புக்குச் செல்லும்போது, உங்கள் மனைவியையும் அழைத்துப் போவதுண்டா?

இல்லை. போட்டோகிராபரை அழைத்துப் போவேன்.

ஒரு மாதத்தில் நீங்கள் எத்தனை படங்கள் பார்க்கிறீர்கள்?

எனது நக்ஷத்திர பலனைப் பொருத்தது இது!

'பேசும் படம்' இதழை நான் பெரிதும் விரும்புகிறேன், ஏன்?

கூலிக்கேற்ற பரிசாக இருப்பதால்!

எம். அமனுல்லா, கள்ளிக்கோட்டை

உண்மை என்றால் என்ன?

இறவா வரம் பெற்ற வஸ்து!

ஜெயராஜ், கண்டி

ஹாஸ்ய நடிகர் சந்திரபாபு தற்போது எந்தப் படத்தில் நடித்து வருகிறார்? விலாசம் என்ன?

காத்தவராயன் படத்தில் நடித்து வருகிறார். அபிராமபுரம், சென்னை என்பது அவரது விலாசம்.

தா. ஜீயர், கோவில்பட்டி

அலிபாபாவில் 'அழகான பொண்ணுநான்' என்ற பாட்டைப் பாடுவது பானுமதிதான் என்று என் நண்பர் சொல்லுகிறார். உண்மையா?

பானுமதி தான் நடிக்கும் படங்களில் எல்லாம் சொந்தக்குரலிலேயேதான் பாடி வருகிறார்.

எஸ். கல்யாணி, பம்பாய்

'கண்ணின் மணி'களை ஹிந்தியில் எடுப்பார்களா?

ஹிந்திப் படமொன்றைத் தழுவிய கதைதானே அது!

மதுரை வீரனை ஹிந்தியில் எடுத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

உங்கள் ஆசை நிறைவேறினால் ஆச்சரியப்படுவதற்கில்லை. 'மதுரை வீரன்' ஹிந்தியில் வரப்போவதாக விளம்பரங்கள் சொல்கின்றன.

டி. எஸ். சுப்ரமண்யன், பூனா

ஏப்ரல் இதழில் பானுமதி நடித்த முதல் தமிழ்ப்படம் ராஜ முக்தி என்றிருக்கிறது. நான் ரத்னகுமார் என்று சொல்கிறேன். இது சரியா?

ராஜமுக்தி 1946-ல் வந்தது. ரத்னகுமார் 1949-ல் திரையிடப்பட்டது.

ஆர். எம். எஸ். வாசன் கோட்டையூர்

அலிபாபா, ஜெயசிம்ஹன் முதலிய படங்களில் நடித்திருக்கும் வஹிதா ரெஹ்மான், காமிரா மேன் ரெஹ்மானின் மனைவியா? அவர் நடித்த முதல் படம் எது?

வஹிதா ரெஹ்மானுக்கு இன்னும் திருமணமாகவில்லை. அவர் தோன்றிய முதல் படம் ரோஜுலு மாராயி.

ஜி. சுப்ரமணியன், காஞ்சீபுரம்

அழகுக்கு யார் முதலில் அடிமையாகிறார்கள்! கட்டிளங் காளைகளா, கட்டழகிகளா?

ரஸிகத்தன்மை உள்ள எவரும் அழகுக்கு அடிமையாகத்தான் செய்வார்கள்.

சையத் அலி, தாம்பரம்

'பெண்ணின் பெருமை'யை டைரக்ட் செய்த பி. புல்லய்யா நடிகை சாந்தகுமாரியின் கணவரா?

ஆமாம்.

கா. கோவிந்தன், திருவண்ணமலை

நடிக, நடிகைகள் தங்கள் வசனங்களை மனப்பாடம் செய்து பேசுகிறார்களா, அல்லது பார்த்துப் படிக்கிறார்களா?

இரண்டு வகையும் உண்டு.

கே. வேணுகோபால், மதுரை

தமிழ்நாட்டில் சினிமாத் தொழிலில் சிறந்த 'மேக்-அப்' கலைஞர் யார்?

ஹரிபாபுவைச் சொல்லலாம்.

கனகராஜ், திருவனந்தபுரம்

குணசுந்தரியில் குணசுந்தரியின் தந்தை மகளிடம் தந்தைமேல் பிரியமா? கணவன்மேல் பிரியமா?'' என்று கேட்கிறார், குணசுந்தரி. ''கணவன்'' என்கிறாள். இதைப்போல் ஒரு தந்தை தன் மகனிடம், ''உனக்கு மனைவி பெரியவளா? தந்தை பெரியவரா?'' என்று கேட்டால் என்ன சொல்வான்?

குணசுந்தரி காலத்திய வாலிபனாக இருந்தால் தந்தையைத்தான் சொல்வான்.

டி. சி. பிச்சை, திருச்சி

'பேசும்-படம்' வாசகர்கள் என்றாலே...என்றுதான் அர்த்தம். அப்படியானால் என்ன?

உங்களை புத்திசாலிகள் என்று அழைத்துக்கொள்வதில் தவறு இல்லையே!

வீ. சீவலமுத்து, தலையார்

நடிகை டி. ஆர். ராஜகுமாரிக்கு சொந்தத்தில் எத்தனை தியேட்டர்கள் இருக்கின்றன?

சென்னையிலுள்ள அவரது பெயரைக் கொண்ட ஒரே தியேட்டர்தான்.

இ. மா. காந்தி, இருமாத்தூர்

அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்—இதை விளக்குக?

எவ்வளவோ மட்டமான படங்கள் வந்து போன போதிலும் நாம் சினிமா பார்ப்பதை நிறுத்துவதில்லையல்லவா? சினிமாவின் மீது நாம் கொண்டிருக்கும் அன்பல்லவா இதற்குக் காரணம்?

உடுமலை கவிராயர் தற்போது ஏதேனும் படங்களுக்கு பாட்டு எழுதுகிறாரா?

பாக்கியவதி உட்பட கால் டஜன் படங்களுக்கு மேல் எழுதி வருகிறார்.

சர்வதேச பிலிம் விழாவுக்கு தமிழ்ப் படங்களுள் எந்தெந்தப் படங்களைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள்?

இதுவரை எந்த விழாவுக்கும், எந்தத் தமிழ்ப் படமும் தேர்ந்தெடுக்கப்பட்டதில்லை.

எஸ். கே. தாமோதரன், சிங்காநல்லூர்

'நிரபராதி' என்ற படத்தில் சிவாஜி கணேசன் முக்காமலா

திறமை மிக்க நடிகை ஜி. சகுந்தலா தற்போது 'ராஜராஜன்', 'தாய்க்குப் பின் தாரம்', 'தெருப்பாடகன்' முதலிய படங்களில் நடித்து வருகிறார்.

வக்கு இரவல் குரல் கொடுத்தது உண்மையா?

உண்மைதான்.

இளம் கண்ணன், மலைக்கோட்டை

கடவுளுக்கு யார் மேல் அதிகம் பிரியம்?

நாஸ்திகர்கள் மீது! அவர்கள் தானே கடவுளுக்கு அதிக விளம்பரம் கொடுக்கிருர்கள்!

ரோஜாவைச் சுற்றி முட்கள் இருப்பது ஏன்?

இன்பத்தை அடையுமுன் துன்பங்கள் பல வழியில் எதிர்படும் என்பதை விளக்க.

மனிதன் எப்போது நம்பிக்கையை இழக்கிருன்?

சிந்தனை மேலே வளர மறுக்கும் போது.

எல். என். ரத்ன, பெங்களூர்

அறிவு முக்கியமா, அழகு முக்கியமா?

அழகில்லாத குறையை அறிவினல் சமாளிக்க முடியும்.

ரூ 6 தான்

கைக்கடிகாரம்

10 வரு உத்தரவாதமுள்ள 15 ஜுவல் கொண்ட கைக்கடிகாரத்தை சங்கிலித் தொடர் முறையில் (Chain System) ரூ 6க்குப் பெற இன்றே எழுதுங்கள்.

JAI HIND WATCH Co.,
(P. P. M.) (P. B.) 97 AMRITSAR

ஏ. வி. ராஜம், மதுரை

நடிகையின் கணவன்-தமிழ்ப் படங்களைப் பார்க்கும் ரஸிகன் இருவரில் அதிக பொறுமைசாலி யார்?

ரஸிகன் படத்தை தவிர்க்க முடியுமே!

அனுபவமும் திறமையும் இல்லாத படத் தயாரிப்பாளர்கள், கற்பனைத் திறனில்லாத டைரக்டர்கள், பிறரின் கதையைத் திருடி தழுவி எழும் கதை, வசனகர்த்தாக்கள், மட்டமாகப் பாடலெழுதும் பாடலாசிரியர்கள், பிறர் அமைத்த மெட்டுகளைக் காப்பியடிக்கும் சங்கீத டைரக்டர்கள், நடிக்கத் தெரியாத நடிக நடிகையர், போதிய தேர்ச்சி இல்லாத டெக்னிஷியன்கள் தமிழ்ப்படவுலகில் இன்று அதிகம் நடமாடுவதற்குக் காரணம் என்ன?

விழிப்படையாத ரஸிகர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால்.

கே. நடராஜன், வேலூர்

மூப்பு என்பது என்ன?

மரணவாயிலின் முந்திய படி.

'நான் பெற்ற செல்வம்' படத்தைப் பற்றி மலரில் ஒரு நேயரின் கேள்விக்கு "மக்களன்பைப் பெற்றிருப்பவர் மீது தூவப்படும் மாசுகள் அவை என்று ஏ. பி. நாகராஜன் சொல்கிருர்" என்று பதில் சொல்லியிருக்கிறீர்கள். தங்களுக்குத் தெரிந்த சொந்தமான பதில் கூறத் தெரியாதா?

சாட்சியின் வாக்கு மூலத்தைவிட, வாதியின் வாக்குமூலமே முக்கியமானதல்லவா? நாகராஜனே தன் கதையைப் பற்றிய விபரத்தை வெளியிட்டிருக்கும் போது, மேற்கொண்டு நான் தனியாக எதைச் சொல்ல விரும்புகிறீர்கள்?

அன்புப் பிரியன், கமுதி

ஜெமினி கணேசனின் கார் நெம்பரைக் கூற முடியுமா?

புதிய காருடையதா, அல்லது பழைய காருடையதா?

எஸ். கே. பிக்சர்ஸ்
குலதெய்வம்
ஏவி. எம். ஸ்டூடியோ
வில் எஸ். கே. பிக்சர்
ஸார் குலதெய்வம் என்ற
படத்தைத் தமிழில் தயா
ரித்து வருகிறார்கள்.



நூதனமான
கதையமைப்
பைக் கொண்ட
இப்படம் படா
டோபமின்றி
வளர்ந்து வரு
கிறது.



மிக விரைவில் திரைக்கு வரவிருக்கும் இப்படத்தில் பிரபல நடிகர்கள் நடிக்கிறார்கள்.

சஹஸ்ரநாமம், பண்டரிபாய், டி. பாலசுப்ரமணியம், முஸ்தபா, எம். என். ராஜம், எஸ். எஸ். ராஜேந்திரன், மைனுவதி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி முதலியோர் நடிக்கும் இப்படம் கிருஷ்ணன் பஞ்சுவின் டைரக்ஷனில் தயாராகிறது.

89686

மினர்வா

சாரங்கதரா

'சாரங்கதரா' தமிழ்ப் படத்தில் சிவாஜி கணேசன், பானுமதி, ராஜசுலோசனா முதலியோர் நடிக்கின்றனர்.

3 M211.N4>1P
N58.14



சென்னை-600 008

ரேவதி ஸ்டுடியோவில் வி.எஸ். ராகவனின் டைரக்ஷனில் தயாராகிறது சாரங்கதரா.

பாஸ்கர் புரொடக்ஷன்ஸ் இல்லறமே இன்பம் தற்போது தமிழ் நாட்டில் ஓடிக்கொண்டிருக்கின்றது.

என்.டி. ராமராவ், ராஜ்யம், எஸ். ஜானகி, ராஜசுலோசனை முதலியோர் நடித்த 'இல்லறமே இன்ப'த்தின் வசன கர்த்தா எஸ். எம். சந்தானம்.



மதுரை வீரன்

(தொடர்ச்சி)

வீர: அது அந்தக் காலம். ஆத்தங்கரையிலே என்னை அடிக்கும்போது பேசாமல் இருந்தேனே அப்போ நீ அதிகாரியா யிருந்த காலம். இப்போ இந்த இடத்துக்கு நான் தான் அதிகாரி. யாரும் சட்டத்தை மீற அனுமதிக்க முடியாது, தெரியுமா?

நர: உம். உனக்கு அவ்வளவு நெஞ்சுத் துணிச்சலா? இருக்கட்டும் உன்னைப் பேசிக்கிறேன்.

வீர: கடைசியாக சொல்றேன், என் கை பலத்தைப் பரீட்சை பார்க்காதீர்கள்.

நர: ஆ! என்ன சொன்னே? டேய்!... இன்னைக்கு என்ன கிழமை?

குப்: வெள்ளிக்கிழமை?

நர: ஆகா.

குப்: என்னுங்க!

நர: இன்னைக்குக் கத்தியைக் கையாலே தொடக்கூடாதப்பா.

வீர: அப்படீன்னு இதை வச்சிக்கிடுறீங்களா?

நர: ஏய், சும்மாயிரு....சும்மாயிரு. அப்போ, இப்போ போராட்டம் வேண்டாம். அற்பனே! பிழைத்துப்போ. சரிதானே!

குப்: சரிதான்.

போய் விடுகிறார்கள். மழை பலமாகப் பெய்கிறது. வீரன் அப்போது கடமையைச் செய்கிறான்.

பொம்: அடி! அபயக் குரல் கொடடி,

செல்: மீண்டும் காரணமில்லாமலா, என்னால் முடியாதம்மா!

பொம்: ஐயய்யோ, அவர் மழையில் அவதிப்படுகிறாரே, என்னால் சகிக்க முடியவில்லையடி. இந்தா! நீ குரல் கொடுக்கிறாயா? இல்லை...?

தமிழ்நாடு ஏஜெண்டுகள் ..
சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், மேல கோபுர வாசல், மதுரை.

கெல் : சரிசரி, எனக்கென்ன வம்பு? ஐயோ, ஆபத்து, ஆபத்து...ஆபத்து...

வீரன் ஓடி வருகிறன்.

வீர : என்ன ஆபத்து?

கெல் : அங்கே...!

வீர : என்ன சமாச்சாரம்?

கெல் : இளவரசிக்கு மயக்கம்!

வீர : மயக்கமா? நான் வைத்தியரைக் கூப்பிடட்டுமா?

கெல் : இல்லே, இல்லே. நீங்களே...

வீர : நானு? நான் வைத்தியன் இல்லேயே!

பொம் : பரவாயில்லே. தெரிந்த வரையில் பார்த்தால் போதும்.

வீர : என்ன செய்கிறது?

பொம் : தலே சுற்றுகிறது, கையைப் பாருங்க.

வீர : கையி......கையி......நானு பார்க்க...

கெல் : தலேசுற்றுவதற்குக் கையெதற்கு?

வீர : கையி...ஆம்... இருக்கும் இருக்கும். பித்தம் அதிகமாயிருக்கும் போலிருக்கு.

கெல் : ஏம்மா! பித்தத்தில் இது எந்த வகை? திடீர் பித்தமா? அல்லது மாசம் ஒரு முறையா? வருஷத்திற்கு ஒன்ரு?

பொம் : ஏய்! நீ பேசாமலிரு. அவர் சொல்லட்டும்.

வீர : ஓஹோஹோ, சரிதான், இது திடீர்ப் பித்தந்தான். தானு வந்த பித்தம் தானுத்தான் போகணும், இது எந்த வைத்தியனுலும் மாத்த முடியாது. எருதுக்கு நோவு, காக்கைக்கு கொண்டாட்டம். நான் வர்ரேன்.

காட்சி 6

பொம்மியின் சேரி விஜயம்!

வீரன் மழையில் நனைந்ததால் அவனுக்குக் காய்ச்சல் வந்து விடுகிறது. இதையறிந்த கெல்லி பொம்மியிடம் கூறுகிருள்.

கெல்: அம்மா, அம்மா! வீரனிருக்காரே...

பொம் : என்ன?

கெல் : காலேயிலிருந்து கடுமையான காய்ச்சலாம்.

பொம் : ஐயய்யோ! நான் அப்போதே நினைத்தேன். ஊரிலே பெய்த மழையெல்லாம் அவர் தலேயிலேதானே பெய்தது. இப்பொழுது எப்படி இருக்கிருரோ!

கெல் : ஏம்மா கவலேப்படுறீங்க. இதுக்கெல்லாம் அந்த உடம்பு வாடுறதா?

பொம் : இல்லே! வாடி போய்ப் பார்க்கலாம்.

கெல் : நன்ருக இருக்கிறது நியாயம்! பாளேயத்து இளவரசி பருவம் வந்த மங்கை-பட்டப்பகலில் சேரிக்குப் போவதா? பார்த்தவர்கள் என்ன சொல்வாங்க. இப்போதுதான் புரிகிறது!

பொம் : என்னடி புரிகிறது?

கெல் : காதலுக்குக் கண்ணில்லே என்பாங்க. இரவு பகல் எதுவுமே கிடையாது என்று புரிகிறது.

பொம் : கெல்லி, விளேயாடாதே! எப்படியானுலும் அவரைப் பார்த்தாக வேண்டும்.

கெல் : கட்டாயம் பார்த்துத் தான் ஆகணுமோ?

பொம் : ஆமாம்.

கெல் : அப்படியானல் ஒண்ணு செய்யலாம்.

பொம் : என்ன?

கெல்லி பொம்மியின் காதில் சொல்கிருள். அதன்படி இரவில் பொம்மி ஜெம்பிப் போகிருள்.

நர : ஏய், நில் இங்கே வா, இப்படி! பொம்மி எங்கேபோருள்?

கெல் : எனக்குத் தெரியாதுங்க.

நர : தெரியாதா? வழியனுப்பிட்டு வர்ரே. கேக்கப்போனுத் தெரியாதா? மரியாதையாச் சொல்லு, இல்லேலே உன் தலே போயிடும்.

கெல் : காத்துவாங்கபோனுங்க.

குப் : போகட்டும்.

நர : டேய்! பேசாம இரு. அர்த்த ராத்திரி முக்காடைப் போட்டுட்டு காத்தா வாங்கப் போறா? ஏய்! அடி வாங்காமே சொல்லமாட்டே?

கெல் : இல்லீங்க.

நர : சொல்லு...சொல்லு.

கெல் : இல்லீங்க, சொல்லிடுறேனுங்க, சேரிக்கு வீரனைப் பார்க்க போறாங்க.

நர : ஆகா! அவ்வளவு துணிச்சலா? இருக்கட்டும்; இருக்கட்டும். ஏய் இதை யாருகிட்டேயும் சொல்லக் கூடாது.

கெல் : இல்லீங்க.

நர : போ அப்படி.

கெல்வி போய் விடுகிறாள்.

நர : டேய், டேய்! பாத்தியா! சேரிக்குப் போயிருக்கா! ஏன்னா, சேரியிலே மட்டுந்தானே காத்தடிக்குது. வேற இடத்துலே காத்து இல்லே. வா, மாமா கிட்டே சொல்லு.

குப் : காத்தடிக்கிறதையா?

நர : ஏய்! பொம்மி போனதை.

குப் : சரி.

பொம்மி வீரனை சந்தித்து விட்டுத் திரும்புகிறாள். நரசப்பன் மூலம் விவரமறிந்த மன்னர் நரசப்பனுக்கு அவளை மணம் முடிக்க நாளை மறுதினம் தக்க நாள் என்று தீர்மானமாகக் கூறி விடுகிறார். கெல்வி சின்னானிடம் வந்து பொம்மி அழைப்பதாகக் கூறுகிறாள்.

சின் : என்னம்மா சொன்னீங்க?

கெல் : இளவரசியம்மா உன்னைக் 'கையோட கூட்டிக்கிட்டு வரச் சொன்னாங்க.

சின் : அதைவிட எமதர்மன் கூப்பிடறார்ன்னு சொல்றது தானே!

கெல் : என்னப்பா இது. ஒரு முக்கியமான விஷயமாம். உன்னைக் கூட்டிக்கிட்டு வரச் சொன்னாங்க.

சின் : ஐயய்யோ, எனக்குப் பயமா யிருக்கே. ஏம்மா! என் பய

நரம்புகள் ஓய்ந்துவிட்டால் சகலமும் ஓய்ந்துவிடுகிறது

துரதிருஷ்டம்
கவலை
அதிக வேலை
நாள்பட்ட அஜீர்ணம்

இவைகள் நரம்புத் தளர்ச்சியின் சில சாதாரண காரணங்கள்

ஞாபக மறதி
பயந்த ஸ்வபாவம்
பிரமை
விரக்தி எண்ணம்
மயக்கம்

இவைகள் இதன் சங்கடமான விளைவுகள்

கவிராஜ் பண்டிட் துர்கா டட் ஷர்மா வைத்திய வாசஸ்பதி அவர்களால் கண்டுபிடிக்கப் பெற்ற

உலகப் பிரசித்திபெற்ற மருந்தான

நவரத்ன கல்பம்

(ஒன்பது உயர்ந்த கற்களின் கலவை: வைரம், கெம்பு, நீலம், மரகதம், புஷ்பராகம், பவளம், முத்து, கோமேதகம், வைடூரியம்)

சாப்பிட்டு நரம்புத் தளர்ச்சியினின்றும் விடுபடுங்கள்

இலவச பிரசுரத்திற்கு எழுதவும்:

THE MANAGER:

NAVRATNA KALPA PHARMACY

JULLUNDUR CITY (India)

Grams: 'NAVRATNA' Phone: 401

மெல்லாம் போனதுக்கப்புறம் நான் வர்றேன்.

செல் : உன் பயமெல்லாம் எப்பப்பா போகும்?

சின் : மூணு நாளாகும்.

செல் : ஊஹூம், அப்போ வர மாட்டே, இரு இரு பார்க்கிறேன். இந்தச் சின்னனை.

சின் : உம்.

செல் : இளவரசியம்மா...

சின் : ஊம்...ஹோ......ஹோ... என்னம்மா சத்தம் போட்டு...

செல் : பின்னே வா!

சின் : ஊஹூம்.

செல் : வரமாட்டே? இந்தச் சின்னனை எங்க இளவரசியம்மா...

சின் : ஐயோ, நீ. சும்...நான் வர்ரேன், வர்ரேன்.

செல் : என்ன நிக்கிறே? வா!

சின்னன் கீழே விழுகிருன்.

செல் : ஹி ஹி ஹி ... என்ன இது?

சின் : வாழைப்பழத்தோலு. வாழைப்பழத்தோல்லே வழுக்கி விழுற காலம் மலையேறிப் போச்சு. ஏன்னு மனுஷன்ல்லாம் சுதாரிச்சு நடக்க ஆரம்பிச்சுட்டான். ஆமா, செல்லியம்மா! ராஜாமவ என்னை எதுக்கு கூப்பிட்டாங்க?

செல் : உன்னை இந்த செருப்புத் தைக்குற வேலையை விட்டுட்டு இந்த தேசத்துக்கு ராஜாவாக்கலாமுன்னு கூப்பிடிருப்பாங்க.

சின் : ஐயோ! அது என் வேலையைவிட ரொம்பக் கஷ்டமாச்சே.

செல்வி சிரிக்கிருள்.

பொம் : என்னடி சிரிப்பு?

சின் : அம்மா! நமஸ்க், நமஸ்க் —நமஸ்க்.

பொம் : அவர் எப்படி இருக்கிறார்?

சின் : ஆரு? எம்பையன்தானே? சௌக்கியமா இருக்கிருன்.

பொம் : ஒரு முக்கியமான விஷயம்.

சின் : என்ன?

பொம் : இந்தக் கடிதத்தை அவரிடம் கொடுக்க வேண்டும்.

சின் : ஓகோ! ஹோஹோ...... இதிலே என்ன இருக்கு?

பொம் : என் வாழ்வின் எதிர் காலம், நிகழ்காலம் எல்லோமே அதில் அடங்கியிருக்கிறது.

சின் : ஆ...சரி.

கடிதத்துடன் விடு திரும்புகிருன் சின்னன்.

செல் : என்ன, ராஜா மாதிரி நடந்து வர்றே?

சின் : ராஜாவேதான்.

செல் : அப்போ இந்த கூஜாவைக் கையிலே வச்சுக்கோ.

சின் : இந்த விஷயத்தைக் கேட்டையின்னு...

செல் : வெண்டைக்காய் சத்து மாதிரி யிருக்கும்.

சின் : அடச்சே, உட்காரு.

செல் : என்ன விஷயம்?

சின் : இந்தா பிள்ளை, வேலை செஞ்சுகிட்டே இருந்தேன்.

செல் : ஊம் ஊம்.

சின் : ராஜகுமாரி தோழிவந்து என்னைக் கூப்பிட்டுச்சி.

செல் : ஆங்...?

சின் : நான் போனேன். உடனே ராஜகுமாரி ஓடிவந்து என் பக்கத்துலே நின்னுகிட்டு, 'மாமா' அப்படின்னுகூப்பிட்டுச்சி.

செல்: அப்போ என்னையும் 'அத்தை'யின்னு சொல்லியிருக்கும்.

சின் : கேளேன், அப்புறம் என்ன நடந்ததுன்னு! காலைத் தொட்டுக் கும்பிட்டுச்சி.

செல் : அப்படியா! மச்சான், மச்சான், மச்சான்! நீ போன ஜென்மத்திலே ராஜாவா பொறந்திருப்பே!

சின் : இருக்கும், இருக்கும். போன ஜன்மத்துலே நல்ல வேளை அதோட நின்னுதே.

செல் : அப்புறம்?

சின் : இதோபாரு! இந்தக் கடிதம்...இதைக் குடுத்தது?

செல் : அதுலே என்ன எழுதி யிருக்கு?

சின் : அதுதான் தெரியலே. ஒருவேளை இந்த ராஜ்ஜியத்தை நமக்குத் தரதாக எழுதியிருக்குமோ?

செல் : ராஜ்யமா? ஆத்தாடி! நமக்கு வேண்டாம். நம்மாலெ சமாளிக்க முடியாது.

சின்: ஆ...ஆமா! அது சண்டை சச்சரவு அது இது, வேண்டாம். ஆமா, இதை மகன் கிட்டேயாக்கும் குடுக்கச் சொல்லியிருக்குது.

செல் : என் மகன் கிட்டேயா?

சின் : உம்!

செல் ; மச்சான்! இது பெரிய இடத்துப் பொல்லாப்பு. இந்தசங்கதியை என்மகன்கிட்டே சொல்விடாதே.

சின் : நான் சொல்லலே. பைத்தியக்காரத்தனமா நீ உளறிவச்சுப் போடாதே.

செல் : நான் சொல்ல மாட்டேன்.

வீரன் தன் தோழர்களுடன் வந்து விவரமறிந்து கொள்ளுகிறான். திருமணத்தன்று பொம்மியை அவன் கடத்திக்கொண்டு சண்டியர் விட்டுக்குப்போய் விடுகிறான்.

சண் : நீங்க எதுக்கும் கவலைப் பட வேண்டாம். இந்த இடத்தை உங்க சொந்த இடம் மாதிரி நினைச்சி இருக்கலாம். என் உயிர் உள்ள வரையிலே உங்களுக்கு ஒரு குறையுமில்லாமே காப்பாத்துறேன்.

வீர : அந்த நம்பிக்கையிலே தான் நேரே இங்கே வந்தோம். பொம்மி, அரண்மனையிலே வளர்ந்தவள். கல்லிலும் முள்ளிலும் நடந்தறியாதவள்.

பொம் : கல்லும் முள்ளும் கணவன் போகும் வழியாயிருந்தால் அதுதானே மனைவிக்குப் பட்டு விரித்த மெத்தை.

மாய மோதிரம்! ரொக்கப் பரிசு ரூ. 1,000!

(அபூர்வ சக்தியுடையது)

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும், மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம் மோதிரத்தை அணிந்து கொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துகளிலிருந்தும் இது காப்பாற்றும். துர்தேவதைகள் உங்களிடம் அணுகாது. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணமற்போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும், உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றி யடைவீர்கள். சுருங்கச் சொன்னால் இம் மோதிரம் ஒரு பாதுகாப்பாளனைப் போன்றது. ஒரு முறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் ரூ. 3-0-0. ஸ்பெஷல் அதிக சக்தி வாய்ந்தது ரூ. 3-15-0. தபால் செலவு தனி. பலன் இல்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Principal: **THE BENGAL MESMERISM HOUSE**

(P P. M.) HOSHIARPUR, (P. B.)

சண் : கேள் தம்பி! உலகத்திலேயே நம்ம நாட்டுப் பெண்களுக்கு ஏன் மதிப்பு இருக்குன்னு இதனுலேதான். தம்பி, கல்லுன்னுலும் கணவன்...புல்லுன்னுலும் புருஷன்னு நீ கேள்விப்பட்டதில்லே? நீ நல்ல பெண்ணைத்தான் தேர்ந்தெடுத்துட்டே, உன் வாழ்வு நல்லா இருக்கணும்.

வீர : ஐயா! உங்களைப் போன்ற பெரியவர்களின் ஆசிதான். எங்களுடைய வாழ்வு.

சண் : வாங்க.

வீர : வா பொம்மி!

செல்வியும் அவர்களுடன் வந்து சேருகிருள்.

காட்சி 7

யார் குற்றவாளி?

தாய் தந்தையர்மேல் கொண்ட பாசம், பக்தி காரணமாக வீரன் ஊர்திரும்பி, பொம்மண்ணனிடம் வருகிருன். அவன் வராவிடில் சிறைப்படுத்தப்பட்ட பெற்றேர் யானைக் காலில் மிதிபட வேண்டும் என்று தண்டனையாயிற்றே! வீரன் அரசனிடம் போகிருன்.

பொம் : யார்? வீரனு?

நர : இல்லே மகாராஜா உம்... வீரன்!

வீர : ஆம், வீரன்தான். நீங்கள் எந்த வீரனைத் தேடிக்கொண்டிருந்தீர்களோ, அதே வீரன்தான்!

நர : வாடா வா! தானுகவே வந்து கூண்டில் மாட்டிக் கொண்டாய்! நள்ளிரவிலே கண்ணனைப் போல் கன்னி மாடத்தில் புகுந்து களவாடிச் சென்றுயே, ஏய், நிலேத்ததா அந்த வாழ்வு? கண்ணிவைக்காமலே கழுமரத்திற்கு அழைத்து வந்துவிட்டேன் பார்!

வீர : உளருதே! நீயோ உனது படைகளோ என்னை இங்கு கொண்டு வரவில்லே. என் தாய், தந்தையரின் தணியாத அன்பும் வற்றுத பாசமும்தான் என்னை இங்கு கொண்டு வந்திருக்கின்றன.

பொம் : பேசாதே! நீ குற்றவாளி!

வீர : ஒப்புக்கொள்ள முடியாது! என் மனச் சாட்சிக்கு விரோதமாக ஒரு போதும் நடக்கவில்லே என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நர : பார்த்தீர்களா இவன் கொழுப்பை? அரசே! இவனுக்கு தீர்ப்புக் கூறுங்கள்.

பொம் : கொடியவனே! ஏதேனும் சொல்ல வேண்டியதிருந்தால் சொல்!

நர : சீக்கிரம் சொல்.

வீர : 'கொடியவனே' என்று அழைத்த பிறகு நான் எதைச் சொல்லி நீங்கள் கேட்கப் போகிறீர்கள்! உங்கள் சுகவாழ்வுக்காக அதிகாரத்தை சூதாட்டக் காயாக்கும் உங்களிடம் நான் எதைத்தான் சொல்வது? ஆனுல் ஒன்று எனக்குத் தேவை! என் பெற்றேர்களின் விடுதலே. என் சாவிலே தான் அது நிறைவேறுமென்றிருந்தால் நான் ஆனந்தமாக சாகத் தயார்! ஒரு மகன் தன் தாய், தந்தையருக்கு ஆற்றும் உதவி இதைவிட வேறு என்ன இருக்க முடியும்? உம், நடக்கட்டும் உங்கள் தீர்ப்பு.

பொம் : உன் உபதேசம் எனக்குத் தேவையில்லே. இவனை சிறையிலடையுங்கள். சின்னுனையும் செல்லியையும் விடுதலே செய்யுங்கள். நாளே காலே உன் தலே யானையின் காலில் வைத்து மிதிக்கப்படும்.

நர : இவனைக் கொண்டு போங்கள்.

வீரன் சிப்பாய்களுடன் செல்லுகிருன். யானை வரும்போது பொம்மியோடு தப்பி, சண்டியரிடம் போகிருன். மீண்டும் தாய் தந்தையரைத் தேடி வருகிருன் வீரன். அவனேடு நண்பர்களும் சேருகிருர்கள்.

காட்சி 8

நீதி மன்றம்

திருச்சி மன்னன் விஜயரங்க சொக்கன் தன் கீழ் பாளைய அதிபதியாக இருக்கும் பொம்மண்ணனின் விருப்பப்படி பொம்மியை

யும் வீரனையும் கைதாக்கி தன் மன்றத்துக்குக் கொண்டுவரச் செய்கிருன். நரசப்பன் இந்த விஷயத்தில் பெரிதும் அக்கறை காட்டுகிருன். குற்றப் பத்திரிகை படிக்கப்படுகிறது அரசனின் நீதி மன்றத்திலே.

மந் : சபையோர்களே. பொம் மண்ணன் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, நமது படைகள் இவனைப் பிடித்து வந்திருக்கின்றன. பாளையக்காரர் சார்பில் இவன்மீது குற்றச சாட்டுகள் கூறப்படும்,

நர : பேரரசின் பிரதிநிதிகளே! பெருமக்களே! குற்றம் சாட்டப் பட்டுநிற்பவன் குலத்திலே சக்கிலியன்; நம்போன்ருரிடம் பேசுவதென்ருல்கூட எட்டி நின்று பேச மட்டுமே அருகதையுடையவன். இவன் காதலித்தான். அது முதல் தவறு.

சொக்கன் : என்ன? காதலித்ததே தவரு?

நர : உம்...ம். மன்னன் மகளைக் காதலித்தான். அது முதல் தவறு. அரண்மனை கன்னி மாடத்துக்குள் புகுந்தான். அது இரண்டாவது தவறு. கொற்றவன் பெற்ற குலக்கொடியைக் கூசாமல் தூக்கிச் சென்ருன். அது மூன்ருவது தவறு. எதிர்த்து வந்தோரை அடித்தான். ஏனென்று கேட்டோரைக் கொன்ருன். கீழ்மகன் இவ்வளவு அநியாயங்கள் செய்வதா? பொறுக்க முடியுமா, அரசே? ஆகவே இந்தத் தீயவனுக்குத் தக்க தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்குமாறு மன்னரைக் கேட்டுக்கொள்கிறேன்.

சொக் : இந்தக் குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் உன் பதில்...?

வீர : ஒரே பதில்! கண்டேன்... கண்டாள். காதலித்தோம்; கட்டுண்டோம். பொறுத்திருந்தோம்; காலம் வந்தது. தூக்கிச் சென்றேன்.

சொக் : தூக்கிச் சென்றது குற்றம் என்கிருர் நரசப்பன்.

வீர : இல்லை.

சொக் : எப்படி?

வீர : கேட்டால் கொடுக்க மாட்டாரே. அதனுல் தூக்கிச் சென்றேன்.

சொக் : நீதான் கீழ்மகனுயிற்றே. கேட்டால் எப்படிக் கொடுப்பார் என்பது நரசப்பன் வாதம்.

வீர : கீழ் மகனு? இட்டார் பெரியோர்-இடாதார் இழிகுலத்தோர் என்ற இரண்டே ஜாதிதான் உண்டு என்பது பள்ளிப்பாடம். இவர் நிழலுக்காவது பள்ளிக்கூடத்தில் ஒதுங்கி இருந்தால் தானே! மன்னு! எங்கள் இருவர் உடலிலிருந்தும் ரத்தத்தை எடுத்துச் சோதியுங்கள். அதிலே

இலவசம்!

ஹேர் ஆயில் நெ. 501 நரை மயிர் கருக்கவும், ரோமம் உதிர்வதைத் தடுக்கவும் உதவுகிறது.

ஒரு புட்டி விலை ரூ. 1-15-0
3 புட்டிகள் விலை ரூ. 5-0-0

எங்கள் வியாபாரத்தை விருத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் எங்கள் கம்பெனி ஹேர் ஆயிலை உபயோகிப்பவர்களுக்கு அழகான கைக்கெடிகாரம் ஒன்றும் நியூ கோல்ட் மோதிரமும் இனுமாகத் தருகிரேம். 15 வருஷ உத்திரவாதம். ஒரே சமயத்தில் மூன்று புட்டிகள் வாங்குபவர்களுக்கு 6 கைக்கடிகாரங்களும் 6 மோதிரங்களும் இலவசமாகத் தருகிரேம். திருப்திகரமாயிராவிடில் பணம் திரும்பப் பெறலாம்.

AMRIT PHARMACY
(P. P. M.) NAKODAR

கீழ்மகன் மேல்மகனென்று பேதம் தெரிகிறதா என்று பாருங்கள்.

நர : ஐயய்யோ! வேண்டாம் மன்னு, அந்தப் பரீட்சை! அவன் கீழ்சாதிக்காரன் என்பது பிறப்போடு வந்தவழி...

வீர : இல்லை! உன்போன்ற பித்தர்கள் செய்த சதி.

நர : நாவை அடக்கு; நாவை அடக்கு! திருட்டுக் குற்றத்திற்குப் பதில் சொல் முதலில்!

பொம் : நான் சொல்கிறேன்.

நர : வேண்டாம் மன்னு! இவன் சொல்ல வேண்டும்.

சொக் : நீ எப்படிச் சொல்ல முடியும் என்பது நரசப்பன் ஆட்சேபனை.

பொம் : திருட்டுப் போனதாக சொல்லப்படும் பொருளே நான் தானே?

சொக் : சரி, சொல்.

பொம் : அவர் என்னைக் களவாடினுர்; நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க. எதிர்த்து வந்தோரை விரட்டியடித்தார்; என் வேண்டுகோளுக்கிணங்க, பட்டத்து இளவரசி நான் அவருக்கு உத்தரவிட்டேன். எய்தவள் நானிருக்கக் கணைமீது குற்றம் சாட்டுவானேன்?

நர : நீயே சம்மதித்து நடந்திருந்தால்கூட அவன் செய்தது குற்றம்தான்,

பொம் : உம்...மன்னு? நரசப்பனுக்கு எப்பொழுதுமே கொஞ்சம் மூளைக்குழப்பம்.

சொக் : அப்படியா?

நர : ஆமாம். என்ன கோளாறு? மன்னு! இந்த அக்ரமக்காரனேடு சேர்ந்து இந்த ராட்சசியும் பேசுகிருள்.

பொம் : நீதான் ராட்சசன்.

சொக் , ம்...அப்படியா?

பொம் : மன்னு! உண்மை இது தான். என்னை விரும்பினுன் நரசப்பன்! அவனை நான் ஏற்கவில்லை; இவர்தான் எனக்கு ஏற்றவர் என்றேன். அதை அவன் ஏற்கவில்லை. குற்றச் சாட்டுகளை அடுக்குகிருன். சொந்த விவாகரத்துக்கு அரசியல் முத்திரை போட்டு இந்த நாடகம் நடத்துகிருன். நியாயத்தை எதிர்பார்க்கிறேன். நீதி உங்கள் கையில்.

சொக் : ஓ! அப்படியா! சரி, ஆயிரம்தானிருந்தாலும் வீரன் செய்தது பெருங்குற்றம். அவனை மனப்பூர்வமாகக் காதலித்தது பொம்மி செய்த குற்றம். ஒரு பாளையத்தின் படைகளைத் தன்னந்தனியாக நின்று விரட்டியடித்தது வீரன் செய்த மன்னிக்கமுடியாத குற்றம். அதுவும் நரசப்பன் போன்ற தளபதியை அளவுக்கு மேல் உதைத்தது தாங்கமுடியாத குற்றம். ஆகவே வீரனுக்குத் தக்க தண்டனை விதித்தாக வேண்டும். அது போன்றதொரு தண்டனையை இனி அவன் வாழ்விலே காண முடியாதவாறு இருக்க வேண்டும். என்ன, தண்டனை விதிக்கலாமா நரசப்பா...?

நர : தீச்செயல் பல செய்த இவனுக்கு மரணதண்டனை விதிக்கலாம்! ஆனுலும், போகட்டும் ஆயுள் தண்டனை விதியுங்கள்.

சொக்: ஆம். ஆயுள் தண்டனை! அதிலிருந்து தப்ப முடியாது. இன்று முதல் பொம்மியின் மனச்சிறையிலே ஆயுள் முழுவதும் கிடந்து சாவாயாக. அதோடு நமது தளபதியாகவும் ஆவாயாக.

நர : அரசே!

சொக் : போவாயாக.

பொம்ம : மன்னு!

சொக் : பொம்மண்ணு; கறந்த பால் மடிபுகாது. இயற்கையாக்க கலந்துவிட்ட அவர்களை இனிப் பிரித்தாலும் உமது மகள் கன்னித்தன்மை பெற முடியாது.

பொம் : ஆனுலும் அவன் கீழ்ச் சாதி.

சொக் : சாதி என்பது மனிதன் வகுத்த அநீதி. அதை மாற்றிக் கொள்வதுதான் நீதி. காலம் மாறி வருகிறது. எல்லோரும் ஓர் குலம் என்பதை அறிவுலகம் ஏற்றுக் கொள்ளத்தான் போகிறது. அதற்கு நாம் அச்சாரம்

போடுகிறோம் இன்று. அந்தப பெருமையில் நீரும் பங்கு கொள்ளும்.

காட்சி 9

மதுரையில் வீரன்!

மதுரையரசன் திருமலை மன்னர் கள்ளர் தொந்தரவு தாங்காது அவர்களை அடக்க ஆளனுப்பும்படி உதவி கேட்கவே, விஜயரங்க சொக்கன் தளபதி வீரனை அனுப்பி வைக்கிறான். அங்கே செல்லும் வீரனை கள்ளர் தலைவன் எச்சரிக்கிறான். அரண்மனை நடனமாது வெள்ளையம்மாள் அவனைக் காதலிக்கிறாள். பொம்மி வீரனை சந்தேகிக்கிறாள். அப்போது ஊரடங்கு சட்டம் பிறப்பித்து விட்டு வந்த வீரனைக் கிண்டல் செய்கிறாள் பொம்மி.

இதற்கிடையே மன்னன் தன் உள்ளத்தை வெள்ளையம்மாளிடம் திறந்து காட்டுகிறான்.

திரு : வா வெள்ளையம்மாள்.

வெள் : கூப்பிட்டீர்களாம்.

திரு : ஆமாம்.

வெள் : என்ன செய்தியோ?

திரு : சொன்னால்தான் தெரியுமா!

வெள் : முன்னால் இல்லாத அழைப்பு......என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை,

திரு : அரியணை காலியாக இருக்கிறது.

வெள் : மறு திருமணத்திற்கு ஏற்பாடா! அதற்கு என் நடனமா?

திரு : மறுமணத்தில் 'எனக்கு விருப்பமில்லை. எனினும் மலரணையின் தனிமை என்னால் பொறுக்க முடியவில்லை.

வெள் : சின்னவள் நான். என்ன தெரியுமெனக்கு? தெளிவாகச் சொல்லுங்கள்.

திரு : பாட்டுக் கேட்டால் பரவசப்படுவேன்.

வெள் : பாடட்டுமா!

திரு : ஆட்டங் கண்டால் ஆனந்தம் கொள்வேன்.

வெள் : ஆடட்டுமா?

திரு : அதுமட்டும் போதுமா?

வெள் : வேறென்ன வேண்டும்? ஆணையிடுங்கள்.

திரு : ஆணையிட்டுப் பெற்றால் சுவைக்காது என்பார்கள். அன்போடு கேட்கிறேன்.

வெள் : முறை எதுவானாலும் கேள்வி ஒன்றுதானே? கேளுங்கள்.

திரு : எனக்கு நீ வேண்டும்.

வெள் : மன்னா!

திரு : இல்லை, 'மதனா' என்று கூப்பிடு, பலநாள் எண்ணம்; பார்த்திருந்தேன் காலத்தை. தாளாது. இனிமேல் மறுக்காதே!

வெள் : நாட்டியக்காரிதானே என்று விரைவிலே கேட்டு விட்டீர்கள்...

திரு : வெள்ளையம்மாள், விளக்கம் வேண்டாம்! காதல் கொண்ட மனதிற்குக் காரண காரியம் எதுவுமே தேவையில்லை. சரி என்று சொல். (போகிறான்)

1956-ல் உங்கள் எதிரில்

ஒரு தபால் கார்டில் ஏதாவது ஒரு மலரின் பெயரையும், உங்கள் பெயர் விலாசத்தையும் எழுதி அனுப்புங்கள். நாங்கள் உங்களுக்கு ரூ. 1-4-0க்கு தனி தபால் செலவுடன் உங்களுக்கு வரும் 12 மாதங்களில் ஏற்படும் பலன்களையும், வியாபாரத்தில லாபநஷ்டம், பதவி உயர்வு, உத்தியோக மாற்றம், குழந்தைப்பேறு, சந்துஷ்டி மற்றும் தேக அசௌகரியங்களையும் அவைகளினின்றும் பாதுகாக்கும் குறிப்புகளையும் அனுப்புகிறோம்.

SHREE SWAMI SATNARAIN JOTISH ASHRAM.

(P. P M) Hoshiarpur (Pb).

வீரன் பொம்மியிடம் வருகிருன்.

வீர: பொம்மி...பொம்மி... சரியான திட்டம் ஒன்று தீட்டி மன்னரின் துணையோடு அதை சட்டமாயும் ஆக்கிவிட்டேன். நாளை முதல் இரவில் தெருவிலே யாரும் நடமாட முடியாது.

பொம்: அப்படியென்ருல் இனிப் பயமிருக்காது!

வீர: பயமே இருக்காது.

பொம்: யாரும் பார்க்க மாட்டார்கள்!

வீர: யாரும் யாரையும் பார்க்க முடியாது.

பொம்: அந்திபடும் முன்னுலேயே போய்விடுவீர்கள்.

வீர: போய்விடுவேன்! ஆனல் விடியும் வரை வீடு திரும்ப மாட்டேன்.

பொம்: பொழுது இன்பமாகக் கழியும்!

வீர: ஆம்! இப்படிப்பட்ட வீரர்களுக்கு இந்த விளையாட்டில் தானே இன்பம்!

பொம்: அந்த இன்பத்தில், கொண்டு போனதை மறந்து அங்கே வைத்து விடுவீர்கள்.

வீர: என்ன சொல்லுகிருய்?

பொம்: எல்லாம் தெரிந்தும் ஒன்றும் தெரியாதவர்கள் போலப் பேசுகிறீர்கள்.

வீர: பொம்மி! எனக்கு ஒன்றுமே புரியவில்லையே.

பொம்: புரியாது. உங்கள் கதை எனக்கும் தெரியுமென்பது உங்களுக்குத் தெரிந்தால்தானே இது புரியும்?

வீர: கதையா? என்னைக் குழப்பாதே பொம்மி! விவரமாகச் சொல்.

பொம்: நான் சொல்ல வேண்டாம்.

வெள்ளையம்மாளைக் காப்பாற்றப் போய், அவள் வீட்டில் வீரன் விட்டுவிட்ட விருதை, வெள்ளையம்மாளிடமிருந்து வாங்கி வைத்து அவனிடம் இப்போது தருகிருள் பொம்மி.

வீர: அரண்மனையில் தந்த விருது.

பொம்: ஆம்! உங்களுக்கு வேண்டியவர்கள் கொண்டு வந்தார்கள். வேதனைப் படுவதைத் தவிர வேறு வழியில்லாத என்னிடம் கொடுத்தார்கள். போங்கள். அவர்கள் கையாலேயே இதை அணிவிக்கச் செய்யுங்கள். கொண்டவளுக்கில்லாத உரிமை வந்தவளுக்கிருப்பதுதானே ஆண்டாண்டு காலமாக உலகத்தில் நடந்து வரும் அதிசயம். அது என் வாழ்விலும் நடக்கட்டும்.

வீர: பொம்மி! நீ நினைப்பது போல் தவறெதுவும் நடக்கவில்லை. பெண்களின் பிறவிச் சொத்தான சந்தேகம் உன்னையும் இப்படியெல்லாம் எண்ணச் செய்கிறது.

பொம்: மழுப்பவேண்டாம். இது உங்களுக்கே சரி என்று பட்டால் அதையும் மீறி நான் எதையும் சொல்வதற்கில்லை.

வீர: பொம்மி! என் இதயம் இந்த உலகத்தைவிட விசாலமாக இருந்தாலும் அதைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டவள் உன்னைத்தவிர வேறு யாரும் இல்லை! இன்னும் உனக்கு என் மேல் நம்பிக்கை வரவில்லையா?

பொம்: அத்தான்.

வீர: பொம்மி!

காட்சி 10

மாங்கல்ய பிச்சை

வீரனும் வெள்ளையம்மாளும் சுருளிமலை கள்ளர்களைப்போல முதுகில் தேள் பச்சை குத்திக் கொண்டு சங்கிலிக் கருப்பன் இருப்பிடம் சென்று ஆடுகிருர்கள். பிடிபட்டுத் தப்பி விடுகிருர்கள். பொம்மி வெள்ளையம்மாளைத் தவருக நினைத்து அவளிடம் மடிப் பிச்சை கேட்க வருகிருள்.

வெள்: யார்...? பொம்மி!

பொம்: ஆம், பொம்மிதான்! விடுபட்டுப்போன வீரவிருதோடு அன்று வீட்டிலே சந்தித்தீர்களே, அந்த பொம்மியல்ல. கண்களிலே

கண்ணீர் சிந்தி கவலையால் தகிக்கப்பட்ட பொம்மி. உங்களிடம் மாங்கல்ய பிச்சை கேட்க வந்திருக்கும் பொம்மி. குமுறி எழும் நெஞ்சத்தை மட்டும் துணையாகக் கொண்டு வந்திருக்கிறேன் தாயே!

வெள் : தாயா? யாரம்மா?

பொம் : நீங்கள்தான் என் கண்ணீரைத் துடைக்கும் தாய். என் கவலைகளைத் தீர்க்கும் தாய். எனக்கு ஒரு வரம் மட்டும் கொடுங்கள்.

வெள் : வரமா? புரியச் சொல் சகோதரி.

பொம் : உங்கள் சொத்து எதுவும் எனக்கு வேண்டாம். என் சொத்து என்னிடமே இருக்க அருள் புரியுங்கள்.

வெள் : சொத்தா...?

பொம் : ஆம், சொத்துதான் தாயே! பெண்களுக்குள்ள ஒரே சொத்து! பிரியத்தோடு பெறும் சொத்து! பிறருக்குக் கொடுக்க விரும்பாத சொத்து. தாயே! கெஞ்சிக் கேட்கிறேன்; என் கண்ணீரைத் துடைத்துவிடு. என் கணவரைக் கொடுத்துவிடு.

வெள் : பொம்மி! புரிகிறது எனக்கு. சொன்னால் நம்பிக்கை பிறக்காது உனக்கு. பிறர் பொருளிலே ஆசை வைக்கும் பேதமை எனக்கில்லை. ஆனால் அவர் அழகில் நான் மயங்கியபோது நான் என் வசத்திலில்லை. பொம்மி! உண்மையைச் சொல்கிறேன். அவரது பணிப் பெண்ணாகவாவது இருந்து பாதபூஜை செய்ய எனக்கு அனுமதி கொடு.

பொம் : எப்படி முடியும்? அவருக்கு நான் மனைவியாக முடிக்கப் படாமல் காதல் நிலையிலேயே இருந்திருந்தால் உங்கள் காதலையே அங்கீகரித்து ஒதுங்கி வழிவிட்டிருப்பேன். இனி அவரைத்தவிர எனக்கு வேறு யார்? என் வாழ்வு கெடாது என்பதற்கு உறுதி கொடு. இல்லையேல் என்னைக் கொன்றுவிடு.

வெள் : பொம்மி! அன்புச் சகோதரி! பிறப்பிலே நான் நாட்டியக்காரிதான். ஆனால் நான் யாரையும் கண்ணால் கண்டதும் இல்லை. மனதால் நினைத்ததும் இல்லை. இதுவரை எவருக்கும் இடமளித்ததும் இல்லை. என் வாழ்வில் வீரர் ஒருவரைத் தவிர வேறு ஒருவர் என் நெஞ்சைக் கவர்ந்ததுமில்லை. அவரை மறந்து விட வேண்டுமென்கிறாய். மறுக்கவில்லை. முதலில் வந்தவள் நீ. வாதாட எனக்கு உரிமை ஏது? பொம்மி! போய்வா. என்னால் உன் வாழ்வு அணுவளவும் கெடாது. போய்வா பொம்மி!

பொம் : வெள்ளையம்மாள்! என்னவோ எண்ணி வந்தேன். மாசு மறுவற்ற தங்கம் நீ. கூடப் பிறக்கா விட்டாலும் இனிமேல் நீ என் சகோதரிதான். அழாதே, அழாதே, வருகிறேன்.

காட்சி 11

நீ என் மனைவி!

வெள்ளையம்மாளை மன்னன் படுக்கையறைப் பதுமையாக்கத் தீர்மானிக்கவே, அவள் தற்கொலை செய்து கொள்ளத் தீர்மானிக்கிறாள். வீரன் வந்து தடுக்கிறான்.

வீர : வெள்ளையம்மாள்! வெள்ளையம்மாள்!

வெள் : விடுங்கள் என்னை! நான் சாவதென்று முடிவு கட்டி விட்டேன்.

வீர : என்ன ?

வெள் : சஞ்சலத்திலிருந்து விடுதலை அடைய முடிவு செய்து விட்டேன். விடுங்கள்...என்னை விடுங்கள்.

வீர : நான் ஏன் போக வேண்டும்? எதற்காக இந்தத் தற்கொலை முயற்சி?

வெள் : விளக்கம் சொல்ல நேரமில்லை. இன்னும் கொஞ்ச நேரத்தில் மன்னாதி மன்னன் இங்கு வரப்போகிறார்.

வீர : அவர் உன்மேல் ஆசைப்படுகிறாரா? அன்பு வைக்கிறாரா? மணக்கப் போகிறாரா?

வெள் : இல்லை. அதிகாரம் செலுத்துகிறார். அடிமையாக்கப்

போகிறார். காவலும் போட்டிருக்கிறார்.

வீர : அக்ரமம்! அநியாயம்.

வெள் : அதை நீங்கள் சொல்லிக் கேட்கக்கூடிய நிலையில் அவர் இல்லை.

வீர : அதற்காகவா நீ இந்த முடிவுக்கு வந்தாய்?

வெள் : வேறு வழி? யாரெனக்குத் துணை? கொடிக் கொழு கொம்பு என கூட வாழவும் மாலைசூடி, மனைவியாக ஏற்றுக் கொள்ளத் துணிந்தவர்கள் யாரிருக்கிறார். அதற்கொரு வழியில்லாத இந்த ஜென்மம் இருந்தென்ன, போயென்ன ?

வீர : முடியாது! நீ வாழத்தான் வேண்டும் அதற்கென்ன வழி? சொல் வெள்ளையம்மாள், சொல்!

வெள் : 'வறண்டு கிடக்கும்என் வாழ்வை வளப்படுத்த வேண்டும்-இருண்டு கிடக்கும் என் நெஞ்சிலே ஒளியேற்றி வைக்க வேண்டும். உங்களுக்கு நல்ல மனம் இருப்பதால் கைப்பிடித்து என்னை மனைவியாக ஏற்றுக் கொள்ளவேண்டும்' என்று கேட்டுக் கொள்ளத்தான் இன்று இங்கு உங்களை வரச் சொன்னேன், ஆனால் இப்போது அதைக் கேட்கக்கூடிய நிலையில் நான் இல்லை.

வீர : வெள்ளையம்மாள்!

அவளைத் தொடப்போகிறான்.

வெள் : என்னைத் தொடாதீர்கள்! தொடாதீர்கள்! அரசர் வரும் நேரமாகி விட்டது, போய்விடுங்கள். என்னால் உங்கள் வாழ்வைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்

வீர : வரட்டும்! அரசரென்ன, இந்த அகிலமே திரண்டு வந்தாலும் உன்னைக் காப்பாற்றுவதில் என்னைத் தடுக்க முடியாது.

வெள் : கேவலம், ஒரு நாட்டியக்காரிக்காக இவ்வளவு பெரிய தியாகமா?

வீர : ம்...வெள்ளை யம்மாள்! இதயத்தாலும் உடலாலும் களங்கமே இல்லாத ஒரு மாணிக்கம் நீ! மனிதர்கள் தாங்களாகவே செய்து வைத்துக் கொண்ட கட்டுப்பாட்டிலே துவண்டு போன உன் நெஞ்சு, உன் புனிதத்தன்மையை மறைத்துப் பேசுகிறது. உம்...நான் உன்னைக் கேவலமாகக் கருதுவதாக எண்ணித்தானே நீ இந்த வார்த்தை சொன்னாய்?

வெள் : இல்லை! இல்லை! அரசரின் அதிகார வம்பு அவ்வாறு கருதுகிறது. காட்டு முல்லை, கரையோரத்து ரோஜா, தடாகத்துத் தாமரை இவைகளை யார் வேண்டுமானாலும் பறிக்கலாம். அதிகாரம் இருப்பவர்கள் வேலி போட்டுவிட்டால் மலர் மறுக்கவா முடியும்? வேலி போட்டு விட்டது அரசாங்கம். இனி நீங்கள் யார்? நான் யார்?

வீர : நீ யார்? இன்று முதல்... இப்போது முதல் என் மனைவி! நீ என் மனைவி! வெள்ளையம்மாள் என் மனைவி.

வெள் : மனைவி...!

வீர : என் மனைவி!

வெள் : நான் உங்கள் மனைவி!

சதிகாரன் நரசப்பனும் குடிலனும் வெள்ளையம்மாளின் காதலன் வீரனை சிறைப்படுத்துகின்றனர். குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்படுகிறான் வீரன்.

குடி : குற்றக் கூண்டிலே, நீதிபதி போட்ட சட்டம், போட்டவரையே வளைத்தது, நாட்டு மக்கள் காணாத வழக்கு, நல்ல தீர்ப்பு வழங்க வேண்டும். இந்த அரசவை வழங்கும் நிச்சயமாக. தளபதியாரே! குற்றச்சாட்டுகளுக்கெல் நீர் கூறும் பதில்.

வீர : என்ன, உங்கள் குற்றச்சாட்டு? அதை இன்னும் சொல்லவில்லையே?

குடி : ஒன்றுமறியாதவர் போல் கேட்கிறார்! கள்ளர்களை அடக்க வேண்டியவர் நீர்.

வீர : சபை அறியும்!

குடி : அந்தக் கடமையை ஏற்றவர் நீர்?

வீர : நாடறியும்!

குடி : ஊரடங்குச் சட்டம் போட்டீர்!

வீர : உலகறியும்!

குடி : மீறினால் தண்டனை என்றீர்?

வீர : சொல்லித் தெரிவதில்லை! அது அதிலேயே அடக்கம்!

குடி : அந்தச் சட்டத்தை நீரே மீறினீர்!

வீர : தளபதி மீறலாமென்பது ஒரு விதி!

குடி : மீறியது தவறுன எண்ணத்தோடு என்பது அரசவையின் கருத்து! போனது கள்ளர்களைப் பார்க்கவா என்பது அரசவைக்கு ஏற்பட்டுள்ள சந்தேகம். கள்ளர்களோடு உனக்கு உறவு உண்டு என்ற அடிப்படையிலே எழுந்ததுதான் இந்தக் குற்றச் சாட்டு.

வீர : ஆம்...உண்டு.

அர : என்ன! கள்ளர்களோடு உனக்கு உறவு உண்டா? ஒப்புக் கொள்கிறுயா?

வீர : ஒப்புக் கொள்கிறேன். நண்பர் குடிலனேடு எனக்கு நெருங்கிய உறவு உண்டு!

குடி : மூடு வாயை! மறைக்காமல் குற்றச்சாட்டுகளுக்கு மட்டும் பதில் சொல்!

வீரன் ஏளனமாகச் சிரிக்கிறுன்.

குடி : பதில் சொல்ல முடியாத வேளையிலே பழசாகிப் போன புன்னகை வீசுவது பத்தாம்பசலிகள் செயல்! இப்போது தேவை புன்னகையல்ல, குற்றம் செய்ததற்குக் காரணம்?

வீர : காரணம்? காரியத்தை ஆராய்ந்தால், காரணம் தானே தெரிகிறது. மன்னு! என் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச் சாட்டுக்கள் எண்ணிக்கையில் பலப்பல. ஒருவனை குற்றவாளி ஆக்கி விடுவது சுலபம். ஆனுல் நிரபராதி என்று நிரூபிப்பது தான் கடினம். மன்னு! இது வரைக்கும் என் வாழ்விலே கள்ளமில்லை, கபடில்லை, சூழ்ச்சியில்லை, சூது இல்லை. இந்தப் பதவி, நான் கேட்டுப் பெற வில்லை; கூப்பிட்டுத் தந்தீர்கள் என்பதற்காக நான் செய்வதெல்லாம் சரி என்று கூறவுமில்லை! புலி வேட்டையாடும் பொறுப் பேற்றேன், வழியிலே ஒரு புள்ளி மானைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் வந்தது. 'காப்பாற்ற வருவான்; அந்த வரனைக் கள்ளர்களோடு சம்பந்தப் படுத்துவோம்' எனக் காத்திருந்தார்கள் சிலர். யார் அந்தச் சிலர்? ஏன் அங்கு வந்தார்கள்? எவரிட்ட ஆணை? மன்னு! கொஞ்சம் தலை நிமிர்ந்து பாருங்கள்! இன்னும் விளக்கம் சொல்லத்தான் வேண்டுமா?

குடி : நிறுத்து! களவுபோன மூட்டைகள் காணப்பட்டன உனது வீட்டிலே. எப்படி அங்கு வந்தன? கள்ளர்கள் கொடுத்த பரிசா? இல்லை, தாங்களே எடுத்துக் கொண்டதா?

வீர : குறுக்கு வழியில் குற்றம சாட்டுகிறுர். அத்தனை கள்ளர் களையும் பிடிக்கும்வரை விஷயம் வெளிவர வேண்டாமென்று அடக்கம் செய்தேன்.

குடி : ஆகா! கதை கட்டுகிறுர் தளபதியார். கதைக்குக் காலில்லை என்பார்கள்.

நர : இவர் ஒரு வாலும் ஒட்ட வைக்கிறுர்.

வீர : ஒட்ட வைப்பதென்ன! அதுதான் ஏற்கனவே உங்களுக்கு இருக்கிறதே. மன்னு! நான் நிரபராதி என்பதை நிரூபிப்பதற்கு முன் இந்த வழக்கைச் சிருஷ்டி செய்தவர்கள் திறமைசாலிகள் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். அந்தத் திறமைதான் நீதிக்கு அடிப்படையென்ருல் தாங்கள் இஷ்டம்போல் தீர்ப்பு வழங்கலாம். ஆனுல், அதற்கு முன் ஒன்று. பயமில்லாமல் நாடு வாழ வேண்டும், பயிர் பச்சைகள் செழித்து வளரும் பாண்டிய மண்டலம் நீடூழி வாழ வேண்டும், திருமலை மன்னன் சீரும் சிறப்பும் பெற்றுச் சிறந்தோங்க வேண்டுமென்று ஆசைப்பட்டவன் நான். ஆனுல் பொறாமைக்காரர்களின் விஷ மூச்சிலே சதிகாரர்கள் பின்புற மிருந்து நடத்திய தாக்

குதலிலே, நான் யார் என்கின்ற கேள்வியே மறைந்து குற்றக் கூண்டிலே நிற்கவேண்டிய கோர மான நிலையை அடைந்திருக்கி றேன். நான் சாக வேண்டும் என்று மன்னர் தீர்ப்பளித்தாலும், சாவுக்குச் சரி அதற்காக நான் அஞ்சவில்லை. ஆனால் கடைசியாக ஒன்று, நேற்றும் சரி, இன்றும் சரி, கள்ளர்களோடு எனக்கு உறவுமில்லை. மதுரைப் பேரர சிற்கு நான் துரோகம் நினைக்கவு மில்லை. ஏன், துரோகம் எங்கள் பரம்பரையிலேயே இல்லை.

அர : மதுரைப் பேரரசில் சட்டம் மட்டும் இல்லாமலிருக்கு மானால் உன்னை விட்டுவிடுவேன். ஆனால் சந்தர்ப்ப சாட்சியங்களை வைத்துத் தீர்ப்பளிக்க வேண்டிய வனா யிருக்கிறேன். இப்போது. முதலாவதாக வெள்ளையம்மாளை நீ சிறை எடுத்ததற்குச் சரியான காரணம் கூறவில்லை. இரண்டாவ தாக, திருட்டுப்போன சொத்துக் கள் உன் வீட்டிலே கிடைத்த தற்குச் சரியான முகாந்திரம் கூற வில்லை. மூன்றாவதாகத் திருடர் தலைவனுக்கும் உனக்கும் உறவு இல்லை என்று நிரூபிக்க முடிய வில்லை. ஆகவே, அரசாங்க விதிப் படி இந்த மூன்று குற்றங்களுக்கும் உன்னை, மாறுகால் மாறுகை வாங்க உத்தரவிடுகிறேன்.

வீர : நன்றி மன்னா நன்றி, வாழ்க பாண்டிய மண்டலம்! வாழ்க தென்னகம்! வாழ்க நம் மக்கள்!

வெள்ளையம்மாளும் பொம்மியும் வருகிறார்கள்.

வெள் : மன்னா! வழக்கு முடிந்து விட்டதா?

மன் : தீர்ப்பும் நடந்துவிட்டது.

வெள் : உம். நடந்தது தீர்ப்பா? இதயத்தை சுத்தமாக்கிக் கொண்டு சிந்தித்துப் பார். நடந்தது தீர்ப்பல்ல. சட்டத் திரையிலே நடந்த ஒரு அக்ரமம்.

பொம் : அக்ரமம் மட்டுமல்ல. அநியாயம். அர்த்தராத்திரியிலே அந்தரங்கமாக மன்னன் ஒருவன் தன் பிரஜைக்கு செய்த அநீதி.

குடி : நிறுத்து.

அர : நிறுத்து. இன்னும் பேசிக்கொண்டே போனால்.

வெள் : சட்டம் சீறும். வெட்டி விடுவாய் என் தலையை. கெட்டு விடாது எதுவும். நாட்டுக் குழைத்த நல்லவனுக்கே சித்திர வதை விதித்த நீ, கேட்டு குணம் படைத்த கெட்ட புத்திக்காரர் களின் பாட்டுக்கு தாளம் போடும் நீ. எதுதான் செய்யத் துணிய மாட்டாய்! சீறட்டும் உன் அர சாங்க ஆணை. சீவட்டும் என் தலையை.

அர : ஆத்திரத்தால் அறி விழந்து பேசுகிறாய் வெள்ளையம் மாள்! அதனாலே பொறுக்கிறேன். சட்டம் எல்லோருக்கும் ஒன்று.

வெள் : உம்! தன்னலத்திற் காக என்னை என் வீட்டிலே சிறை யாக்கினையே, அது எந்த சட்டம் வழங்கிய நியாயம்? ஏன் திகைக் கிறாய்? செய்துவிட்ட அநீதி இப் போதாவது கண்ணுக்குத் தெரி கிறதா?

அர : நிதானித்துப் பேசு. நடந் தது சட்டத்தின் தீர்ப்பு.

பொம் : சட்டத்தின் தீர்ப்பு. குற்றமற்ற கோவலனைக் கொன் றது சட்டத்தின் தீர்ப்பு. அப் போது பாண்டியன் தலைநகரைப் பற்ற எரித்தது கற்பு நெருப்பு, அது தர்மத்தின் தீர்ப்பு. அநீ திக்கு கணவனை பலியிட அழுது தவிக்கிறாள் மனைவி. மீனக்கொடி பறந்த ஏ பாண்டிய மண்டலமே! சங்கம் வளர்த்த தங்கத்தாயகமே, பொங்கிப் புலம்பும் உன் மகளைப் பார்! பொறுமி அழும் உன் சேயைப்பார்! வைகை நதியோடு வளம் பெருக்கும் தாயே! கண் ணகியின் கண்ணீருக்குப் பதில் சொன்னயாமே, கூட மடிந்தாள் கோப்பெருந்தேவி என வரலாறு தந்தாயே. சாகத் தயாராயிருக்கி றேன். ஆனால் தர்மத்தின் பதில் எங்கே? கற்பு மனையாளின் கண் ணீர் நீதியற்ற ஆட்சியை சாய்க் கும் வாள் என்றாயே, எங்கே அந்த வாள்? எங்கே அந்த வாள்?

வெள் : வால்பிடிக்கும் வஞ்ச கர்களின் வார்த்தைதான் நீதியா? உண்மை தெரியக் காலம் வரும்

மன்னு, கொலையைத் தடுத்து நிறுத்து, பிறகு விசாரணை செய். குற்றவாளி என்று தெரிந்தால் அவர்குடும்பத்தையே கொளுத்து, என்னையும் சேர்த்து.

அர: இல்லை, இல்லை! இனி மாற்றுவதற்கில்லை.

பொம்: இல்லை, கண்ணீரைத் துடைக்க மனமில்லை. கவலையைத் தீர்க்க மனமில்லை. நீ மன்னனல்ல. மனித இதயமே இல்லாதவன்.

வெள்: கொன்ற பிறகு உண்மை தெரிந்தால் கொடுக்க முடியுமா உயிரை, உன்னுல்? சொல்! சொல் மன்னு! சொல்லி விடு! உம், சொல்லமாட்டாய்? நீ திட்டமிட்டுக் கொலை செய்கிருய். உன்னிடமா கருணை எதிர்பார்த்தேன்? பேதை நான். நீ கொல்வது வீரனை மட்டுமல்ல, திருமலை மன்னு! அவரது மனையாளைக் கொல்கிருய், அவரை மனதாரக் காதலித்த என்னைக் கொல்கிருய். பாயும் வைகையின் புகழைக் கொல்கிருய். செந்தமிழ் நாட்டின் பண்பைக் கொல்கிருய், சிங்காதனத்தின் பெருமையைக் கொல்கிருய். உம், இன்னுமென்ன மன்னன் பதவி? சவக்காட்டிலே அரசு நடத்து. எலும்புக் கூட்டிலே சிங்காதனம் அமைத்துக் கொள். போர்க்களத்திலே சாக வேண்டியவரை, கொலைக் களத்திலே கொல்கிருயே, இன்று உன் மனக்களத்திலே போர் ஆரம்பம். மறக்காதே மன்னு, மறக்காதே!

அசரீரி: திருமலை மன்னு! நீதி தவறி விட்டாய் நீ. வீரன் குற்றமற்றவன். கடமையில் தவருதவன்.

அர: ஆ...தேவி, மீனுக்ஷி! நான் நீதி தவறி விட்டேனு? திருமலை மன்னன் நீதி தவறி விட்டானு? வீரன் குற்றமற்றவனு? ஆம் நான் யாரையும் சாக விடமாட்டேன்! நான் யாரையும் சாக விடமாட்டேன்! காப்பாற்றுவேன்! காப்பாற்றியே தீருவேன்!

அரசன் ஓடுகிருன். அதற்குள் சங்கிலிக் கருப்பனைக் கொன்று விட்டவீரனின் மாறுகை மாறுகால் வாங்கப்பட்டு விடுகிறது.

வீர: மதுரை பேரரசிற்கு என் கடமை முடிந்துவிட்டது. எந்த வேலையாக நான் இங்கு வந்தேனே அந்த வேலையை நிறைவேற்றுமல் போகிறேனே என்று எனக்கு இருந்த கவலை நீங்கிவிட்டது. நிறைவேறட்டும் உங்கள் தண்டனை. வாழ்க மீன்கொடி. வாழ்க மதுரை மன்னன். வாழ்க தென்னகம்.

வெள்ளையம்மாள் அழுதுகொண்டிருக்கிருள். அங்கே பொம்மி வருகிருள்.

பொம்: நீதான் மதுரை மன்னனு? வா! ஏன் வந்தாய்? எதற்காக வந்தாய்? கொலை புரியும் காட்சியைக் கண்டு களிக்க வந்தாயா? அக்கிரமத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிவிட்ட ஆனந்தத்திலே ஓடிவந்தாயா? தாவி வந்த குழந்தையின் கன்னத்தைக் கடித்தாயே! மனம் திறந்து உண்மையைக் கூறியும் கடும் தண்டனை விதித்தாயே, சாவு எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டுமா? பார்! பார்! பாவி பார்! கண்கெட்ட உன் ஆட்சியின் பெருமையைக் காப்பாற்ற ஓடிவந்த கால்களைப் பார். சுற்றி வரும் எதிரிகளை தூளாக்குவேன் என்று கத்தி எடுத்த கைகளைப் பார். ரத்த வெள்ளத்தில் மிதக்கும் அந்த சுத்த வீரனைப் பார். மாலையிட்ட மணவாளன் அங்கே. ஆலையிட்ட கரும்பாக அவதிப்படும் நான் இங்கே. நீதி எங்கே? நியாயம் எங்கே? நாடு ஆளும் மன்னவனு நீ? நடுநிசியில் கொலை புரியும் கள்ளனுக்கும் உனக்கும் என்ன பேதம்? போ! போய்விடு.

திரு: ஐயோ, தவறு நடந்து விட்டது. என்னை மன்னித்து விடுங்கள். எல்லாம் அவன் செயல்.

வெள்: அழு! நன்ருக அழு! தொண்டை அடைத்துப் போகும் அளவுக்கு அழு. ஆற்ருது அலறும் இந்த அபலைப் பெண்கள் தனியாகவா அழுவது? நீயும்கூட சேர்ந்து அழு. அநியாயத்தின் உருவமே!

சாகப்போகும் போதாவது உன் கண்கள் திறந்தன. அந்தக் கண்களிலே ஒளியிருக்கிறதா? இருந்தால் பார். தேம்பி அழும் இந்தப் பச்சைப் பசுங்கிளியைப் பார். நான்கு புறமும் வேடர்சூழ நடுவில் சிக்கிய மான்போல் தவிக்கும் இந்த இல்லறச் செல்வியைப் பார். மாலையிழந்து, மஞ்சள் அழிந்து, கூந்தல் அவிழ்ந்து குங்குமம் கலைந்து, பச்சைப் பருவத்திலே பட்டுப்போன மரத்தைப் பார்! பார் மன்னா, நன்றாகப் பார்! அன்பு தவழும் கணவன் முகத்தை ஆசையோடு பார்க்கவேண்டிய கண்கள். அதிலே ஆறாக ஓடும் கண்ணீர் ‘அத்தான் அத்தான்’ என்று பாசத்தோடு அழைக்க வேண்டிய உதடுகள் அதிலே சோகத்தின் துடிதுடிப்பு. நீதியற்ற மன்னவனே! உன் ஒரு வார்த்தையிலே உயிரற்ற நடைப் பிணமாகிவிட்ட இந்த உத்தமியைப் பார்! ஏன் அசையாமல் நிற்கிறாய்? வீடுதட்டி வந்த கள்ளன் யார் என்று கேட்க, தட்டியவன் நானே என்று வெட்டி வீழ்த்திக் கொண்டான் கையை பொற்கைப் பாண்டியன். குற்றமற்றகோவலனைக் கொலை செய்தோம் என்பதை உணர்ந்ததும் சிங்காதனத்திலிருந்தே வீழ்ந்து உயிர்விட்டான் பாண்டியன் நெடுஞ்செழியன். கன்றைக் கொன்றான் மகன் என்று கேட்டதும் அவனைத் தேர் ஊர்ந்து கொன்றான் சோழமன்னன். கற்பு நிறைந்த மணிமேகலையைக் கெடுக்க முயன்றான் மகன் என்று தெரிந்ததும், ‘ஊரார் கொன்று விட்டார்களே! அவனை நானல்லவா கொன்றிருக்க வேண்டும்!’ என்று நீதிமுரசு எழுப்பினான் பூம்புகார் சோழன். ஏன் ஆண்டிமுதல் அரசர் வரை ஒரே நீதி வழங்கியதே மூவேந்தர் பரம்பரை! அந்த சிங்காதனத்திலே நீ! அந்த சிங்காதனத்திலே நீ!

அர: இல்லை, பிறழாத நீதி பிறழ்ந்தது. வளையாதசெங்கோல் வளைந்தது. என்னைக் கெடுத்து விட்டார்கள் சண்டாளர்கள். என்னை மன்னித்து விடுங்கள்.

வெள்: மன்னிப்பு! வா வையகமே! வளர்ந்து வ கமே! ஆராய்ச்சி மணி கட் டுவந்த தென்னகமே! களத்திலே சிரிக்கின்ற மதுரை மண்டலமே! ம போகிறது ஒரு மாபெரும் மன்னிப்புக் கேட்கிறார் மன்னர்! மாபாதகம் மண்டியிடுகிறார் திருமலை ம மன்னியுங்கள் மன்னியு மன்னா! போ! அவர் க விழு! புரண்டு அழு! கண் உன் களங்கத்தைக் கழுவு. போ! போ!

அர: ஐயோ! என்னைக் லாதீர்கள்! ஆ! என் தவ காரணமாயிருந்த இந்தச் ச ளர்களை நான் விடப்போவ

நரசப்பனும் குடிலனும் ந கள். அரசன் கொடுவாளே கிறான்.

குடி: எல்லாவற்றிற்கும் ணம் இந்த நரசப்பன்தான்!

நர: ஆம் அரசே! நான் நரசப்பன்! வீரா! நான்தா சப்பன்! இவன் சொல்லி டான்! உனக்கு எவ்வள தீங்குகள் செய்திருக்கேன்! றும் பலிக்க வில்லை! என்னை னித்துவிடு.

வீர: அரசே! மன்னா! களை மன்னித்து விடுங்கள். கள் என்ன செய்கிறோம் என்ப உணராமலேயே காரியம் செய் வர்கள். அவர்களை மன்னித் விடுங்கள்.

மாறு கை, மாறு கால் வெட் பட்ட மதுரைவீரன் சாகப்போ தறுவாயில் மன்னனும் அங்கு வந்து தான் செய்த தவறுக் வீரனிடம் மன்னிப்புக் கோ றான். விண்ணுலகேகிய வீர உத்தமி பொம்மியும் அழ வெள்ளையம்மாளும் பின்தொட கின்றனர். பூத உடல் நீந்த ரும் சிலாரூபமெய்திப் பொது களால் இன்றும்கூடத் தெ மெனப் போற்றப்படுகின்றனர்.



பழகி உபயோகிப்பது **ஜேய்** சோப்...

நீங்களும் ஏன் உபயோகிக்கக்கூடாது?

ஜேய் சோப் அளிக்கும் மோகன எழில்
-ங்களுடையதே.. மிருதுவாக மேனிக்கு
மெருகிடுகிறது...பரவசப்படுத்தும் நறுமணம்
ழுவது, என்றிருந்தாலும் அது மேனியழகிற்கு
சிறந்ததோர் சோப். எப்பொழுதும்..ஜேய்
ாப் உபயோகியுங்கள்.

டாடா தயாரிப்பு



பெரிய பெரிய ஆபத்துக்கள் கூட ஏற்பட்டு விடுகின்றன.

ஒரு வேடிக்கையான உதாரணம். லட்சம் பேர் கூடியுள்ள ஓர் அரசியல் மாநாடு. அங்கே நாட்டு மதிப்புக்குரிய ஒரு தலைவர் தேசத்துக்கு மிகமிகத் தேவையான ஒரு பொருளாதாரத் திட்டத்தைப் பற்றி தீவிரமாக விளக்கிக் கொண்டிருப்பார். மக்களும் அதை மிகமிக அக்கறையோடும் ஆர்வத்தோடும் கேட்டுக் கொண்டிருப்பார்கள். அச்சமயத்தில் ஒரு நடிக நட்சத்திரம், ஸ்டுடியோ சூரியன்போல், பளபளக்கும் கவர்ச்சியுடனும் பரிவாரம் புடை சூழவும், மாநாட்டுப் பந்தலுக்குள் விஜயம் செய்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அப்போது மாநாட்டில் என்ன ஆகும்? மக்கள் யாரைப் பார்ப்பார்கள்? தங்கள் கருத்தைக் கவர்ந்த தலைவரையா? அல்லது கண்ணைக் கவர்ந்த கலைஞரையா?

ஸெக்ஸ் புத்தகங்கள்

காமசூத்திரம் படங்களுடன் ரூ. 6/- பெண்ணை ஆண் வசியம் செய்வது எப்படி ரூ. 4/- கொக்கோகம் 84 படங்களுடன் ரூ. 4/- மணவாழ்க்கை 88 படங்களுடன் ரூ 5/- ஸெக்ஸ் அவயவங்களின் 325 படங்கள் கொண்ட அமெரிக்கன் வெளியீடு ரூ. 5/- அழகிய பெண்கள் 125 படங்கள் கொண்டது ரூ. 6/- ஆண் பெண் ஸெக்ஸ் புதிர் ரூ. 5/- ஸெக்ஸ் அதிசயங்கள் (படங்களுடன்) ரூ. 10/-. இரகசியக் காதல் கடிதங்களும் பதில்களும் ரூ. 3/50. காதல் வாழ்க்கை (பெண் உடலில் மறைந்திருக்கும் இன்ப வழிகள்) ரூ. 3/50. 60 படுக்கையறை வர்ணப்படங்கள் ரூ. 6/- புத்தகம் ஒன்றிற்கு வி. பி. சார்ஜ் ரூ. 1/- 1-3 புத்தகங்களுக்கு ரூ. 1/50.

GLOBE BOOK DEPOT (88-1)

P. B. 23, ALIGARH CITY

எல்லாவற்றையும் மறந்து விட்டு, "வாழ்க கலைஞர்" என்ற வாழ்த்தொலி அல்லவா கிளம்பும்! நாரணம், அறிவுக்கு விளக்கம் தரும் கருத்துறையை விட, கண்ணுக்கு மகிழ்வூட்டும் கலைக் கவர்ச்சிக்கு இந்நாளில் சக்தி அதிகம். அதன் பின், பாவம், அத்தலைவர் எப்படிப் பேச முடியும்? அவர் ஆண்டுக் கணக்காக ஆராய்ச்சி செய்து சொல்லி வந்த அறிவுரை என்ன ஆகும்? அவர் மக்கள் முன் கொண்டுவரக் கருதிய பொருளாதாரத் திட்டம் என்ன ஆகும்? கூட்டத்தின் இலட்சியம் என்ன ஆகும்? கொள்கையின் கதிதான் என்ன ஆகும்? அவ்வளவும் காற்றோடு கலந்து புகைபோல் கலைந்து தேய்ந்து உருவழிந்து போகும்! மாநாட்டில் கலைஞனின் கவர்ச்சி ஒன்றுதான் மிஞ்சி நிற்கும். அந்த நேரத்தில் மக்களைப் பற்றியே சிந்திக்கும் அந்தத் தலைவரின் மனம் என்ன பாடுபடும்! தேசத்துக்காக சர்வ பரித்தியாகம் செய்த அந்தத் தலைவரின் உள்ளம் எவ்வளவு புண்படும்? இப்படி ஒரு நல்ல தலைவரின் உள்ளம் புண்பட கலைஞரு காரணமாக வேண்டும்? இம்மாதிரியான நிலை ஏற்படக் கூடாது என்ற ஆசையால் தான் சொல்லுகிறேன்; கவர்ச்சியின் உறைவிடமான கலை, காரிய உறுதியுள்ள அரசியலில் நேரடியாகத் தலையிடக் கூடாது—கூடாது! பன்முறையும் சொல்கிறேன்.

மேலும் கலையின் காந்த சக்தி தனிமையில் தான் அதிக வலிமை பெற்று வளரும்—சிரஞ்சீவிக் கவிதையைப்போல—

நெஞ்சத்தின் தனிமையிலே,
அருளின் ஆழத்திலே
அனுபவத்தின் புலமையிலே,
கனியின் குளுமையிலே,
கருத்தின் வலிமையிலே,
கற்பனையின் வளத்தினிலே
அறிவின் பேரொளியிலே,
அமைதியின் சூழ்நிலையிலே

உருவாக வேண்டிய சுவையின் ஊற்றாகும்.

அத்தகைய கலை ஊற்று அரசியல் பாலைவனத்திலே பாய்ந்து யாருக்கும் பயன்படாமல் காய்ந்து, கருகி, ஓடிய சுவடு கூட தெரியாமல் மறைந்துவிட வேண்டுமென்று யாராவது விரும்புவார்களா? அப்படி விரும்பினால் அவர்கள் நாட்டின் நலத்திலே அக்கறை உள்ளவர்கள்தானா, என்பதையும் நாம் யோசிக்க வேண்டும்.

இந்தக் கட்சி அரசியல் விஷயத்தில் கலைஞன் மிகமிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அதுதான் நமக்கும் நலம். நாட்டுக்கும் பெரிய தொண்டு. ஒருவேளை உண்மையிலேயே ஒரு கலைஞனுக்கு ஏதோ ஒரு கட்சியில் பற்று ஏற்பட்டாலும்கூட, அவன் அப்பற்றை அனுதாபத்தின் மூலம் அளவோடு காட்டலாமே தவிர, கட்சிக்குள் புகுந்துகொண்டு கவலைகளுக்காளாகி விடக்கூடாது. மற்றவர்களையும் பயமுறுத்தக் கூடாது.

ஏனெனில் கலைஞன் இயற்கையிலேயே பெற்றிருக்கும் கவர்ச்சி என்னும் காந்த சக்தியிலே, கட்சியின் இலட்சிய ஒளி கரைந்துவிடும். கலை மட்டுமல்ல; மற்ற விஷயத்துக்கும் இதுவே பொருந்தும்.

ஓர் இந்து நண்பர் ஏசுநாதரின் பொன்மொழிகளில் கொண்ட பற்றுதல் காரணமாக சர்ச்சுக்குச் சென்றால், உடனே அவரை கிறிஸ்தவராக்க முயற்சிக்கலாமா? அப்படியே ஒரு கிறிஸ்தவ நண்பர் நமது கோயிலில் உள்ள தத்துவங்களை அறியும் நோக்குடன் உள்ளே வந்தால் உடனே அவரை இந்துவாக்க முயற்சிக்கலாமா?

அதுபோல் ஒரு கலைஞன் ஏதோ ஒரு அரசியல் கொள்கைமீது அல்லது சிலருள்ள சில தலைவர்கள் மீது வைத்த பற்றின் காரணத்தால் அன்பு காட்டி உள்ளே வந்தால், அவன் கையிலே ஒரு கட்சிக் கொடியைக் கொடுத்து, முதுகிலே ஒரு முத்திரையைக் குத்தி, தலையிலே ஒரு பட்டத்தையும் கட்டி, "கூவுடா தம்பி கூவு; கட்சி கோஷத்தைக் கோழிபோல் கூவு" என்று நடுத்தெருவுக்கு அனுப்பலாமா; அவன்தான் போகலாமா? அப்படியே அவன் போனாலும் அரசியலுக்கு நல்லதுதானா; அப்படிக் கலைஞனைக் கட்சிக்கு இரையாக்கும் அவர்கள் அரசியல் தெரிந்தவர்கள்தானா; இதனால் அவர்கள் அடையப்போகும் லாபம் நிலைக்கக்கூடியதுதானா? என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆகவே, ஒருவருக்கொருவர் அனுதாபியாக இருப்பதோடு இரு சாராரும் இரு துறைகளையும் நாகரீகமாக வளர்ப்பதுதான் முறை. இப்படி இரு வேறுபட்ட உண்மைகளை அனுதாப உதவியினால் மட்டும் வளர்த்து வழிகாட்டிய பெரியோர்கள் ஏராளம்.

உதாரணம் மகாகவி ரவீந்திரநாத் தாகூர். உலக மகா கலைஞர்;



இந்த அமெரிக்கன் மாடல் புரொஜக்டரைக் கொண்டு வீட்டிலேயே சினிமாவை வைத்து மகிழலாம். மின்சாரம் அல்லது பாட்டரி விளக்கினால் 35 மி. மீ. பிலிமில் 4'×3' திரையில் விதவித வர்ணங்களில் முழுச்சலனத்தோடு காணலாம். புரொஜக்டரும் 75 அடி பிலிமும், படங்கள் கொண்ட விளக்கப் புத்தகத்துடனும் விலை ரூ. 12/50. வி. பி. சார்ஜ் ரூ. 4/- ஸ்பெஷல் டீலக்ஸ் மாடல் ரூ. 20/- வி. பி. சார்ஜ் ரூ. 5/-. திரை ரூ. 3/-. பிலிம் கெஜம் 25 ந.பை. அட்வான்ஸ் ரூ. 5/- அனுப்பவும்.

EVERGREEN TRADERS
(P. 75-1) Krishna Tola
Aligarh City.

உயர்பெரும் அறிஞர். அவர் காலத்தில் நமது நாட்டின் விடுதலைப் போராட்டம் உச்ச நிலையில் இருந்தது. வெறும் கலைச்செல்வாக்கு மட்டுமல்ல; அரசியல் ஞானமும் மிகப்படைத்தவர். அன்று மட்டும் தாகூர் நேரடியாக அரசியலில் ஈடுபட்டிருந்தால் தலைவர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கியிருக்க முடியும். ஆனால் அவர் தம்மை அறிந்த பெரியவர். ஆதலால் தமது கலைச்சோலையை விட்டுவிட்டு அரசியல் புயலில் அவதிப்படப் போகவில்லை. ஆனால் அவர் தந்த தார்மீக ஆதரவால் விடுதலைப்போர் வளம்பெற்றது; வெற்றியும் கண்டது.

ஏன், நமது மகாகவி பாரதியாரும் அப்படித்தான். வீரர்களை உற்பத்தி செய்த படை வீடாக விளங்கியது அவர் தம் பைந்தமிழ்க் கவிதை. கட்சியில் சேர்ந்து தலைவர்களுடன் தலைவராக அவர் அமர விரும்பியதில்லை. இப்படிக் கவிஞர்களில் மட்டுமல்ல - உலகறிந்த கலைஞர்களும் அப்படித்தான் தாமரையும் தடாகமும் போல் வாழ்ந்து வழிகாட்டியிருக்கிறார்கள்.

சார்லி சாப்ளின் சர்ச்சில் ஆக விரும்பியதில்லை. செர்க்கோஸோவ் ஸ்டாலினாக நினைத்ததில்லை. சாந்தாராம் சர்தார் பட்டேலாக விரும்பியதில்லை. அசோக்குமார் ஆளவந்தார் என்று எண்ணி தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டதில்லை. சின்னப்பா சத்தியமூர்த்தியானதில்லை. பாகவதர் பெரியாரானதில்லை. விசுவநாததாஸ் வைத்யநாதய்யர் ஆனதில்லை. அரியக்குடி ராஜாஜி ஆனதில்லை.

மீண்டும் கூறுகிறேன், கலைஞன் காலத்தின் சாட்சியாவான்; உண்மையின் உறுதிப் பொருள் ஆவான். அழகின் பிரதிநிதி, அமைதியின் தூதுவன், சாந்தியின் மாணவன், சமரசக் காவலன், உலகுக்கே உரியவன், பிறந்த நாட்டின் தவக்குழந்தை, உலகத்தின் செல்லக்குழந்தை, தன் உழைப்பால் அகிலப்புகழைத் தன் நாட்டுக்குத் தேடித் தரவேண்டிய அறிவின் தொண்டன்! இதுவே எல்லையில்லாத கலைக்கும் எல்லைக்குட்பட்ட கட்சி அரசியலுக்கும் உள்ள சம்பந்தம்.

மற்றுமொரு பேருண்மை. உலகில் உள்ள மக்கள் தொகையில் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர்தான். சேராத மனித குலந்தான் பெரும்பான்மையானது. அந்தப் பெரும்பான்மையான மனித குலத்தின் பிரதிநிதிதான் கலைஞன். அத்தகைய கலைஞன் கட்சிக்காரனாவது என்பது, கட்சித் தலைவர்கள் எங்களைப்போல் ராஜபார்ட் வேடம் போட்டு நடிப்பது போன்ற தமாஷாகிவிடும். அதாவது கலைஞன் கட்சிக்காரனாவது கவிஞர் கண்ணதாசன் குசேலர் வேடம் போடுவது போன்ற கேலிக்கூத்தாகிவிடும். நண்பர்களே! கட்சிகளைவிட நாடு பெரிது; நாட்டு நலம் பெரிது.



திருடர்களிடமிருந்தும் துஷ்ட மிருகங்களிடமிருந்தும் உங்களை காப்பாற்றிக் கொள்ளுங்கள். பிக்னிக், பிரயாணம், நாடகம் முதலியவற்றுக்கு உபயோகமானது. தன்னியக்க ஆறு வெடிகள். இலேசான நிறை. பெரும் சப்தமும் திகைக்க வைக்கும் நெருப்புப் பொறியும் உங்களை ஆபத்திலிருந்து காக்கும். விலை நெ. 777 — ரூ. 6/-. நெ. 888 — ரூ. 8/-. நெ. 999—ரூ. 13/. 25 தோட்டாக்கள் இலவசம். தனி 100 தோட்டாக்களுக்கு ரூ. 3/- தோல் உறை ரூ. 4/- தபால் செலவு ரூ. 2/- லைஸன்ஸ் தேவையில்லை. ஒரே பாக்கிங்கில் இரண்டு ரிவால்வர்களுக்கு ஆர்டர் கொடுத்தால் தபால் பாக்கிங் செலவு இனாம்.

Indian Chamber of Science

(p p p) JULLUNDUR CITY



இவர்கள் இருவரும் இப்போது இந்த உலகத்திலேயே இல்லை! சித்ராலயாவின் முதல் தயாரிப்பான 'தேன் நிலவு' படத்தில் வைஜயந்திமாலா-ஜெமினி கணேசன்.

நாட்டு நலன் பெருக வேண்டுமானால் நாம் பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும். நாடில்லையேல் நாமில்லை. அதன் பின் கலையுமில்லை கட்சியுமில்லை. ஆதலால் நாட்டையும் சுதந்திரத்தையும் காக்க நமக்குள்ள சர்வ சக்தியையும் பயன்படுத்தத் தயாராக இருக்க வேண்டும்.

இவ்வளவையும் கணேசன் பேசவில்லை நண்பர்களே! கணேசன் பேசவில்லை! கடந்தகால அனுபவங்கள், என் கண்ணீர்த்துளிகள் எனக்களித்த கசப்பான உண்மை. ஒரு காலத்தில் நானே ஒரு கட்சிக்காரன்தான். அதை நான் மறக்கவோ, மறைக்கவோ விரும்பவில்லை. ஆம்; அன்று அக்கட்சியில் ஒரு உண்மை இருந்தது. அதற்காக உண்மையாகவே உழைத்தேன். கலையுலகம் அழைத்தது. கட்சியைவிட்டு வந்தேன். உழைத்தேன். மதிப்பு உயர்ந்தது. எனது மதிப்பின் கவர்ச்சியால் எனது செல்வாக்கால் கட்சியின் சக்தி குறைந்துவிடக்கூடாதென்ற நல்ல எண்ணத்தால் கட்சியை விட்டு விலகினேன். அதற்காக நான் பட்ட துன்பங்கள் எவ்வளவு தெரியுமா? அது ஒரு வேதனை நாடகம். சோகக் காவியம். சோதனையின் முடிவையே கண்டு விட்டேன். சொல்லால் அடங்காது அது.

அது எவ்வளவு பெரிதென்று உங்களுக்குத் தெரியாது.

காரணம் தமிழ் மக்கள் தீமைகளை மறந்து விடும் நல்லவர்கள்.

ஆகையால் உங்களுக்கு நினைவிருக்காது. ஆனால் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. பச்சை மரமாகிய என் இதயத்தில் அவர்கள் அடித்து இறுக்கிய இரும்பு ஆணிகளை நான் எப்படி மறக்க முடியும்? அதனால் என் நெஞ்சில் உறைந்து விட்ட இரத்த முத்திரைகள் இன்னும் மறையவில்லை, தோழர்களே மறையவில்லை. கட்சி நலம் கருதி அவர்களை விட்டு வந்தமைக்கு நான் பெற்ற பரிசுகள் என்ன தெரியுமா? ஆ! அது மிகமிக அதிகம். இருப்பினும் சொல்லுகிறேன். உங்களிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லப் போகிறேன்? கேளுங்கள்!

பெருமை தேடித் தந்தேன்; பாவியே என்றார்கள்! வெற்றிக்கு உழைத்தேன்; விரோதியே என்றார்கள்! வாழ்த்திய என்னை விழ்த்தும் சதி செய்தனர். கடமை ஆற்றியவனை காலமாகி விட்டான் என்று சொல்லும் அளவுக்குக் கூட அவர்கள் கருணை மிகுந்து விட்டது! நான் அவர்களுக்குக் கொடுத்தது நட்பு என்ற அமுதம்; அவர்கள் எனக்குத் தந்தது விரோதம் என்ற விஷம்! வேதனை மிக்க கண்ணீர்! கருணையற்ற தாக்குதல்! கசை அடியிலும் கொடிய வசை மொழிகள்! பொறுமை காட்டினேன்; போஸ்டரைக் கிழித்தனர்! அலட்சியமா யிருந்தேன். அவதிப் படுத்தினர்! சிரித்தேன். சிரமங்கள் தந்தனர்! உண்மை பேசினேன்; உணரும் சக்தி யிழந்தனர்! நான் அவர்களுக்கு இதயத்தையே தந்திருந்தேன்; அந்த இதயத்தில் ரண சிகிச்சை கற்றுக் கொள்ள ஆசைப்பட்டனர்! வாழையடி வாழையாக வளர வேண்டிய கலை மரத்தை வேரோடு வெட்டிச் சாய்க்க முயற்சி செய்தனர். ஒரு ஏழைக்கலைஞனை ஒழிக்க, ஒரு கட்சி தன் சக்தி முழுவதையும் பயன்படுத்திய நாடகத்தை நாடே அறியும்.

ஏதோ என் தாய் செய்த தவம், தந்தை தந்த உரம், நண்பர்களின் அன்பு, ரசிகர்களின் ஆதரவு இவற்றால் இன்று உங்களிடம் பேசுகிறேன். ஆண்டவனே! எல்லோரையும் மன்னித்துவிடு; தமிழ்நாடு தழைத்து வாழ அருள் செய் என்று இறைஞ்சுகின்றேன். வணக்கம்.

[சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் கடந்த மாதம் நடைபெற்ற தமிழ் தேசியக் கட்சியின் முதல் மாநாட்டில் 'கட்சியும் கலையும்' என்ற தலைப்பில் 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் நீண்டதொரு சொற்பொழிவை ஆற்றினார். அவர் ஆற்றிய வுரையின் சாரம் இது! கட்சியும் கலையையும் பற்றி ஒரு நடிகர் பேசுகிறார் என்ற அடிப்படையில் இதை இங்கு வெளியிட்டிருக்கிறோம். - ஆர்.]

மின்சாரம் ரேடியோ அட்டவணை

200 படங்கள் கொண்ட இப் புத்தகத்தைக் கொண்டு 25 ரூபாயில் ஒரு ரேடியோவை வீட்டிலேயே செய்யலாம். ரேடியோ ரிப்பேரிங், மின்சாரம், ஒயரிங், மெக்கானிஸம் மற்றும் பல தொழிலைப்பற்றி அடங்கியுள்ளது. நீங்கள் ஒரு மெச்கானிக் ஆகலாம். விரிவான புதிய வெளியீடு. இரண்டு பாகங்கள் கொண்டது. ரூ. 7/- வி. பி. சார்ஜ் 1/50.

30 ரூபாய் புத்தகங்கள் 10 ரூபாய்

முத்தமிடும் கலை ரூ. 3/- கொக் சாஸ்திரம் ரூ. 3/- கட்டியணைத்தல் ரூ. 3/- காதல் கலை ரூ. 3/- இன்பத்தேன் நிலவு ரூ. 3/- ஸெக்ஸ் வாழ்க்கை ரூ. 3/- முதல் இரவு ரூ. 3/- கர்ப்பத் தடை ரூ. 3 அழகின் இரகசியம் ரூ. 3/- காதல் கதைகள் ரூ. 3/- பத்து புத்தகங்கள் கொண்ட ஸெட் ஒன்றுக்கு ரூ. 10/- வி. பி. சார்ஜ் ரூ. 1/50 தனி.

CAMBRIDGE BOOK DEPOT

P. B. 19, Jaiganj, Aligarh.

சுதர்சனம் பிக்சர்ஸ் தயாரிப்பான 'ஹல்லோ மிஸ்டர் ஜமீன்தார்' படத்தில் ஜெமினி கணேசன், எம். ஆர். ராதா, முத்தய்யா, இந்திராதேவி, மாதுரி முதலியோர் நடித்து வருகிறார்கள். கே. ஜே. மகாதேவன் படத்தை டைரக்ட் செய்து வருகிறார்.


அக்டோபர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
31	.	.	.	.	1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

இம்மாத
நட்சத்திரம்

ஈ. வி. சரோஜா

சமீபத்திலே திரையிடப்பட்டு வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் அரசு பிக்சர்ஸாரின் ''நல்லவன் வாழ்வான்'' படத்தில் இ. வி. சரோஜா சண்பகம் என்ற பாத்திரத்தில் நடித்திருக்கிருர்.

கதாநாயகன் முத்து, கூடப் பிறவாத தங்கையான சண்பகத்துக்கு வாழ்வளிக்கிருன். அவள் கணவன் ஒரு இன்ஸ்பெக்டர்.

கொலைத் தண்டனை பெற்றுச் சிறை தப்பிய முத்து, சாமியார் வேடத்திலிருக்கும்போது, அவனை ஆதரிக்கிருள் சண்பகம். கணவன் முத்துவை தேடுகிருன் சண்பகம் முத்துவை மறைக்கிருள். இதன் பலனுக கணவனுலேயே சந்தேகிக்கப்படுகிருள்.

முத்து நிரபராதி என்று அவள் உள்ளம் உறுதியாகக் கூறியது. ஆகவே கணவன் கட்டளையையும் மீறி முத்துவை மறைத்து வைக்கிருள். தான் ஒழுக்கமிழந்துவிட்டதாக நினைத்து, தன் கணவன் தற்கொலைக்கு முயலும்போது தான் அவளுக்கு எல்லாமே புரிகிறது தன் தவறுக்கு வருந்தி, தன்னை உணர்ந்து கொண்டு விட்ட கணவனின் கால்களில் விழுகிருள்.

இ. வி. சரோஜாவுக்கு இந்தப் பட நெடுகிலும் வேலையில்லை. ஆனுலும் அவர் தோன்றும் காட்சிகளில் அவர் நடிப்பு பாராட்டத் தக்கதாக இருக்கிறது. ஆடிப் பாடித் திரியும் சண்பகம் தன் காதல் ஒரு கானல் நீர் என்று எண்ணும்போது துடிதுடிக்கிருள். பின் மணமானதும் கணவனுக்கேற்ற உத்தம மனைவியாக வாழுகிருள். தனக்கு வாழ்வளித்தவன் நல்லவன் என்ற உறுதியோடு முத்துவை மறைத்துக் காக்கிருள். கணவன் தன்னை ஒழுக்கங்கெட்டவள் என்று இழிவாகக் கூறுவதை மட்டும் அவளால் தாங்கவே முடியவில்லை. துடிதுடித்துப் போகிருள் பேதை சண்பகம். கடைசியில் மகிழுகிருள்.

இ. வி. சரோஜாவின் நடிப்பு இந்தக் கட்டங்களில் சிறப்பாக இருந்தது. 'நடும்புத்திறன் மிக்க இளம் நாட்டிய நடிகை இதோ' என்று எடுத்துக் கூறுகிறது.

அவர் வசனம் பேசுவதைவிட, அவரது முக பாவம் எடுத்துச் சொல்வதே அதிகம். இது தான் ஒரு சிறந்த நடிகருக்கோ நடிகைக்கோ தேவையான அம்சமாகும். 'நல்லவன்வாழ்வான்' படத்தில் இ வி. சரோஜாவின் நடிப்பு. இந்த அம்சம் அவரிடம் பூரணமாக இருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

இயற்கைத் தன்மை வாய்ந்ததாக மட்டுமல்லாமல் நல்ல துடிப் போடும் அவரது நடிப்பு விளங்குவதைப் பல கட்டங்களில் இதில் பார்க்கிருேம்.

ஆடலில் மட்டுமல்லாமல் நடிப்புத் துறையிலும் வல்லவர் அவர் என்பதை, இந்தப் படமும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

ஆகவே இ. வி. சரோஜாவை இம்மாத நக்ஷத்திரம் எனத் தேர்ந்தெடுத்துப் பாராட்டுகிருேம்.

—சம்பத்

கோ. சந்தானம், கும்பகோணம்

சினிமாவிற்கு பாட்டு எழுதி பணக்காரர் ஆனவர்கள் யார்?

கண்ணதாசனும் மருதகாசியும் பாட்டு எழுதி, கார் வாங்கி, வீடு கட்டி, சொந்தப் படம் எடுக்கிறார்கள். கொத்தமங்கலம் சுப்பு வீடு வாங்கி யிருக்கிறார்; படம் பிடிக்கப் போகிறார்; பாபநாசம் சிவன் சொந்த வீட்டுக்காரராகி யிருக்கிறார்!

சினிமாவுலகில் சிறு தொகையை வாங்கிக் கொண்டு சிறப்பாக நடிக்கும் நடிகர் யார்?

சிறு தொகையை வாங்கிக் கொள்பவர்கள் 'பெருந் தொகை வாங்குபவர்கள் போல நடித்து விடுகிறார்களே! எப்படிக் கண்டு பிடிப்பது?

தாடி வைத்துக் கொண்டிருப்பவர்கள் எல்லாம் பெர்னாட் ஷாவா?

அல்ல; அவரையும்விட மேம்பட்டவர்கள் இருக்கிறார்கள்!

எஸ். வி. மோனே, திருவனந்தபுரம்

சினிமா உலகிலேயே (ஹிந்தி, தமிழ், கன்னடம்) விலை உயர்ந்த கார் யாரிடம் இருக்கிறது?

'இம்பாலா' என்ற காரை சிவாஜி வைத்திருக்கிறார்; அசோக்குமாரிடம் விலை உயர்ந்த ரோல்ஸ் ராய்ஸ் இருக்கிறது. கன்னட நடிகர்களில் இந்த அளவுக்கு யாரும் கார் வாங்கியதாகத் தெரியவில்லை.

லாபிர் ஏ. மஜீத, மாததளை, இலங்கை

நல்ல கருத்தும், நகைச்சுவையும் கலந்துள்ள கேள்விகளுக்கு மாதா மாதம் பரிசளிக்கப் போவதாக செய்தி பறந்து வந்திருக்கிறதே!...

நான் 'கேள்வி'ப்படவில்லையே!

'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்' என்று நினைப்பவர்கள் சினிமா கலைஞர்களா, அரசியல் வாதிகளா?

இருவருமேதான்! ஆனால் சினிமாக் கலைஞர்கள் மேடைக்கு மேடை இதைச் சொல்கிறார்கள்; அவர்கள் சொல்வதில்லை!

டி. வசந்தகுமார், சேலம்

பெர்லின் பட விழாவுக்கு தமிழ்ப் படம் அனுப்பப்பட்டுள்ளதா?

ஹிந்திக்காரர்கள் யாரும் தமிழ்ப் படம் தயாரிப்பதில்லையே!

சிவாஜி கணேசனுக்கு அமெரிக்க அரசாங்கம் அழைப்பிதழ் அனுப்பிய தகவல் உங்கள் காதுகளில் எட்டியதும் நீங்கள் நினைத்ததென்ன?

போனில் சிவாஜியைக் கூப்பிட்டுப் பாராட்ட வேண்டும் என்று நினைத்தேன்!

ஜெ. பி. ஆறுமுகம், பவானி ஜம்பை

நான் எல்லாக் கட்சிக்கும் ஆதரவு கொடுக்கிறேன். ஆனால் நிலையாக ஒரு கட்சியில் இருக்கலாம் என்று தோன்றுகிறது. எந்தக் கட்சியில் இருக்கலாம்?

கல்யாணமானவராக இருந்தால் மனைவியின் கட்சியில் இருந்து விடுங்கள். அதுதான் நிலைத்து நிற்கும்!

ச. ந. தர்மலிங்கம், சத்தியமங்கலம்

திரு. வாசன் அவர்களை தமிழ் நாடு மறந்து விடத்தான் வேண்டுமா?

'ஔவை'யின் பெயர் இருக்கும் வரை வாசனின் பெயரும் தமிழ்

நாட்டில் இருக்கும். ஆனால் அவர் தான் தற்சமயம் தமிழ் நாட்டை (படவுலகம்) மறந்து விட்டிருக்கிறார்.

வடக்கே வைஜயந்தி மாலாவின் மார்க்கெட் எப்படி யிருக்கிறது?

தெற்கே பத்மினிக்கு இருந்ததைப் போலிருக்கிறது.

பெரியார் அவர்களால் சினிமாவை ஒழிக்க முடியுமா?

முடியாது! மரணத்தை வென்று விட்ட தொழில்களில் சினிமாவும் ஒன்று.

வின்சென்ட் - ஜி. கே. ராமு இதில் எவருடைய காமிரா கவர்ச்சி யுடையது?

இருவரும் ஒரே மாதிரியான பழைய காமிராவைத்தானே உபயோகிக்கிறார்கள்!

பி. ஆர். பந்துலு இப்போது எப்படி யிருக்கிறார்?

ரொம்ப பிஸி! 'கப்பலோட்டிய தமிழன்' ரிலீஸ் நெருங்கி விட்டதே!

கிருஷ்ணன் - பஞ்சுவைப் பற்றி கொஞ்சம் கூறுங்கள்?

கிருஷ்ணன் ஒளி என்றால், பஞ்சு ஒலி. ஒளியும் ஒலியும் இணைந்தது தானே சினிமா?

உங்களுக்கு எப்போது கோபம் வரும்?

நேரத்தை வீணாக்க வருபவர்களைக் காணும் போது.

'ஸ்ரீவள்ளி' வெற்றிப் படமாக அமையாததற்கு காரணம் என்ன?

பின் தங்கிய ஆராய்ச்சி எதற்கு?

வி. பாலன், புதுவை

எம். ஜி. ஆர். தி. மு. க. வை விட்டு விலகி விட்டாரா?

கட்சியை விட்டு விலகுவதைப் பற்றி அவர் இன்னும் ஒரு முடிவுக்கும் வரவில்லை.

ரூ. 1000 ரொக்க இனாம்!

நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்

எல்லா விதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் மனம் சோர்ந்திருந்தாலும் சரி, இந்த மாயஜால மோதிரத்தை வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்தவுடனே நீங்கள் விரும்பிய நபர் ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும், அக்ஷணமே வசியமாய் விடுவார். இஷ்டப்பட்டவரை நீங்கள் மணப்பீர்கள். இதனால் மலட்டு ஸ்திரீகளுக்கும் புத்திர சந்தானம் உண்டாகும். இறந்தவர்களின் ஆத்மாவோடு பேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும். லாட்டரி, வியாபாரம், பந்தயம், சூதாட்டம், வழக்கு, பரீட்சை இவற்றில் வெற்றி பெறுவீர்கள். துஷ்ட கிரகம் சாந்தம் அடையும். ஜீவிய காலம் சுகமாகக் கழியும்.

மாந்திரீக மோதிரம் விலை ரூ. 1. 94. ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3. 00. ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ. 3. 94. மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாய மோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாய் மேற்கில் உதித்தாலும் இம் மோதிரத்தின் சக்தி தவறமாட்டாது. அப்படி பலன் இல்லையென்றால் இரட்டிப்புசார்ஜ வாபஸுக்கு காரண்டி. பலனில்லை என்று நிரூபிப்பவருக்கு ரூ. 1000 இனாம்!

Principal : SHINING MESMERISM HOUSE,
(PPM-3) JULLUNDUR CITY, (Pb.)

சு. பிருதிவிராஜ் சிங்,
ஜபல்பூர்

'கங்கை பாயும் நாட்டில்' ஹிந்திப் படத்தை பத்மினியின் கணவர் பார்த்திருந்தால்...?

பார்த்து விட்டு, 'என்னைக் கவர்ந்த படம்' என்று அபிப்பிராயமும் தந்திருக்கிறார் அவர்.

ஹிந்தி 'சசுரல்' படம் 'மங்கையர் திலகம்' படத்தின் தழுவலா?

அல்ல. 'இல்லரிகம்' என்ற தெலுங்குப் படத்தைத் தழுவியது.

முகம்மது எஹூசா,
பாண்டிச்சேரி

நடிகர் ஆனந்தன் எந்த மதத்தைச் சேர்ந்தவர்?

'எம்மதமும் சம்மதம்' என்கிறார் அவர்.

டி. எஸ். சுகவனம், சேலம்

சிவாஜி கணேசன் 'தமிழ்தேசிய கட்சி'யில் சேர்ந்துள்ளாராமே?

அல்ல. தமிழ் தேசிய கட்சியின் மகாநாட்டில் 'முத்தமிழ்' பற்றிய கருத்தரங்கில் பங்குகொண்டிருக்கிறார். அவ்வளவுதான். இதனால் சிவாஜி அக் கட்சியில் சேர்ந்துவிட்டார் என்றால், அதில் நாடகம் நடத்திய தங்கவேலுவையும், நடிகவேளையும் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

நடிகை வைஜயந்திமாலாவைப் பற்றி சில வரிகள் சொல்ல முடியுமா?

தமிழ்நாட்டுக்கு அவர் வந்தபோது பக்கவாட்டில் கூலிங் கிளாஸ் பதித்த காரை அவர் கொண்டு வந்தார். இன்று அதைப் பின்பற்றி பல நடிகைகள் அப்படி கூலிங்கிளாஸ் வைத்திருக்கிறார்கள்.

1962-ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1962-க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கல்யாணம், அதைப் பற்றிய பேச்சுக்கள், நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும் ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1.25. (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபால் செலவு தனி. இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

SHRI SWAMI SATNARAYAN RAJ JYOTISHI, (P. M.)
'Jullundur City (Punjab)

வெளிப்புறக் காட்சிகளில் கலந்து கொள்ளும்போது உபயோகிக்க வென்று 'ஏர் கண்டிஷன்' செய்த கார் - டிரெயிலர் - ஒன்றை வாங்கியிருக்கிறார் அவர். ஹிந்தி நடிகர் அசோக்குமாரி மிருந்து இதை அவர் வாங்கியிருக்கிறார். படப்பிடிப்புக்குப் போகும் போது வீட்டில் உள்ள ஆஞ்சநேயரை வணங்கி, பிரசாதம் பெற்றுக் கொள்ளாமல் அவர் கிளம்புவதில்லை. அதேபோல புதிய படங்களுக்கு ஒப்பந்தமாகும் போது, பூஜை செய்து விட்டுத்தான் கையெழுத்தும் போடுகிறார் அவர். விசிறிகளை அன்புடன் மதிக்கும் சுபாவம் உள்ளவர் அவர்.

வேணி - நவநீதா, சத்தியமங்கலம்

நடிகை விஜயகுமாரி ஏதோ ஒரு கட்சியில் சேர்ந்து விட்டதாகக் கேள்விப்பட்டேன். உண்மையா?

எஸ். எஸ். ஆர். கட்சியில் சேர்ந்து விட்டார்! எஸ். எஸ். ஆர். தி. மு. க-வில் சேர்ந்திருக்கிறார்.

விமர்சகன் எப்படி இருக்க வேண்டும்?

விஷயம் தெரிந்தவனாக மட்டும் இருந்து விட்டால் போதாது; நேர்மை உள்ளம் கொண்டவனாகவும் இருக்க வேண்டும்.

கதைக்காக நடிகர்களா, நடிகர்களுக்காக கதையா?

இப்போது தலைகீழ்ப்பாடம் தான்! நடிகரை வைத்துத்தான் கதையே எழுதப்படுகிறது!

'கர்ம வீரர்' காமராஜர் சினிமாவை ஆதரிப்பவரா?

நல்ல சினிமாக்களை!

ரூ. 1000 ரொக்க இனாம்!

நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்



எல்லா விதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் மனம் சோர்ந்திருந்தாலும் சரி, இந்த மாயாஜால மோதிரத்தை வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்தவுடனே நீங்கள் விரும்பிய நபர் ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும், அக்ஷணமே வசியமாய் விடுவார். இஷ்டப்பட்டவரை நீங்கள் மணப்பீர்கள். இதனால் மலட்டு ஸ்திரீகளுக்கும் புத்திர சந்தானம் உண்டாகும். இறந்தவர்களின் ஆத்மாவோடு பேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும். லாட்டரி, வியாபாரம், பந்தயம், சூதாட்டம், வழக்கு, பரீட்சை இவற்றில் வெற்றி பெறுவீர்கள். துஷ்ட கிரகம் சாந்தம் அடையும். ஜீவிய காலம் சுகமாகக் கழியும்.

மாந்திரீக மோதிரம் விலை ரூ. 1.94. ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3.00. ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ. 3.94. மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாய மோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாய் மேற்கில் உதித்தாலும் இம் மோதிரத்தின் சக்தி தவறமாட்டாது. அப்படி பலன் இல்லையென்றால் இரட்டிப்புசார்ஜ் வாபஸுக்கு காரண்டி. பலனில்லை என்று நிரூபிப்பவருக்கு ரூ. 1000 இனாம்!

Principal :- BENGAL MESMERISM HOUSE,
(P.P.M.) JULLUNDUR CITY, (PB)

'நடிகர் திலக'த்தின் அடுத்த நாடகம் எப்போது அரங்கேறும்?

டிசம்பர் மாதம், பம்பாயில் என்று சொன்னார் அவர்.

எம். ஆர். ராதா பழகுவதற்கு எப்படிப் பட்டவர்?

வாசகசாலையில் படிப்பது மாதிரி. அவரிடம் போய் பேசிக் கொண்டிருந்தால் பல விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம்!

பி. எம். சுலியார், குழிபிறை

எம். ஜி. ஆர். இன்று புகழுடன் விளங்குவது அரசியலில் புகுந்ததாலா, நடிப்பில் சிறந்ததாலா?

எம். ஜி. ஆர். தி. மு. க. வில் சேருவதற்கு முன்பாகவே புகழ் பெற்ற நடிகராகத்தான் இருந்தார். அவர் முதன் முதலில் கதாநாயகனாக நடித்து வெளி வந்த 'ராஜகுமாரி' படம் வெற்றிக்கொடி நாட்டி, பெரும் புகழை அவருக்கு கொடுத்தபோது தி. மு க. வில் இல்லையே அவர்! அரசியலினால் தான் எம். ஜி. ஆருக்குப் புகழ் என்பது கிடையாது. தி. மு. க. வுக்கு வேண்டுமானால் எம். ஜி. ஆரினால் அதிக நன்மை உண்டு என்று சொல்லலாம்.

அசு. அப்துல்ஹை,
அரகண்ட நல்லூர்

கற்பனை வரண்டால் ஏற்படும் நிலை என்ன?

அதுதான் பழைய கதைகளை புதிய பெயரில் தமிழ்ப் பட ளாகப் பார்த்து வருகிறோமே போதாதா?

சுறுசுறுப்பு என்பது என்ன?

வெற்றிப் பாதைக்கு ஏற்ற துணை அது.

சுலபம் என்பது என்ன?

பணம் இருந்தால் போதும், தமிழ்ப்படம் எடுத்து விடலாம் என்று சிலர் தப்பாக நினைக்கிறா களே அது!

எம். ராமனாதன், சேலம்

'சபாஷ் மாப்பிளே' படத்தில் ராஜகோபால் நான்கு நாளைக் வாடகைக்கு எடுக்கும் வீ நடிகை எம். என். ராஜத்தினுடையது என்று என் நண்பர் சொ கிறார், இல்லை என்கிறேன். நான் யார் சொல்வது சரி?

நீங்கள் சொல்வதுதான். பட திற்கென ஸ்டூடியோவில் உருவா கப்பட்ட வீடு அது.

என். ஆர். பாலசுப்பிரமணியன்
திருப்பூர்.

தமிழ் நாட்டில் துப்பறியு படங்கள் அதிகம் தயாரிக்க படுவதல்லையே, ஏன்?

'அந்த நாள்'தான் - அது இ னும் வரவில்லை என்று தயாரி பாளர்கள் நினைக்கிறார்கள்.

இரவில் தனியாக இருக்கும்போதுதான்
பார்த்துக்கொள்ள வேண்டிய

KASHMIRI SHASTRA
(Private)

கொக் சாஸ்திரம் (இரகசியமானது)

84 படங்களுடன்

விளம்பரத்தினால் சரிவரக் கூறமுடியாத
விஷயங்கள் அடங்கியுள்ளன.

படிக்கிறவர் நன்றாகவும் தெளிவாகவும் விஷயங்களைப் புரிந்து கொள்வார்கள். பலவிதமான 48 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம்தான் மிக நன்றாயிருக்கிறது எனக்கூறப்படுகிறது. விலை ரூ. 2·75. தபால் செலவு தனி.

BHARAT BOOK DEPOT, (P P M) Jullundur City, (PB.)

வருகிறது!
பாராளும் மன்னன் மகனுய் பிறந்து-
பணிமகன் குடிசையில் பதுங்கி வளர்ந்து
பகைவன் மகளின் காதலைக் கவர்ந்து
கந்தர்வ மாதையும், மாயாஜால மந்திரவாதியையும்
வெற்றி கண்ட!
ஷண்முகா பிலிம்ஸ்
அளிக்கும்
S.S.F.
விட்டல் புரொடக்ஷன்ஸ்...
வீரகுமார்
ராசன்
க்ஷன்: B.விட்டலாச்சார்யா வசனம்-பாடல்கள்: புரட்சிதாசன்
பரங்களுக்கு: சேலம் ஷண்முகா பிலிம்ஸ், குகை, சேலம்-1.

REGD. No. M 4523

பேசும்படம்

அக்டோபர் 1961 • 75 காசு